Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்


www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 104 • 06.08.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா
உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60
தீபம் எப்பொழும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## வடிவேலுவும் இலங்கை கிரிக்கெட்டும்



## சத்தமின்றி வந்துபோன பிரதமர்: கூட்டமைப்பை ஓரங்கட்ட முயற்சி?

### புலிகளிற்கு ஆயுதம் கொடுத்த நாயகன் பட ஹீரோ!



# எத்தனை காலம் தீக்குளிக்கப் போகிறார் சித்தார்த்தன்?

## பணத்தை திருப்பியனுப்பிய மாவட்ட செயலகம்: கோபக்காரரர் வீடு காரணமா?

### தோஷ பரிகாரங்கள்



விவாதம்

## எத்தனை அரசியல்வாதிகளின் பிள்ளைகள் நாட்டிலுள்ளனர்?



# Jaffna
*Rent a car*



வாருங்கள் தருகிறோம்
நீங்களே ஓட்டிச் செல்லலாம்

Point Pedro Road, Nallur, Kalviyankadu.
021 222 3339, 0777 484820

# Improve your English With in 99 days



புதிய பிரிவுகள் ஆரம்பம் Weekdays- 2017/8/9 or week ends - 2017/8/6

யாழ் மண்ணில் ஆங்கில கற்கை நெறி வழிகாட்டலில் கடந்த 7 வருடங்களுக்கு மேல் முன்னிலை.

ஒவ்வரு மாணவருக்கும் தனிப்பட கற்றல் ஒழுங்குகள்.

மாணவர்கள் நேர வசதிக்கு ஏற்ப வகுப்புகள் ஒழுங்கு செய்யப்படும்.

ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 8 -10 மாணவர் வரை மட்டுமே உள்வாங்கப்படுவர்.

மேலதிக விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு

077 13 63 389, 076 419 0327

**HOTLINE: 021 753 8395**

நல்லூர் கந்தன் வருடாந்த உற்சவம் சிறப்புற வாழ்த்துகிறார்கள்.

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.

# தீபம்

வார இதழ் விளம்பரத் தொடர்புகளுக்கு

## 076 825 5567, 077 152 1586





prop:
P.jeyatheepan
94 77 6541501

# Jeyasri Printers

021 221 9129, 077150 9001
34, Brown Road, Jaffna.
jeyarsriprinters 82@gmail.com



STUDIO THULASI

0094 77 230 2224 | Thulasi Studio | thulasistudio.com | Vigneswara Road,Nelliady



# Nathan
## key cutting center



அனைத்து வகையான திறப்புகளை 10 நிமிடத்தில் மிசின் மூலம் வெட்டி கொடுக்கப்படும்

இல 63, முட்டாஸ்கடைச் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி 0776175609



# TOPAZ

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna Tel 021 222 4743 Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road Jaffna Tel 021 222 4643 Email : topazagn@gmail.com | No 195, Power House Road Jaffna Tel 021 222 4933 021 221 9933 |

# ஒத்துழைப்பை தொடர்வோம்: ஜனாதிபதி பிரதமர் இரகசிய கலந்துரையாடலில் முடிவு!

## மஹிந்தவின் முடிவால் கூட்டு எதிரணிக்குள்ளும் குழப்பம்



தேசிய அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள இழுபறிகள் தொடர்பாக ஜனாதிபதியும், பிரதமரும் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்துள்ளது. இதன்போது, இரண்டு கட்சிகளிற்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை எப்படி தீர்த்து கொள்வதென்பது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் எதிர்காலம் பற்றிய சந்தேகங்கள் எழுந்துள்ளதுடன், கூட்டு எதிரணியின் குழப்பங்கள் தீவிரம் பெற்றுவரும் நிலையில், ஜனாதிபதியும் பிரதமரும் தனிப்பட்ட கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கம் எதிர்கொள்ளும் சவாலை ஒருங்கிணைந்து எதிர்கொள்வதென இரண்டுதலைவர்களும் முடிவெடுத்ததாக நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹஷீம் உள்ளிட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சர்கள் சுதந்திரக்கட்சியை கடந்தகாலங்களில் பகிரங்கமாக விமர்சித்திருந்ததை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா சுட்டிக்காட்டியுள்ளார். ஐதேகவின் கொலன்னாவ அமைப்பாளர் எஸ்.எம். மரிக்காரின் புதிய அலுவலகம் திறப்பு விழாவின்போது உரையாற்றிய ஐதேக பொதுச்செயலாளர், சுதந்திரக்கட்சியை கடுமையாக விமர்சித்திருந்தார். இந்த சமயத்தில் பங்களாதேஷில் இருந்த ஜனாதிபதி உடனடியாக ஐதேகவின் முக்கியஸ்தர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவை தொடர்புகொண்டு இது தொடர்பில் வினவியுமுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் அமைச்சர் டிலான் பெரேரா, ஐக்கிய தேசியக்கட்சியை தொடர்ந்தும் விமர்சித்து வருவதை பிரதமர் பதிலுக்கு சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்வரும் காலங்களில் இப்படியான நிலைமைகள் எற்படாதவாறு செயல்படுவதென இரண்டு தலைவர்களும் இணங்கியதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் வேலைநிறுத்தத்தின் ஊடாக அரசாங்கத்தை முடக்க திட்டமிடுவதும், அதன் முன்னோடியாக பல்வேறு துறைகளில் தொடர் வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவது குறித்தும் இங்குகலந்துரையாடப்பட்டது. வேலைநிறுத்தங்களின் போது மக்கள் பாதிப்படையாத விதத்தில் உறுதியாக செயற்படுவதென இரண்டு தலைவர்களும் இணக்கம் கண்டுள்ளனர்.

ஊழல்மோசடியாளர்களிற்குதண்டனை வழங்குவதென 2015 தேர்தலில்வழங்கப்பட்ட வாக்குறுதியை துரிதமாக நிறைவேற்ற ஒன்றிணைந்து செயற்படுவதென்றும் இரண்டு தலைவர்களும் முடிவெடுத்துள்ளதாக தெரிய வருகிறது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதா என்பதில் கூட்டு எதிர்க்கட்சிக்குள் குழப்பநிலை நீடிக்கிறது. மஹிந்த ராஜபக்ச நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்கவில்லையென தெரிகிறது. அண்மையில் கூட்டுஎதிரணியின் முக்கியஸ்தர்கள் கலந்துரையாடலிலும் மஹிந்த இதை வலியுறுத்தியுள்ளார். ரவி கருணாநயக்காவிற்கு எதிராக அல்லாமல் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்க வேண்டுமென்பதே மஹிந்தவின் நிலைப்பாடு. கடந்த வருடம் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக கூட்டு எதிரணியின் நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்பு சமயத்திலும் மஹிந்த ராஜபக்ச பாராளுமன்றத்தில் இருக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

# டெனிஸ்வரன் அவுட்!

## யாப்பு தெரியாமலா கட்சிக்குள் வந்தார் என்றும் காட்டம்!

வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் விரைவில் தமிழீழ விடுதலை இயக்கத்தில் (ரெலோ) இருந்து நீக்கப்படவுள்ளார். வரும் 12ம் திகதி வவுனியாவில்கூடும்உயர்மட்ட கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்படலாமென தெரிகிறது.

மாகாணசபை தேர்தலில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் போட்டியிட்டு உறுப்பினரான டெனிஸ்வரன், அமைச்சராகவும் பதவியேற்றுக் கொண்டார். அமைச்சராக பதவியேற்றுக்கொண்ட பின்னர் கட்சி கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை, கட்சி முடிவுகளை மதிப்பதில்லையென கட்சிக்குள் நீண்டகாலமாக குற்றம்சுமத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில், முதலமைச்சரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் டெனிஸ்வரன் கையெழுத்திட்டார்.

எனினும், முதலமைச்சரை ஆதரிப்பதென தமிழீழ விடுதலை கழகம் முடிவு செய்திருந்தது. கட்சியின் முடிவை மீறி டெனிஸ்வரன் கையெழுத்திட்டதையடுத்து, அவரிடம் விளக்கம் கேட்டு கட்சி கடிதம் அனுப்பியிருந்தது. அதில், கட்சியை விட்டு அவரை ஏன் நீக்கக்கூடாதென்பதற்கு விளக்கமளிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. ஆனால் டெனிஸ்வரன் இதற்கு பதிலளிக்கவில்லை. மாறாக, கட்சியின் யாப்பை தனக்கு தருமாறு கேட்டிருந்தார்.

இதனையடுத்து கட்சிக்குள் இது தொடர்பான ஆலோசனை நடந்தது. அவர் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினராக இணைந்து கொண்டவர், கட்சி விதிமுறையை அறியாமலா உறுப்பினராக இணைந்தார்? என்ற கேள்வி அங்கு எழுப்பப்பட்டுள்ளது. கட்சியின் அடிப்படை உறுப்பினர்களாக இணைபவர்கள் கட்சியின் யாப்பை அறிந்து கொண்டிருப்பார்கள் என்பதன் அடிப்படையில், டெனிஸ்வரனிற்கு யாப்பை வழங்குவதில்லையென கட்சி முடிவு செய்துள்ளது.

வரும் 12ம் திகதி வவுனியாவில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உயர்மட்ட குழு கூடி டெனிஸ்வரன் விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கவுள்ளது. அனேகமாக டெனிஸ்வரனை கட்சியை விட்டு நீக்கும் முடிவைத்தான் அன்றைய தினம் எடுப்போம் என கட்சியின் உயர்மட்ட தலைவர் ஒருவர் தீபத்திடம் தெரிவித்தார்.

டெனிஸ்வரனிற்கு பதிலாக விந்தன் கனகரட்ணத்தை அமைச்சராக நியமிக்குமாறு தமிழீழ விடுதலை இயக்கம் முதலமைச்சரிடம் பரிந்துரைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இளம் கண்டுபிடிப்பாளரை வீடு தேடிச்சென்று பாராட்டிய ஷிப்லி பாறுக்!

வாழைச்சேனையை சேர்ந்த இளம் கண்டுபிடிப்பாளர் எம்.எம். யூனூஸின் வீட்டிற்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறுக். கடந்த திங்கட்கிழமை யூனூஸின் இல்லத்திற்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சென்றிருந்தார்.

கோறளைப்பற்று மத்தி பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள அந்நூர் தேசிய பாடசாலையின் உயர்தர மாணவன் எம்.எம். யூனூஸ் அண்மையில் நெல் விதைக்கும், உரம் மற்றும் எண்ணெய் விசுறும் இயந்திரமொன்றை உருவாக்கியிருந்தார். வயல் வரப்புகளில் இருந்தபடி, இந்த இயந்திரத்தை தானியக்க கருவியூடாக இயக்கலாம். இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட இளம் கண்டுபிடிப்பாளர் போட்டியில் வெற்றிபெற்ற மாணவன் எம்.எம். யூனூஸ், இம்மாதம் தென்கொரியாவில் நடைபெறவுள்ள சர்வதேச கண்காட்சியில் தனது கண்டுபிடிப்பை காட்சிப்படுத்தும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஷிப்லி பாறுக் மாணவனின் வீட்டிற்கு சென்று, அவரை உற்சாகப்படுத்தியுள்ளார்.

# நிமலன் வெளியே; விக்கி உள்ளே


## தமிழரசுக்கட்சியின் புதிய நகர்வு: சலசலக்கிறது முதலமைச்சர் அணி!

தமிழரசுக்கட்சியுடன் இணக்கமாக செல்வதென வடக்கு முதல்வர் எடுத்துள்ள முடிவால் அவரது அணிக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. வடமாகாண சபையில் முதல்வரிற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வந்த பதினைந்து உறுப்பினர்களில் கணிசமானவர்கள் தமது அதிருப்தியை முதல்வரிடம் நேரிலும் தெரிவித்துள்ளனர். இந்த சலசலப்பால் வடமாகாணசபைக்குள் மூன்று அணிகள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

தமிழரசுக்கட்சி தலைமைக்கு எதிராக கடந்தசிலவருடங்களாகவே போர்க்கொடி தூக்கி வந்தார் முதல்வர். முதல்வரிற்கு எதிராக தமிழரசுக்கட்சியும் காய் நகர்த்த, மாகாணசபை இரண்டு பட்டிருந்தது. தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் ஒரு அணியாகவும், பங்காளி கட்சிகளின் உறுப்பினர்கள் ஒரு அணியாகவும் செயற்பட்டனர்.

இதேசமயத்தில், மாற்று தலைமை குறித்த உரையாடல்களும் இந்த காலப்பகுதியில் தீவிரம் பெற்றிருந்தன. முதலமைச்சர் மாற்று அணியை தலைமை தாங்க வேண்டுமென்றும் ஒரு தரப்பினர் வலியுறுத்தி வந்தனர். மாற்று தலைமையாக விக்னேஸ்வரன் குறிப்பிடப்படத் தொடங்கிய பின்னர் தமிழரசுக்கட்சி, விக்னேஸ்வரனிற்கிடையிலான மோதல் தீவிரம் பெற தொடங்கியது. இதன் உச்சக்கட்டமாக முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை ஆளுனரிடம் கையளிக்கப்பட்டது. இதன்போது முதல்வரிற்கு எதிராகவும், ஆதரவாகவும் தலா பதினைந்து உறுப்பினர்கள் கையெழுத்திட்டனர்.

இந்த முரண்பாட்டையடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலையிட்டு நிலைமையை சுமுகமாக்கினார். நீண்டகாலமாக சந்தித்து கொள்ளாத சம்பந்தன் விக்னேஸ்வரன் சந்தித்து பேசியுமிருந்தனர். இதனையடுத்து முதலமைச்சர் தமிழரசுக்கட்சியுடன் நெருங்கிச்செயற்பட ஆரம்பித்துள்ளார். முதலமைச்சரின் தனிப்பட்ட ஆலோசகர் நிமலன் கார்த்திகேயன்தான் அனைத்து சிக்கலிற்கும் காரணம் என தமிழரசுக் கட்சி தலைமை நினைக்கிறது. வடமாகாண சர்ச்சையையடுத்து, மாவை சேனாதிராசாவை சந்திப்பதற்கு மார்டின் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்திற்கு முதலமைச்சர் சென்றிருந்தார். அவருடன், நிமலன் கார்த்திகேயனும் சென்றிருந்தார். எனினும், "முதலமைச்சருடன் மட்டுமே நான் கதைப்பேன்" என மாவை சேனாதிராசா சொன்னதையடுத்து நிமலன் கார்த்திகேயன் அந்த இடத்திலிருந்து புறப்பட்டு சென்றுவிட்டார். அண்மையில் யாழ்நகர மத்தியில் பல்பொருள் அங்காடி அமைப்பது தொடர்பான கலந்துரையாடலின்போதும், நிமலன் கார்த்திகேயன் கதைத்ததை மாவை சேனாதிராசா ரசிக்கவில்லை. முதலமைச்சரின் ஆலோசகருடன் மோதல் போக்கை கடைப்பிடித்தாலும், முதலமைச்சருடன் நெருக்கத்தை பேண தமிழரசுக்கட்சியும் முயற்சிக்கிறது.



இந்த புதிய நிலைமையையடுத்து, முதலமைச்சரை ஆதரித்த அணிக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. முக்கிய முடிவுகள் எடுக்கும்போது தம்முடன் கலந்தோசிக்கிறார் இல்லை, தமது தொலைபேசி அழைப்புக்களிற்கு பதிலளிக்கிறார் இல்லை, நெருக்கடியான சூழலில் தோள்கொடுத்தவர்களை கைவிட்டு விட்டார் என்ற குற்றச்சாட்டை முதலமைச்சரின் அணியினர் முன்வைக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக பதவியேற்ற மாகாண அமைச்சர் ஒருவரின் ஊடாக தமது அதிருப்தியை முதலமைச்சரிற்கு தெரியப்படுத்தியுள்ளனர். ஒருவாரத்திற்கு மேலாகியும் முதலமைச்சரிடம் இருந்து உரிய பதில் கிடைக்காததால், இனி கண்ணைமூடிக்கொண்டு முதலமைச்சரை ஆதரிப்பதில்லையென அவர்கள் முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது.

# அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர் கல்வியில் முறைகேடு; விதிமுறைக்கு முரணாக நடக்கும் கற்பித்தல்!

### கண்மூடியிருக்கும் அதிகாரிகள்

அக்கரைப்பற்று ஸாஹிரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஐந்து பேர், அங்கு உள்ளபோதும், குறித்த ஆசிரியர்கள் எவரும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

ஆயினும், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் பொருட்டு ஆசியர்களுக்கு வழங்கும் மேலதிக படியினை இந்த ஆசிரியர்கள் ஐவரும் தொடர்ச்சியாகப் பெற்று வருவதாக அறிய முடிகிறது.

இந்த மோசடியான செயற்பாடு தொடர்பில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்திய போதிலும், இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல், பணிப்பாளர் அசமந்தமாக உள்ளார் எனவும் கூறப்படுகிறது.

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான கற்பித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில், அக்கரைப்பற்று ஸாஹிரா வித்தியாலயம், அட்டாளைச்சேனை டொக்டர் ஜலால்தீன் வித்தியாலயம் மற்றும் பொத்துவில் அல் கலாம் வித்தியாலயம் ஆகியவற்றில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் பொருட்டு, கல்விக் கல்லூரிகளில் விசேட டிப்ளோமா கல்வியை பூர்த்தி செய்தவர்கள், ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே, அக்கரைப்பற்று ஸாஹிரா வித்தியாலயத்திலுள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட, அதற்குரிய ஆசிரியர்கள், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதிலிருந்தும் விலகியுள்ளனர் என்று, பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பளத்துக்கு மேலதிகமாக விசேட கொடுப்பனவும் அரசினால் வழங்கப்படுகின்றது. மேலும் இவ் ஆசிரியர்களை பிற கற்பித்தல் நடவடிக்கைக்கு பயன்படுத்தும் நடவடிக்கையினையும் கல்வி அமைச்சு முற்றாக தடைசெய்துள்ளது.

இவ்வாறான நிலையில், அக்கரைப்பற்று ஸாஹிரா வித்தியாலத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்குகற்பிக்கநியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் அங்குள்ள சாதராண மாணவர்களுக்கு கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அதேவேளை, விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் பொருட்டு தொண்டர் அடிப்படையில் சிலர் பணிகமர்தப்பட்டுள்ளனர். இந்த செயற்பாடானது கற்பித்தல் நடைமுறைக்கு முரணானதாகும்.

மேலும், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் பொருட்டு, தொண்டர் அடிப்படையில் இணைக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பவினை வழங்குவதற்காக, விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோரிடமிருந்து பணம் அறிவீடு செய்யப்படுகிறது.

அக்கரைப்பற்று ஸாஹிரா வித்தியாலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பில் நடைபெறும் இந்த மோசடியான செயற்பாடுகள் குறித்து அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப்பட்ட போதிலும், இது தொடர்பில் அவர் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அசமந்தமாக இருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

# சத்தமில்லாமல் வந்து போன பிரதமர்; திட்டமிட்டு ஓரங்கட்டப்படுகிறார்களா கூட்டமைப்பினர்?

### நல்லிணக்கம் சொல்லில் மட்டுமா என்கிறார் வியாழேந்திரன்

கடந்த வாரம் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்களிற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைக்கவில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தமிழர் பிரதேசத்தில் நடந்த நிகழ்வுகளிற்கும் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் அழைக்கப்படாமல் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளதாக பரவலான விமர்சனம் எழுந்துள்ளது.

மட்டக்களப்பிற்கு விஜயம் செய்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அபிவிருத்தி தொடர்பான கலந்துரையடல் ஒன்றில் கலந்து கொண்டார். கிழக்கு மாகாண முதலமைச்சர், ஆளுனர், மட்டக்களப்பு அரசஅதிபர் மற்றும் அதிகாரிகள் மட்டுமே இதில் கலந்து கொண்டிருந்தனர். இதுபற்றிய எந்த அறிவித்தலும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதேபோல, வெல்லாவெளி பொலிஸ் நிலையம் திறப்பில் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர கலந்து கொண்டிருந்தார். இந்த நிகழ்விலும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. அமைச்சர் மனோ கணேசன் தனது முகப்புத்தகத்தில் இதனை சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தநிலையில் கடந்த புதன் கிழமை (02.08.2017) ஏறாவூர் சவுக்கடி ஜெசெப்வாஸ் பாடசாலை பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சா.வியாழேந்திரன் உரையாற்றியபோது, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அழைக்கப்படாததை கண்டித்துள்ளார்.

அங்கு அவர் உரையாற்றும் போது "இந்த மாவட்டத்திற்கு ஒரு அமைச்சர் வருகிறார் என்றாலே அவருடைய செயலாளர் தொடர்பு கொண்டு, நிகழ்வுகளிற்கான அழைப்பு விடுப்பார். ஆனால் பிரதமர் மட்டக்களப்பிற்கு வந்தபோது எந்தவிதமான அறிவித்தலும் எங்களுக்கு வரவில்லை.

அபிவிருத்தி சம்பந்தமாக அரச அதிகாரிகளையும், முதலமைச்சரையும், ஆளுனரையும் அழைத்து வந்து பேசியிருக்கிறார். ஆனால் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளை அழைக்கவில்லை. இப்படியான செயற்பாட்டை வேதனையுடன் நோக்குகிறோம். மக்களிடம் இருந்து தமிழ்தேசிய கூட்டமைப்பை உடைப்பதற்கான முயற்சிகளாகத்தான் இவற்றையெல்லாம் செய்கிறார்களோ என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது. முதலமைச்சர் கூட தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுக்கவில்லை. நல்லாட்சியை சேர்ந்தவர்கள் தங்களின் இன, மத நல்லிணக்கத்தை, சகோதரத்துவத்தை பேச்சளவில் மட்டும்தான் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பினராகிய நாம் இன,மத நல்லிணக்கத்தை பேச்சளவில் மட்டுமல்ல செயற்பாட்டிலும் காட்டியிருக்கிறோம்" என்றார்.

# கிழக்கு உள்ளூராட்சிசபைகள் அபிவிருத்தியில் தமிழ் பிரதேசங்கள் திட்டமிட்ட புறக்கணிப்பு: ஆதாரங்களை அடுக்குகிறார் இரா.துரைரெட்ணம்!

கிழக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டு கொள்கைக்கு மாறாக மத்திய அரசு நிதியை பகிர்வதாக குற்றம்சாட்டியுள்ளார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம். ரவூப் ஹக்கீம், பைசல் காசிம் போன்ற மத்திய அமைச்சர்களின் அண்மைக்கால நிதி ஒதுக்கீட்டில் தமிழ் பகுதிகள் முற்றாக ஓரவஞ்சனைக்குட்படுவதாகவும், மத்திய அரசின் நிதிப்பகிர்வு முறையாக நடக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார். அவரது அலுவலகத்தில் தீபம் செய்தியாளரை சந்தித்த போது இதனை தெரிவித்துள்ளார்.



கிழக்குமாகாண கல்வி நடவடிக்கைகளில் 95 வீதமானவற்றை மாகாண கல்வியமைச்சு நிர்வகிக்கிறது. 5 வீதத்தையே மத்திய அரசு நிர்வகிக்கிறது. ஆனால் நிதி ஒதுக்கீட்டில் 5 வீதத்தை மாகாணசபைக்கு ஒதுக்கிவிட்டு, 95 வீத நிதியை மத்திய அரசு செலவிடுகிறது. தமக்கு தேவையான இனம், பிரதேசம் என்ற அடிப்படையிலேயே அதை செலவிடுகிறார்கள் என்றும் குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் "கிழக்கு மாகாணத்தில் நிதி ஒதுக்கீடு, நியமனம் வழங்கலில் கொள்கை பிரகடனம் ஒன்றுள்ளது. வறுமை, காணிப்பரப்பளவு, இனவிகிதாசாரம் என்ற மூன்றையும் அடிப்படையாக கொண்டது அது. இதன் பிரகாரம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை என்ற ஒழுங்குவரிசையில் நடைபெற வேண்டும். கிழக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டு கொள்கை, ஏன் மத்திய அரசால் கடைப்பிடிக்கப்படுவதில்லை? இதை கவனத்தில் எடுக்காமல் அமைச்சரவை நிதி ஒதுக்கினால், ஆளுனர், பிரதம செயலகம், திட்டமிடல் பிரிவு ஏன் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை? பதினைந்து வருடங்களாக இதுதான் நடக்கிறது.

நிதி ஒதுக்கீட்டில் சம்மந்தப்பட்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதியமைச்சர் பைசல் காசிம் இருவருமே முஸ்லிம்கள் என்பதால் இப்படியான புறக்கணிப்புக்கள் நடக்கிறதா என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

201617 இல் நகர திட்டமிடல், குடிநீர் வழங்கல் அபிவிருத்தி அமைச்சினால் கிழக்கு மாகாணசபையின் மூன்று மாவட்ட உள்ளூராட்சி திணைக்களங்களிற்கு நிதி ஒதுக்கப்பட்டது. மட்டக்களப்பிற்கு 18 கோடி 58 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதில் காத்தான்குடி நகரசபைக்கு 1 கோடி 72 இலட்சம் ரூபா, ஆரையம்பதி பிரதேசசபைக்கு 1 கோடி 62 இலட்சம் ரூபா, ஏறாவூர் நகரசபைக்கு 10 கோடி 15 இலட்சம் ரூபா, வாழைச்சேனை பிரதேசசபைக்கு 1 கோடி 45 இலட்சம் ரூபா, ஓட்டமாவடி பிரதேசபைக்கு 3 கோடி 59 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்திற்கு 34 கோடி 18 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. அட்டாளைச்சேனை பிரதேசபைக்கு 7 கோடி ரூபா, கல்முனை நகரசபைக்கு 13 கோடி ரூபா, சம்மாந்துறை பிரதேசபை 4.5 கோடி, இறக்காமம் பிரதேசசபைக்கு 4 கோடி ரூபா, தமன பிரதேசசபை 30 இலட்சம், பொத்துவில் பிரதேசசபைக்கு 5 கோடி ரூபா ஒதுக்கீடு செய்ய திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. உள்ளூராட்சிசபைகளை அபிவிருத்தி செய்யும் இந்த திட்டத்தில் தமிழ் பிரதேசங்கள் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுள்ளன.

ஆரையம்பதி பிரதேசபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் அது தமிழ் கிராமத்திற்கு அல்ல. கிழக்கில் தமிழர்கள் 40 வீதமும், முஸ்லிம்கம் 37 வீதமும், சிங்களவர்கள் 23 வீதமும் உள்ளதை மத்திய அரசு மறக்ககூடாது.

கடந்த வருடம் மத்திய சுகாதார அமைச்சினால் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகளிற்கு 648 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டததிற்கு 456 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் மூதூர் வைத்திய சாலைக்கு 176 கோடி ரூபாவும், புல்மோட்டை வைத்தியசாலைக்கு 60 கோடி ரூபாவும், கிண்ணியா வைத்தியசாலைக்கு 220 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 14 கோடி ரூபாவும் (ஏறாவூர் வைத்தியசாலை), அம்பாறைக்கு 178 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டது. இதில் நிந்தவூர் வைத்திய சாலைக்கு 85 கோடி ரூபாவும், பொத்துவில் வைத்தியசாலைக்கு 46 கோடி ரூபாவும், ஒரேயொரு தமிழ் வைத்திய சாலையான திருக்கோவிலுக்கு 44 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டது. மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிற்கு எந்தவொரு விசேட நிதியும் ஒதுக்கப்படவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட படுவான்கரை பகுதிகளுக்கு எந்தவித விசேட நிதியும் ஒதுக்கவில்லை. இது திட்டமிட்ட புறக்கணிப்பு" என்றார்.

# கார்ல் மார்க்ஸ் காறித்துப்புவார்!

காலையில் கண்முழிக்கவே பயமாக இருக்கிறது. நாட்டில் எந்த துறையினராவது இன்று வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகிறார்களா என்பதைதான் முதலில் உறுதிசெய்துகொள்ள வேண்டியுள்ளது. எப்பொழுதும் வேலைநிறுத்தம், எதற்கும் வேலைநிறுத்தம் என அண்மைக்காலமாக மேலெழுந்து வரும் போக்கு ஆபத்தான கட்டமொன்றை எட்டியுள்ளது. மக்கள் இயல்பு வாழ்வை வாழ முடியாத ஒரு போர்க்கால நெருக்கடி இந்த வேலைநிறுத்தங்களால் ஏற்பட தொடங்கியுள்ளது.

வைத்திய சேவை, எரிபொருள் சேவை, போக்குவரத்து சேவை போன்றவைற்றை சேர்ந்தவர்களின் அண்மைக்கால பொறுப்பற்ற தனமான நடவடிக்கைகளால் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்கள் கொஞ்சநஞ்சமல்ல.

இந்த அளவிற்கு மிஞ்சிய போராட்டங்களிற்கு வயது, கடந்த இரண்டரை வருடங்கள்தான். அதாவது, மகிந்த ராஜபக்ச வீட்டுக்கு சென்ற பின் தொடங்கியவை. இன்னும் தெளிவாக சொன்னால், இந்த அரசாங்கத்தை கவிழ்க்கஞ் அரசாங்கம் பற்றிய எதிர்ப்புணர்வை மக்களிடம் தோற்றுவிக்க மகிந்த அணி களத்தில் இறங்கிய பின்னர் ஆரம்பித்தவை. அதனால்தான், இந்த ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களின் பின்னால் அரசியல் நோக்கங்கள் இருக்கலாமென்ற வலுவான சந்தேகம் உள்ளது.

தற்போது தலைதூக்கியுள்ள போராட்ட கலாசாரத்திற்கும் தொழிலாளர் உரிமை, மக்கள் நலனிற்கும் முடிச்சுப்போட்டு சில தத்துவ விளக்கங்களை தரவும் சிலர் முயற்சிக்கின்றனர். இது உண்மையில் வேடிக்கையானது. எந்தக்காலத்திலும் இந்த போராட்டங்களையும் தொழிலாளர் உரிமைகளையும் முடிச்சுப்போடவே முடியாது.

உதாரணமாக, வைத்தியர்களின் போராட்டத்தை எடுத்துக்கொள்ளலாம். சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்களாம். சைட்டம் இயங்கத் தொடங்கியது மகிந்த ராஜபக்சவின் காலத்தில். இந்தகல்லூரியில் படித்தவர்கள் தொழில் இணையும் தறுவாயில் எதிர்ப்பு தெரிவிப்பது பொருத்தமானதாஞ் அல்லது, மருத்துவ கல்லூரி ஆரம்பிக்கும் போது எதிர்ப்பு தெரிவிப்பது பொருத்தமானதா?

இலவசக்கல்வியை இல்லாமல் செய்ய வேண்டாம், மக்களின் சுகாதார உரிமையுடன் விளையாட வேண்டாம் என மருத்துவர்கள் கோசங்களை முன்வைக்கிறார்கள். ஆனால், இலவச மருத்துவசேவைக்குள் மருந்துவ மாபியாக்களும், மருந்து நிறுவனங்களும் புகுந்து, தரமான, துரித மருத்துவசேவையென்பது பணக்காரர்களிற்கு மட்டுமானது என்று மாறியதை இவர்கள் அறியவில்லையா? இலவச மருத்துவத்திற்கு அச்சுறுத்தலாக கோர்ப்பரேட் நிறுவன மருத்துவத்துவற்கு ஆதரவாக இந்த வைத்தியர்களில் பெரும்பாலானவர்களே நடந்து கொள்வதை அவர்கள் அறியவில்லையா? உண்மையில் சைட்டத்திற்கு எதிராக போராடுபவர்கள் முதலில் இன்றைய இலவச மருத்துவமுறைக்குள் நுழைந்துள்ள கோப்பரேட் நிறுவனமுறைக்கு எதிராக போராட வேண்டும். அந்த முறையை வளர்ப்பதில் இருந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும். அப்படி செய்யாமல் சைட்டத்திற்கு எதிராக மட்டும் போராடுவது, வெறுமனே தொழிற்போட்டியாளர்களிற்கு எதிரான போராட்டமாக மட்டுமே பார்க்கலாம்.

இதேபோலவே எல்லா துறைகளிலும் விசித்திர காரணங்களிற்காக போராடுகிறார்கள். ஏதாவது ஒரு தொழிற்சாலையை இந்தியா, அமெரிக்காவிற்கு எதிராக கொடுத்தால் இன்றைய சோ கோல்ட் இடதுசாரிகள் கொதிக்கிறார்கள். அதுவே, சீனாவிற்கு கொடுத்தால், தொழிலாளர் உரிமை பேணப்படுவதாக பூரிக்கிறார்கள். வாசுதேவ நாணயக்கார தொடங்கி உள்ளூரிலுள்ளவர்கள் வரை இப்படியான இடதுசாரிகள்தான் நம்மத்தியில் உள்ளனர்.

தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவும், உரிமைகளை பாதுகாக்கவும் தொழிலாளர்களிற்கு உரித்துண்டு. இந்த உரித்து நிலைநாட்டப்பட்டதே மனித நாகரீகத்தின் ஒரு படிமுறை வளர்ச்சிதான். தொழிலாளர் உரிமைக்காக முதலாம் அகிலத்தை கார்ல் மார்க்ஸ் நிறுவ, "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என அறைகூவல் விடுத்தார் ஏங்கெல்ஸ். இதுதான் தொழிலாளர் புரட்சியின் விதை. இதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்ட தொழிலாளர் உரிமைகளையும் இன்றைய பணிப்பகிஸ்கரிப்புக்களையும் முடிச்சுப்போட முடியாது. இன்றைய பணிப்பகிஸ்கரிப்புக்களில் கணிசமானவை முதலாளித்துவ சிந்தனையுடையவை. உதாரணமாக வைத்தியர்கள் போராட்டம். இன்றைய கோர்ப்பரேட் மருத்துவமுறையே ஆகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்க, அதிக மருத்துவர்களின் வரவு குறைந்த பணத்தில் மருத்துவத்தை பெறலாம் என்ற எளிய விதியினடிப்படையில் சிந்திக்கத்தான் பொதுமக்களை தூண்டும். ஆக வைத்தியர்கள் முதலில் செய்ய வேண்டியது என்ன?

இன்று நடத்தப்படும் எல்லா போராட்டங்கிற்குமான காரணங்களும் மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் இருந்தவைதான். ஆனால், நேற்றுத்தான் இந்த பிரச்சனைகள் உருவானதைபோல இவர்கள் போராட்டம் நடத்துவதே, இது அரசியல் பின்னணிகளையுடையது என்று சிந்திக்க வைக்கிறது. சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புணர்வு நூதனமான முறையில் தூண்டப்பட்டே தன்னுடைய ஆட்சி வீழ்த்தப்பட்டதாக மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார். அதுபோன்ற ஒரு முறை இப்போது எதிர்தரப்பால் பிரயோகிக்கப்பட்டவில்லையென்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

அரசியல்நோக்கங் களிற்க ாக பொதுமக்களின் அன்றாட வாழ்வை சீர்குலைக்கும் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது. தொழிற்சங்க உரிமைகள் நாட்டிலுள்ள மக்களின் வாழ்வை சீர்குலைப்பதாக இருக்க முடியாது. அனைத்து துறையினரையும் உள்ளடக்கிய "மக்களின்" அன்றாட வாழ்க்கை சுமுகமாக இடம்பெறும் விதமான நிர்வாகத்தை ஏற்படுத்துவது அரசின் பொறுப்பும், கடமையும். திடீரென தீவிரமடைந்துள்ள இந்தவகையான போராட்டங்களை உரியவிதத்தில் கையாண்டு, மக்களின் அன்றாட வாழ்க்கை சீர்குலைவதை தடுத்து நிறுத்த வேண்டியது அரசின் கடமை.

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560, 0768255567
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com



# ஏன் இந்திய-இலங்கை ஒப்பந்தம் இன்றும் முக்கியமானதாகிறது?

எம்.ஏ. சுமந்திரன்

இந்திய - இலங்கை உடன்பாடு தன்னிகரில்லாதது இறையாண்மை மிக்க இரண்டு நாடுகள் பரஸ்பரம் செய்துகொண்ட சர்வதேச உடன்பாடு இது. தமிழின மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உள்நாட்டு அரசியல் அமைப்பு திருத்தியமைக்கப்படும் என்று ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு உறுதிமொழி அளித்த உடன்பாடு. இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பெரிய லட்சியமாக மக்களிடையே பேசிப் பிரபலப்படுத்திய அதிபர் ஜெயவர்தன, உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கப் பக்கத்து நாட்டுக்கு வாக்குறுதி அளித்து உடன்படிக்கை செய்துகொண்டது, பிறகு அதை அமுல்படுத்த இந்திய ராணுவத்தை இலங்கைக்கு வரவழைத்தது போன்றவை நகைமுரணாக அமைந்துவிட்டது. இந்த உறுதிமொழியின் பேரில் இலங்கை அரசியல் சட்டம் திருத்தப்பட்டது, மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன, தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்த வடக்கும் கிழக்கும் ஒரே பகுதியாக தற்காலிகமாக இணைக்கப்பட்டன. இந்த ஏற்பாடு சுமார் இருபதாண்டுகள் நீடித்தன.

இந்த அதிகாரப்பகிர்வு ஏற்பாடு குறித்து தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி (டியுஎல்எஃப்) அதிருப்தி தெரிவித்தது. ஜெயவர்தனவுக்கு அடுத்து பதவிக்கு வந்த ரணசிங்க பிரேமதாச, விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசத் தொடங்கியதை அடுத்து இந்தியாவுடனான பரிமாற்றங்களை முறித்துக்கொண்டார். அந்த உடன்பாட்டின் பலன் கிடைப்பதில் இந்தியா ஆற்றக்கூடிய பங்குக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு இலங்கை அரசின் அறிக்கை, பேட்டி அல்லது வெளியீடுகளில் இந்தியாவுடன் செய்துகொண்ட உடன்பாட்டைக் குறிப்பிடுவதுகூட நின்றுவிட்டது. ஆனால், தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்று வரும்போதெல்லாம் அந்த உடன்பாட்டில் இடம்பெற்ற பிரிவுகள்தான் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 2006ல் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இலங்கை உச்ச நீதிமன்றம் பிரித்தபோது, இந்தியாவுடனான உடன்பாட்டை இலங்கை மீறுகிறதா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இப்போதும் அது விடையில்லா வினாவாகத் தொடர்கிறது. ஆனால், இலங்கையோ தொடர்ந்து, 'திருப்தியளிக்கும் வகையில் அதிகாரங்கள் பகிர்ந்துகொள்ளப்படும்' என்று உறுதியளித்துவருகிறது. அதிபர் மகிந்த ராஜபக்ச அரசின்போது வெளியான மூன்று கூட்டறிக்கைகளிலும் அதிகாரப்பரவலை அர்த்தமுள்ளதாக்க 13வது சட்டத் திருத்தம் அமுல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் இந்த ஒப்பந்தப்படிதான் தீர்வு என்று உதட்டளவில் இலங்கை தொடர்ந்து பேசிவருகிறது.

## புதிய அரசியல் சட்டம்

இந்திய - இலங்கை உடன்பாட்டை அமுல்படுத்தியிருந்தால் பெருமளவுக்கு உயிரிழப்புகள் நேர்ந்திருக்காது என்று ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கூறினார். புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு புதிய அரசியல் சட்டசபையை உருவாக்குவதற்கான தீர்மானத்தின் மீது 2016 ஜனவரி 9ல் பேசுகையில் இந்தக் கருத்தை அவர் தெரிவித்தார். அவர் குறிப்பிட்ட இன்னும் இரு உடன்படிக்கைகள் 1957ல் எஸ்டபிள்யுஆர்டி பண்டாரநாயக்க எஸ்ஜேவி செல்வநாயகம் இடையிலான ஒப்பந்தம், 1965ல் டட்லி சேனநாயக செல்வநாயகம் இடையிலான ஒப்பந்தம் ஆகியவை. சிறிசேன அப்படிப் பேசி ஒன்றரை ஆண்டுகள் ஆன பிறகும் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட 'முன்னுரிமைப் பணிகள் பட்டியல் தயாரிப்புக் குழு' இடைக்கால அறிக்கையைக் கூட தாக்கல் செய்யவில்லை. ஆனால் ஆறு துணைக் குழுக்கள் தங்களுடைய அறிக்கையை 2016 டிசம்பரில் அளித்துவிட்டன. வரைவு இடைக்கால அறிக்கை தயாராகியிருந்தாலும் வெவ்வேறு அரசியல் தலைவர்களின் நோக்கங்களுக்கேற்ப தாக்கல் செய்யப்படாமலேயே இருக்கிறது.

1983 ஜூலையில் தமிழர்களுக்கு எதிராக நடந்த இனப் படுகொலையால் ஏற்பட்ட பெரிய அவமானத்திலிருந்து இலங்கை அரசு தப்பிக்க இந்தியஇலங்கை உடன்பாடு ஒரு வாய்ப்பைத் தந்தது. அந்த உடன்பாட்டை அமுல்படுத்த வேண்டும் என்ற உள்ளார்ந்த எண்ணம் அடுத்தடுத்து வந்த இலங்கை அரசுகளுக்கு இல்லை. 13வது திருத்தம் மூலம் தமிழர்களுக்குக் கிடைத்த அரைகுறை உரிமைகளைக்கூட சேதப்படுத்தும் முயற்சிகள் இலங்கை அரசுகளால் மேற்கொள்ளப்பட்டன. போர்க்குற்ற நடவடிக்கைகளுக்காக உலக அளவில் கண்டிக்கப்படும் நிலையிலிருந்து தப்பிக்க சிறிசேனரணில் விக்கிரமசிங்க அரசு தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளிலும் இறங்கியிருக்கிறது. அதில் ஒன்றுதான் உள்நாட்டு அளவில் கருத்தொற்றுமை அடிப்படையில் தீர்வு காண்பது. அப்படி காணப்படும் கருத்தொற்றுமைகூட இந்திய-இலங்கை உடன்பாட்டின் அடிப்படையில் அமைந்தால் தான் வெற்றிகரமாக அமையும். இந்த முயற்சிகளில் இந்திய அரசின் ஒத்துழைப்பும் வெற்றிக்கு மிகமிக அவசியம்.

நன்றி, த இந்து

# என்ன செய்தார்கள் நமது பிரதிநிதிகள்?

## வடமாகாணசபை உறுப்பினர்களின் ஸ்கான் ரிப்போர்ட் - 6

இந்தவாரம்
**ஞா.குணசீலன்**
மன்னார் மாவட்டம்

தீபம் குழு



**2015** ஜனாதிபதி தேர்தல் சமயம். மகிந்த ராஜபக்ச மீது ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வெறுப்பில் இருந்தார்கள். மகிந்தவிற்குபின்னான காலம் எப்படியிருக்கமென்றெல்லாம் மக்கள் ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. அவரை வீட்டுக்கனுப்ப வேண்டுமென்பதுதான் மக்களின் ஒரே குறியாக இருந்தது. அந்த சமயத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு யாருக்கு ஆதரவளிப்பதென்ற முடிவை அறிவிப்பதில் கொஞ்சம் இழுபறிப்பட்டது. ஆனால், கட்சிகள் எடுக்கும் முடிவிற்கு மக்கள் கட்டுப்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாத காலம் அது. இந்த சமயத்தில், தேர்தலில் யாரையும் ஆதரிக்க வேண்டாம் என கூட்டமைப்பிற்குள் இருந்தே ஒரு அதிர்ச்சிக்குரல் ஒலித்தது. அது மன்னாரை சேர்ந்த வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஞானசீலன் குணசீலன்.

மன்னார் மாவட்டத்தின் மீன்பிடி கிராமமான விடத்தல்தீவில் இருந்து வைத்திய கலாநிதியானவர் குணசீலன். தற்போது மன்னார் தோட்டவெளியில் குடியிருக்கிறார். மன்னாரில் வைத்தியராக பணியாற்றிக் கொண்டிருந்தவர், 2013 வடமாகாணசபை தேர்தலுடன் அரசியலுக்கு வந்தார். இப்போது சொந்தமாக கிளினிக் ஒன்றையும் நடத்திக் கொண்டிருக்கிறார்.

தேர்தலில் போட்டியிட விரும்புபவர்கள் ஏதாவதொரு கட்சித் தலைமையை அணுகி, அந்த கட்சியின் சார்பில் களமிறங்குவதுதான் அண்மைக்கால தமிழ் தேசிய அரசியல். அவர்கள் கட்சி செயற்பாட்டாளர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. உள்ளூரில் பிரபலமானவர்களாக இருந்தால் போதும். இப்படியான வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னரும் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை. இப்படி நம்பி அதிகமாக கையை சுட்டுக்கொண்ட கட்சி ஈ.பி.ஆர்.எல்.எவ். அடுத்தது ரெலோ. தேர்தலில் வென்றதும் ஆசனம் கொடுத்த கட்சிக்கு கையை காட்டிவிட்டு தமிழரசுக்கட்சிக் கூடாரத்திற்குள் நுழைந்த இந்த கட்சி வேட்பாளர்கள் அனேகர்.

மன்னார் பிரதேசம் ரெலோ வலுவாக கோலோச்சும்; பகுதி. 2013 வடமாகாண சபை தேர்தலில் குணசீலனிற்கு ரெலோ சார்பில் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்தது. மாவட்டத்தில் மூன்றாவதாக வந்தார். முதலாவதாக வந்த பிரிமூஸ் சிராய்வாவிற்கும் மூன்றாவதாக வந்த இவருக்குமிடையில் 667 வாக்குகள்தான் வித்தியாசம். மாவட்டத்தில் இரண்டாமிடம் பா.டெனிஸ்வரனிற்கு.

தேர்தல் முடிந்ததும் அமைச்சர்கள் சர்ச்சை தோன்றியது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள், வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் விதமாக அமைச்சர் நியமனம் செய்ய கூட்டமைப்பு தலைமை விரும்பியது. கட்சிகள் சார்பில்சிபாரிசு செய்யப்பட்ட போது, ரெலோவால் அமைச்சர் பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டது குணசீலன்தான். முதல் வரும், தமிழரசுக்கட்சியின் தலைவர்களும் இணைந்து அமைச்சர்களை தெரிவு செய்தபோது, ரெலோ சார்பில் போக்குவரத்து அமைச்சராக டெனிஸ்வரனை நியமித்தனர். சுகாதார அமைச்சு கிடைக்குமென எதிர்பார்த்திருந்த குணசீலன் கடும் ஏமாற்றமடைந்தார். அமைச்சு பதவி கிடைக்காததில் கட்சி தலைமைக்கும் பங்கிருக்கலாமென நினைத்தார். அன்றிலிருந்து கட்சியுடன் அவ்வளவாக ஒட்டு வைத்துக்கொள்ளவில்லை. கட்சி அடிப்படை உறுப்பினர் படிவத்தை நிரப்பி தருமாறு கட்சி கேட்டுக்கொண்டபோதும், மறுத்துவிட்டார். ரெலோ சார்பில் போட்டியிட்டு வடமாகாணசபை உறுப்பினரானவர், இன்றுவரை அந்தக்கட்சியின் உறுப்புரிமை பெறவில்லை. இதனால் கட்சியும் வேண்டாத பெண்டாட்டியை பார்ப்பதை போலத்தான் இவருடன் நடக்கிறது. மன்னாரில் மற்றைய எல்லா கட்சிகளுடனும் நெருங்கிச் செயற்படுகிறார். ஆனால் ரெலோவின் கூட்டங்கள், நிகழ்வுகளில்தான் காண முடிவதில்லை. கடந்த ஒருசில மாதங்களாகத்தான் இதில் சிறிய மாற்றம் தெரிகிறது.

2015 ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் மகிந்த அணி சார்பில் சிலர், ஒரு அசைன்மென்றுடன் வடக்கில் களமிறங்கினார்கள். தேர்தலை புறக்கணிப்பதாக அறிவிக்க வேண்டும், மகிந்தவுடன் மேடையேற வேண்டும் என்பதே அந்த அசைன்மென்ற். புளொட் சார்பில் ஒருவரும், ரெலோ சார்பில் இருவரும் துரத்திதுரத்தி டீல் பேசப்பட்டனர். ஆனால் பெரும்பாலானவர்கள் அதை நிராகரித்து விட்டனர்.

இந்த சமயத்தில் தேர்தலை புறக்கணிக்க குணசீலனும் கோரினார். அவரது அறிக்கையின் பின்னால் உள்நோக்கமிருப்பதாக விமர்சனங்கள் கிளம்ப, மகிந்தவுடன் இணைத்து பேசப்படுவதை குணசீலன் மறுத்தார். ஆனால் கட்சித் தலைமை அவரை இன்னும் முழுமையாக நம்பவில்லை.

மாகாணசபை உறுப்பினரான பின்னர் மக்கள் சந்திப்புக்களில் அதிக அக்கறை காட்டுகிறார். எப்பொழுதும் அவரை சந்திக்கலாமென்பதுதான் பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. மன்னாரில் தமிழ் மாகாணசபை பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளமை, மற்றைய உறுப்பினர்களின் மெத்தனப் போக்கு என அரசியல் செய்ய நிறைய இடைவெளி கிடைக்க, நன்றாக அடித்தாடிக் கொண்டிருக்கிறார் குணசீலன். மன்னாரில் தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிகளுடனும் நெருக்கமான உறவை பேணி வருகிறார்.

மாவீரர்தினத்தில் விளக்கேற்றல், துயிலுமில்லாம் சிரமதானம் என இறங்கி அடிக்க வேண்டிய இடங்களை புரிந்து கொண்டு, நன்றாக ஸ்கோர் செய்து கொண்டிருக்கிறார். இந்த வித்தை மன்னாரின் மற்ற உறுப்பினர்களிற்கு பிடிபடாமலிருப்பது குணசீலனிற்கு வாய்ப்பாக இருக்கிறது.

ஆனால் மன்னாரிலுள்ள மத்தியதர வர்க்கத்திடம் பொதுவாக தமிழ் அரசியல்வாதிகள் மீது அதிகரித்துவரும் அதிருப்தியில் இவரும் தப்பவில்லை. வேலைவாய்ப்பு, பணி உயர்வு, நிலம் வழங்கல் உள்ளிட்ட பலவற்றில் முஸ்லிம் அமைச்சர் ஒருவரின் செல்வாக்கால் தமிழர்கள் புறமொதுக்கப்படுவதாக பரவலான அதிருப்தி அதிகரித்து செல்கிறது. கிராமச்சங்க உறுப்பினர் தொடக்கம் கட்சிகளின் தலைவர்கள் வரை நரம்பு புடைக்க இனப்பிரச்சனை பற்றி பேசுகிறார்களே தவிர, மன்னாரில் அத்தியாவசியமாக செய்ய வேண்டியவற்றை கவனிக்கிறார்கள் இல்லையென்ற அதிருப்தியுள்ளது. மாகாணசபை ஒதுக்கீடுகளை மன்னாரிற்குள் முறையாக பங்கிடுவதில்லையென்ற மெல்லிய அதிருப்திக் குரல்களையும் குணசீலன் தொடர்பாக இங்கு கேட்க முடிகிறது.

மாகாணசபைக்குள் சுகாதாரத்துறை தொடர்பான பல விவகாரங்களை கவனப்படுத்தியிருக்கிறார். ஆனால், மாகாண சபைக்குள் வலுவான குரலாக இவர் இல்லை. ஒரு வைத்தியராகவும், மக்கள் பிரதிநிதியாகவும் இரட்டை தோணியில் கால் வைத்திருப்பதால் வலுவான அரசியல் தலைவராக அவர் அடையாளப்படவில்லை.

மாகாணசபைக்குள் குழப்பம் ஏற்பட்டபோது, முதலமைச்சரிற்கு ஆதரவான அணியில் இருந்தார். இப்பொழுது அடுத்த அமைச்சராகலாமென்ற பட்டியலிலும் இருக்கிறார். ஆனால் கட்சிக்கு விசுவாசமாக நடக்காததால் கழற்றிவிடுபவர்கள் பட்டியலிலேயே கட்சி வைத்திருக்கிறது. இன்னொருமுறை ரெலோ சார்பில் போட்டியிடும் வாய்ப்பு இவருக்கு வழங்கப்படுமா என்பது தெரியவில்லை. அப்படி வழங்கப்படாவிட்டால் இரண்டு தெரிவுகள்தான் இவருக்குள்ளது. ஒன்று தமிழரசுக்கட்சி சார்பில் களமிறங்குவது. ஏற்கனவே பிரிமூஸ் சிராய்வா அங்கிருக்கிறார். அங்கத்துவம் பெறாத தமிழரசுக் கட்சிக்காரராகி விட்டார் டெனிஸ்வரன். இவர்களை கடந்து தமிழரசுக்கட்சி வேட்பாளர் பட்டியலில் இடம்கிடைக்குமென்பது சிரமமானது.

இரண்டாவது சுயேட்சையாக போட்டியிடுவது. எப்படியோ, மன்னாரில் தற்போதுள்ள மக்கள் பிரதிநிதிகள் அனைவர் மீதும் அதிருப்தியலையே அதிகமாக உள்ளது. திடீர் திருப்பங்கள் வந்தாலே அலை மாறும்.





எரிக்சொல்ஹெய்முடன்



# பணத்தை திருப்பியனுப்பிய மாவட்ட செயலகம்... கோபக்காரரர் வீடு காரணமா?

இன்போர்மர் இசக்கி

மட்டக்களப்பில் நடந்து வரும் ஊழல், முறைகேடு, அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் கடந்த இரண்டு இதழ்களில் பல்வேறு வெளிப்படுத்தல்களை செய்திருந்தோம். இதன் தொடர்ச்சியாக இந்தவாரம் செட்டிப்பாளையம் வெள்ள அணை அமைக்கும் பணியில் நடந்த சம்பவங்களை வெளிச்சமிடுகிறோம். மட்டக்களப்பின் பெரும்பாலான பகுதியில் உட்கட்டுமான பணிகளே செய்யப்படாமல் மோசமான நிலையில் இருக்கும்போது, உட்கட்டுமான பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முறையாக பாவிக்காமல் திருப்பி அனுப்பிய சம்பவம் நடந்துள்ளது.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட செட்டிப்பாளையத்தில் வடக்கில் வருடாந்தம் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கிறார்கள். இதனையடுத்து, வெள்ளப்பாதிப்புக்களை கட்டுப் படுத்த செட்டிபாளையம் வடக்கில் அமைந்துள்ள புலவர் வீதிக்கு அண்மையிலுள்ள வீதிக்கு வடிகான் ஒன்றை அமைக்கும் திட்டவரைபொன்றை தயார்செய்து (12.5 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டிருந்தது) மாவட்ட செயலகத்தால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் ஊடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு வெள்ளத்தடுப்பு பணிகளிற்கு ஒப்புதல் அளித்தது. இதன்படி அமைப்பதற்கு 12.5 மில்லியன் ரூபாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 2.54 மில்லியன் ரூபா முற்பணமாக (26.12.2016) மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. குருமன்வெளியை சேர்ந்த அமரசிங்கம் என்ற கட்டிட ஒப்பந்தக்காரரிடம் இதற்கான பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 26.12.2016 தொடக்கம் 13.06.2017 வரையான காலப்பகுதிக்குள் இந்த திட்டத்தை முடிக்க வேண்டும்.

பின்னர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தபோது (17.03.2017) இந்த திட்டத்திற்கு உத்தியோகபூர்வமாக அடிக்கல் நாட்டினார். மாவட்ட அரசஅதிபர் பி.எஸ்.எம்.சார்ள்சும் இதில் அதிதியாக கலந்து கொண்டார்.

பணிகள் ஆரம்பித்த பின்னர் மேலதிக நிதியாக இரண்டு தடவைகள் 2 மில்லியன் ரூபா படி, 4 மில்லியன் ரூபாவை மாவட்ட செயலகம் கோரிப்பெற்றுள்ளது. இதன்படி மொத்தம் 16.5 மில்லியல் ரூபா இந்த திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக நிதி வழங்கியபோது, செட்டிப் பாளைய கிராமஅபிவிருத்தி சங்கத்தின் ஊடாக வடிகாலமைப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு மேலதிக உதவி அரசாங்க அதிபர் கடிதம்மூலம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசெயலகத்திற்கு கடிதம் மூலம் (26.05.2017) குறிப்பிட்டுள்ளார். 10.06.2017 இற்குள் பணிகளை முடிக்குமாறும் அறிவுறுத்தியிருக்கிறார்.

வடிகான் அமைப்பு பணிகள் நடந்து கொண்டிருந்த நிலையில், திடீரென அது இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆறுமாத காலப்பகுதியில் இந்த திட்டத்தை முழுமைப்படுத்த வேண்டுமென்றபோதும், அது முழுமையடையாத நிலையில், திட்டத்தை பாதியில் கைவிட்டு, 4.5 மில்லியன் ரூபாவை மாவட்ட செயலகம் திருப்பி அனுப்பியுள்ளது.

வடிகாலமைப்பு பணிகள் நடைபெறும் விதத்தால் அதிருப்தியடைந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த சமயத்திலேயே மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ச.இன்பராஜனிடம் கோரியிருக்கிறது. குறித்த கால அவகாசத்தில் பணிகளை முடிக்காமை பற்றியும், திட்ட தொடர் அறிக்கையையும் 2016ம் ஆண்டு முதல் பல தடவைகள் கோரியுள்ளனர். எனினும் அவர் அதை அனுப்பவில்லை. இதற்கு காரணம் என்ன?

ஆரம்பத்தில் இருந்தே கிராம அபிவிருத்தி சங்கத்தினர் இந்த பணியை பொறுப்பேற்பதை மாவட்ட செயலக உயரதிகாரிகள் விரும்பவில்லை. ஒப்பந்தக் காரரிடம் ஒப்படைப்பதால் அதிக செலவாகும். கிராம அபிவிருத்தி சங்கத்திடம் ஒப்படைப்பதால் நிதி விரயம் தடுக்கப்படும் என்றபோதும், ஒப்பந்தக்காரரிடமே ஒப்படைத்தது யார்?

மூன்று தடவைகள் நிதி கோரி பெற்று விட்டு, ஆறுமாதங்கள் அதைசெலவிடாமல் வைத்திருந்துவிட்டே நிதியை திருப்பி அனுப்புகிறார்கள். திட்டம் ஆரம்பிக்க வேண்டிய காலத்திலிருந்து ஆறுமாதங்கள் பிந்தியே ஒப்பந்தக்காரர் கண்டுபிடிக்கப் பட்டு, திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது.


இந்த இடத்தில் இன்னொரு விடயத்தை குறிப்பிட வேண்டும். செட்டிப்பாளையத்தில் உள்ள முன்னாள் உதவி அரச அதிபர் ஒருவர் குடியிருக்கிறார், அவருடனான மோதலால்தான் திட்டத்தை அதிகாரிகள் தடுத்தார்கள் என்ற செய்தியை இணையத்தளங்கள் பிரசுரித்துள்ளன. இணையங்கள் பிரசுரித்த செய்தி உறுதிப் படுத்தப்பட முடியாதது. பொய்யாகவும் இருக்க வாய்ப்புண்டு. ஆனால், அதிகாரிகள் இப்படி பொறுப்பில்லாமல் நடப்பதால் அதை நம்ப வேண்டிய நிலைமைதானே பொதுமக்களிற்கு ஏற்படும்.

24.07.2017 இல் மாவட்ட செயலகத்தில் நடந்த அபிவிருத்திக்குழு • கூட்டத்தில், மாவட்டத்தில் நடந்ததாக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக காரசாரமான விவாதங்கள் நடந்தன. இதன்போது, களுவாஞ்சிக்குடி செட்டிப்பாளையம் வடிகான் அமைக்கும் திட்டத்தை அமுல்படுத்தியதற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. உதவி அரசாங்க அதிபர், திட்டமிடல் பிரிவு பொறியிலாளர் ஆகியோரே பொறுப்பு என அரசாங்க அதிபர் கூறியிருந்தார்.

எனினும், இந்த திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியவர் அரசஅதிபர். அத்துடன், யாருக்கு ஒப்பந்தம் வழங்குவது என்ற இழுபறி நீண்டநாள் நீடித்தது. இறுதியில், திட்டத்தின் ஆரம்ப திகதியிலிருந்து ஆறுமாதங்களின் பின்னரே அமரசிங்கம் என்ற ஒப்பந்தக்காரர் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த திட்டம் தொடர்பான பல்வேறு ஆவணங்களில் அரசஅதிபரே கையெழுத்திட்டுள்ளார். அவர் தனது பொறுப்புக்களை தட்டிக்கழிக்கலாமா?

திட்டம் தொடர்பான தகவல்களையும் தொடர் திட்ட அறிக்கையையும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு கோரியும், உரிய அதிகாரிகள் இதில் மெத்தனமாக இருந்துள்ளனர்.




நம்மாழ்வார்

கடந்த மாதம் 28ம் திகதி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன் அவசர கடிதம் ஒன்றை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிற்கு எழுதினார். ஒற்றுமையின் பெயரில் கூட்டமைப்பிற்குள் நடக்கும் "சின்னத்தனங்களை" (ஆம். அதை அப்படித்தான் அழைக்க வேண்டும்) காட்டமான தொனியில் வெளிப்படுத்தியிருந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் இணைந்ததில் இருந்து அதிக ஓரவஞ்சனையை சந்தித்துவரும் கட்சியாக இருந்த புளொட் இப்பொழுதுதான் முதன்முறையாக சற்று உரத்தகுரலில் தனக்கு இழைக்கப்படும் அநீதியை பற்றி வாய் திறந்திருக்கிறது.

வடமாகாணசபையின் நியமன உறுப்பினர் சுழற்சிமுறையில் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளிற்கு வழங்கப்பட்டு வருகிறது. இம்முறை நியமனம் புளொட்டிற்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் தமிழரசுக்கட்சியின் ஜெயசேகரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் புளொட் அமைப்பு முறையாக கவனிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டு வருவது இது முதன்முறையல்ல. தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் புளொட் வந்தபோது, வலுவான மக்கள் பிரதிநிதித்துவம் எதையும் அது கொண்டிருக்கவில்லை. சில உள்ளூராட்சி மன்ற பிரதிநிதித்துவங்களை மட்டும் வைத்திருந்திருக்கலாம்.



# புளொட்
# இன்னும் எத்தனை காலம்தான் தீக்குளிக்கப் போகிறது?

யுத்தத்தின் பின்னான காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் மேலெழுந்து வரும் ஒரு இயல்பு மக்கள் பிரதிநிதிகள்தான் கூட்டமைப்பின் முடிவை எடுக்கலாம் என்பது. ஜனநாயகமுறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கட்சியை வழிநடத்துகிறார்கள் என்பதை போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். ஒரு நோக்கில் இதில் நியாயம் இருப்பதை போன்று தெரியலாம். ஆனால் இது புத்திசாலித்தனமான முடிவல்ல.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்கள் மன்றங்களில் கட்சியின் குரலை எதிரொலிக்கலாம். ஆனால் கட்சியின் கொள்கைகளை தீர்மானிப்பவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்ற வரையறையை வைத்திருப்பது, கட்சியின் கொள்கையையும், கட்சியின் இலக்கையும் பலவீனப்படுத்தும். கட்சியின் கொள்கை முடிவுகளை எடுப்பவர்கள் எப்பொழுதும் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்பதுகூட அவசியமில்லை. உதாரணமாக இன்றைய பா.ஜ.கவின் தேசியத்தலைவர் அமித்ஷா பாராளுமன்ற உறுப்பினரோ, சட்டமன்ற உறுப்பினரோ கிடையாது. ஆனால் மாநில அரசுகளின் தலையை உருட்டி விளையாடிக்கொண்டிருக்கிறார்.

தேர்தலில் போட்டியிடும் எல்லோருமே கட்சியின் செயற்பாட்டாளர்கள், விசுவாசிகள் என்பதல்ல. பணமிருப்பவர்களும், உள்ளூர் பிரபலங்களும் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். தென்னாசிய அரசியலின் பொது இயல்பாக வலுவடைந்து கொண்டு வருகிறது இந்த போக்கு. தென்னிலங்கை அரசியலில் சில பத்து வருடங்களாக நீடித்துவரும் இந்த போக்கு தமிழ்தேசிய அரசியலில் யுத்தத்தின் பின் மோசமான வளர்ச்சியடைந்து வருகிறது. கட்சிக்கு நிதியளித்து யாரும் ஆசனம் பெறலாமென்பதே இன்றைய அரசியல் யதார்த்தம். வேட்பாளரின் தகுதி, செயற்பாட்டு அனுபவமெல்லாம் கணக்கிலேயே எடுக்கப்படுவதில்லை. இந்த வகையானவர்கள் அரசியல் தெளிவுள்ளவர்கள் கிடையாது. அரசியலை வாழ்க்கையை நடத்துவதற்கான ஒரு வழியாகத்தான் பார்க்கிறார்கள்.

கொஞ்சம் கசப்புத்தான். ஒரு உதாரணம் சொல்லலாம். தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ கட்சிகளில் தேர்தலில் போட்டியிட்ட எத்தனை பேர் இன்றும் அந்தக்கட்சியில் இருக்கிறார்கள்?





தமிழ்தேசியக்கூட்டமைப்பின் கொள்கை முடிவுகளை எடுக்கும்போது, பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களை அழைத்து எடுக்கப்படுகிறது. இந்த பட்டியலில் உள்ளவர்களில் தொன்னூறு வீதத்தினர் ஓரிரண்டு வருட அரசியல் அனுபவமுடையவர்கள். ஏதாவது உத்தியோகம், வர்த்தகத்தில் இருந்துவிட்டு அரசியலிற்கு வந்தவர்கள். மறுவளமாக, இந்த கொள்கை முடிவு கூட்டங்களில் மக்கள் பிரதிநிதி இல்லையென்ற ஒரே காரணத்திற்காகவே சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைக்கப்படுவதில்லை. சுரேஷை திட்டமிட்டு ஒதுக்க வேண்டுமென்று றூம் போட்டு யோசித்துதான் இப்படியொரு நகர்வை யாராவது திட்டமிட்டிருக்க வேண்டும். எல்லாவித விமர்சனங்களிற்கும் அப்பாலும் எதற்காக ஆயுதம் தூக்கினாரோ அந்த கொள்கைக்காக இன்றும் சுரேஷ் செயற்படுகிறார். மாறாக, சுரேஷை தவிர்த்து கட்சி முடிவை எடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்களிற்கு அரசியல் என்பது "வாழ்க்கையில் செற்றில்" ஆன பின்னர் செய்யும் வேலை. தமிழ் அரசியல் வீச்சும், வலுவும் குறைந்து கொண்டு செல்வதற்கு இதுவும் ஒரு காரணம்.

இன்று சுரேஷிற்கு நடந்தது அன்று சித்தார்த்தனிற்கு நடந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வேறுதரப்பை உத்தியோகபூர்வமாக சந்தித்த சமயங்களில் சித்தார்த்தன் அழைக்கப்படுவதில்லை. அவர்கள் ஒரு பங்காளிக்குரிய மரியாதையுடன் அணுகப்படவில்லை.

வடமாகாணசபை தேர்தலில் சித்தார்த்தன் வெற்றியீட்டிய பின்னர், கட்சித்தலைவருக்குரிய கௌரவம் மற்றும் செயற்பாட்டனுபவத்தை கொண்டவர் என்பதன் அடிப்படையில் அவருக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு செயற்பாட்டியக்க பின்னணியை கொண்ட அவரால் நிச்சயம் ஒரு அமைச்சை திறம்பட நடத்தியிருக்க முடியும். வடமாகாண அமைச்சரவை

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தெரிவை அரச உத்தியோகத்தர்களிற்கான நேர்முகத்தை போல மாற்றியதன் விளைவு வடமாகாணசபையே செயலற்றதாகியது. வழங்கப்பட்ட நிதியை எப்படி செலவிடுவதென தெரியாமல் அமைச்சர்கள் திண்டாடினார்கள். நிதி திரும்ப போகிறது என்றதும், ஒரு சில நாளில் செலவழித்தார்கள். ஒரு அமைச்சர், ஒரு கோடி ரூபாவுக்கு பிளாஸ்ரிக் கதிரை வாங்கி தனது அலுவலகத்தில் அடுக்கி வைத்திருந்தார்.

மாகாணசபை, பாராளுமன்றத்தில் சில பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொண்ட பின்னர்தான் புளொட் இப்பொழுது தமிழ்தேசிய கூட்டமைப்பின் மைய நீரோட்டத்திற்குள் நுழைந்துள்ளது. விடுதலைக்காக போராடும் இனமொன்றின் அமைப்பு கட்டமைப்பு இப்படித்தான் என்பதை வெளிப்படையாக கதைக்கவே கூச்சமாகத்தான் இருக்கிறது.

இப்பொழுது மாகாணசபை உறுப்பினர் நியமனத்திலும் புளொட்டின் பங்கு நிராகரிக்கப்பட்டுள்ளது. விடுதலைக்காக போராடும் இனம் பதவிக்காக மல்லுக்கட்டலாமா என, பறித்தவனை விட்டு பறிகொடுத்தவனை தட்டியிருத்தும் நியாயத்தை சிலர் வைக்கிறார்கள். ஆனால், மக்கள் பிரதிநிதித்துவத்தை மட்டுமே கட்சிகளின் தகுதியாக கருதும் ஒரு கூட்டமைப்பில், மாகாணசபையில் மணியடிப்பவர் பதவியை கூட விட்டுக்கொடுக்கலாமா என்ற பதில் கேள்வியும் உண்டு.

தமிழ் காங்கிரசில் இருந்து 1949 இல் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிரிந்து சென்று தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார். அன்றிலிருந்து இரண்டு கட்சிகளும் கீரியும் பாம்புமாகத்தான் இருந்தன. இரண்டு கட்சிகளுமே இணைய முடியாத துருவங்கள் என்றுதான் கருதப்பட்டது. சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது என்பது அப்பொழுது பிரபல்யமான அரசியல் சொல்லாடல். ஆனால் 23 வருடத்தில் சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டியது. தமிழர்கள் ஒன்றாக இருந்தால்தான் எதையாவது செய்துகொள்ளலாமென்ற பட்டறிவால் பெருந்தலைவர்களான எஸ்.ஜே.வி.செல்வநாயகமும், ஜீ.ஜீ.பொன்னம்பலமும் இணைந்தார்கள். கூடவே, மலையக தலைவரான தொண்டமானையும் இணைத்துக்கொண்டனர்.


1972 இல் ஏற்படுத்தப்பட்ட அன்றைய கூட்டின் மரபணுவின் மூலம் பரிசோதனைக்குழாயில் உருவாக்கப்பட்டதே இன்றைய தமிழ்தேசியக்கூட்டமைப்பு. ஆனால் அந்த தலைவர்களின் பொறுப்புணர்வு யாரிடமும் இல்லை.

ஜெயசேகரம் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியில் போட்டியிட்டாலும் இப்பொழுது தமிழரசுக்கட்சிக்கு தாவித்தான் நியமன உறுப்பினராகிறார். முதலாவது நியமன உறுப்பினராக பதவியேற்ற மேரிகமலா, தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டு தோல்வியடைந்த பின்னர்தான் உறுப்பினரானார். மாகாணசபை உறுப்பினரான உடனேயே அவர் தமிழரசுக்கட்சி உறுப்பினராகி விட்டார். இன்று தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு கிளை உபதலைவர். சுழற்சிமுறையில் அவரை நீக்குவதற்கு தமிழரசுக்கட்சி ஆர்வம்

**விடுதலைக்காக போராடும் இனம் பதவிக்காக மல்லுக்கட்டலாமா என, பறித்தவனை விட்டு பறிகொடுத்தவனை தட்டியிருத்தும் நியாயத்தை சிலர் வைக்கிறார்கள். ஆனால், மக்கள் பிரதிநிதித்துவத்தை மட்டுமே கட்சிகளின் தகுதியாக கருதும் ஒரு கூட்டமைப்பில், மாகாணசபையில் மணியடிப்பவர் பதவியை கூட விட்டுக்கொடுக்கலாமா**

காட்டவில்லை. பிரயத்தனப்பட்டே அடுத்தவர் நியமனமானார். ஆனால் ரெலோவின் மயூரன் பதவிக்கு வரும் போதே அவரது பதவிவிலகல் கடிதத்தை தமிழரசுக்கட்சி தலைமை வாங்கி வைத்து, அவசர அவசரமாக அவரை அகற்றிவிட்டு, ஜெயசேகரத்தை நியமித்துள்ளது. மீண்டும் புளொட்டிற்குரிய பங்கு மறுக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்து பத்தாண்டுகள் ஆனபோதும் புளொட்டை இன்னும் தீக்குளித்து புனிதத்தை நிரூபிக்க கோருவதை போன்ற நடவடிக்கைகளை தமிழரசுக்கட்சி தலைமை கைவிட வேண்டும். ஏனெனில், அது முதிர்ச்சியான, மக்கள் நல அரசியல் செயற்பாடல்ல.



மட்டக்களப்பு, கதிரவெளி, கட்டுமுறிப்பு அரசினர் கலவன் பாடசாலைக்கான கனேடிய நாட்டின் வெளிச்சம் சமூக அமைப்பின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட குடிநீர் கிணற்றை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்கள் அயூப் அஸ்மின், இம்மானுவேல் ஆனோல்ட் ஆகியோர் கலந்துகொண்டனர்.





யாழ்/மானிப்பாய் மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா கடந்தவாரம் இடம்பெற்றது. சிறுவர் விவகார இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார்.



நீர்வேலி வடக்கு, பன்னாலை சிவசக்தி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடந்தது. ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கோப்பாய் தொகுதி அமைப்பாளர் ஐங்கரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.


## தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்.
## தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.

ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 20 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.

**London metropolitan college**

வழங்கும் 4500 பெறுமதியான கற்கைநெறி கட்டண கழிவினை பெறுவதற்கு அரியசந்தர்ப்பம்.

**நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.**

முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.

முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

**Issue Number 103**

Full Name :..................................................

Address :..................................................

Nic :..................................................

Phone Number :..................................................

குு.நக்கீரன்
உளவள ஆலோசகர்





# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



**பெண் (வயது 27)**
**கல்லடி, மட்டக்களப்பு.**

***கேள்வி:*** *எனது நீண்டகால நண்பியின் கணவர் வெளிநாட்டில் பணிபுரிகிறார். அவளுக்கு ஒரு பெண் பிள்ளையும் நான்கு வயதில் இருக்கிறாள். அண்மைக்காலமாக எனது நண்பியுடன் அவரின் உறவினரான இளைஞன் ஒருவன் மிகவும் நெருக்கமாக பழகுகிறான். அந்த இளைஞன் அடிக்கடி அவரின் வீட்டிற்கு வந்து செல்கிறான். இவர்களுக்கிடையில் முறைகேடான உறவு இருப்பதாக எனக்குப்படுகிறது. நான் இதுபற்றி அவனுடன் மேலோட்டமாக பேசியபோது அவன் பெரிதாக எதுவும் அலட்டிக்கொள்ளாமல் அதுபற்றிப் பேசுவதை தவிர்த்துக்கொள்வது எனக்குப் புரிகிறது. இவர்களின் இந்த பிரச்சினையால் எனது நண்பியின் வாழ்வு பாழாகப்போகிறது என்று பயமாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையிலிருந்து எனது நண்பியை காப்பாற்ற நல்ல வழியொன்று கூறுங்கள் சேர்?*

***பதில் :*** *அன்புச் சகோதரி! உங்களின் உண்மையான நட்பைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன். ஏனெனில் வள்ளவன் குறளில் கூறியது போல, "நகுதற்பொருட்டன்று நட்டல், மிகுதிக் கண் மேற்சென்று இடித்தல் பொருட்டு" என்பதன்பிரகாரம்வெறுமனே நண்பியுடன் சிரித்துமகிழல் மட்டுமல்லாமல் அவள் பிழையான வழியில் செல்லும்போது அதன் விளைவுகளிலிருந்து நண்பியைக் காப்பாற்றத்துடிக்கும் உமது உயர்மனம் கண்டு பொறாமைப்படுகின்றேன். ஏனெனில் ஒருகாலத்தில் என்னை படுகுழியின் பக்கம் வழிப்படுத்துவதற் கென்றே எனக்கும் சில நட்புகள் இருந்தன.*

*அதுபோகட்டும் உமது பிரச்சனையில் முதலில் நான் கூறக்கூடியது, கணவனைப் பிரிந்து வாழும் அநேகமான பெண்களின் வாழ்வில் விரும்பியோ, விரும்பாமலோ இப்படியான பிரச்சனைகள் வருவது தவிர்க்க முடியாத ஒன்று. சில வேளைகளில் உங்கள் நண்பிக்கும் அந்த இளைஞனுக்கும் இடையில் உண்மையில் எதுவித நீங்கள் எதிர்பார்க்கும் தொடர்புகள் ஏதும் இல்லாமல் உண்மையான புரிந்துணர் வுடன் கூடிய நட்பும், பாசமும் கூட இருக்கலாம். எதற்கும் பிரச்சனையை சற்று உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். ஏனெனில் ஆண்பெண் கவர்ச்சியும், அதன்பாலான ஆண்பெண் உறவும் நான் நீர் தீர்மானித்த ஒன்றல்லவே. அது இயற்கையின் செயற்பாடு. கணவன், மனைவி உறவு என்பது உறவு கொண்டாடும்போதே வலுவாகும். ஏன் நட்புக்கூட அப்படித்தான். நட்பைக் கொண்டாடும்போது நண்பர்கள் அடிக்கடி சந்தித்து, சிரித்துப்பேசி மகிழ்ந்து, பகிடிகள் செய்து, துன்பங் களை பகிர்ந்து கொள்ளும்போதே வலு வாகும். அப்படியல்லாத நட்பு காலப் போக்கில் உக்கிவிடும். அதேபோலத்தான் கணவன், மனைவி உறவும், ஒருவரோடு ஒருவர் அன்பையும், காதலையும், கோபத்தையும் ஏன் காமத்தையும்கூட பகிர்ந்து கொள்ளும்போதே உறவின் அர்த்தம்தெரியும். ஆனால்எமது பகுதிகளில் வாழும் அநேக வெளிநாடுகளிலுள்ள கணவன்மார் உள்ள பெண்கள் கணவன் அனுப்பும் பணத்திலும், வெளிநாட்டுப் பொருட்களிலும்தான் கணவனின் இருப்பைக் காணுகிறார்கள். இந்தப் பண்பாடு ஒரு பிழையான பண்பாடு. திருமணமாகி குடும்ப வாழ்விற்கு வந்து விட்ட கணவன் மனைவிக்கிடையிலான பிரிவு (உடல்லீறிதியான) நீளும்போது இப்படியான சட்டத்திற்கு முரணான ஆண்பெண் தொடர்புகள் உருவாவது தவிர்க்கமுடியாத ஒன்று என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.*

*கணவன், மனைவி உறவு என்பது தனியே சட்டாறிதியாக எழுதப்பட்டால் போதும் என நினைப்பது முட்டாள்தனம். கணவன், மனைவி உறவின் பரிமாணங்கள் பல்வேறுவிதமானவை. கணவனின் அருகிருப்பு என்பது மனைவிக்கு பாது காப்பு, மகிழ்ச்சி, பெருமை, மனஆறுதல் போன்ற பல்வேறு உணர்வுகளையும், காதல் காமம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியாகவும் அமைகிறது. தனியே "பொருளாதாரம்" என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் வாழமுடியாது. எனது இளமைக்காலத்தில் எனது நண்பர்கள் ஒரு பகிடிக்கதை கூறுவார்கள். அந்தக்கதை முழுவதையும் நான் கூறவில்லை. கதையின் சாராம் சத்தைக் கூறுகின்றேன். "அப்பா வெளி நாட்டில்இருந்து என்ன என்ன பொருட்கள் அனுப்புவது என்று கேட்பாராம். அதற்கு 5 வயது மகன், பக்கத்துவீட்டு மாமாவுக்கு படுக்க பாயும் கொண்டு வாங்கோ என்று கூறுவானாம்." எனவே உமது நண்பியின் பிரச்சனைக்கு எமது சமூகஅமைப்பே காரணம். ஆனால் இதேசமூகமே மனைவி யானவள் பற்றி பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளையும் எதிர்பார்க்கிறது. அந்தக் கட்டுப்பாடுகளை மீறும் பெண் ணிற்கு கடுமையான தண்டனைகளும் கிடைக்கிறது. எனக்குத்தெரிய, எமது சிறைகளில் உள்ள சில ஆண்கைதிகள் "தனது மனைவிக்கு வேறொரு ஆணுடன் தொடர்பு என்று தெரிந்ததால் கொலை செய்தேன்" என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவர்களே.*

*எனவே உமது நண்பியின் இந்தத் தொடர்பு கொலை அல்லது தற்கொலை யில் போய் முடியலாம், விவாகரத்தில் போய் முடியலாம் ஏன் சிலவேளைகளில் உமது நண்பியின் வாழ்வு சிதைபட்டுக்கூட போகலாம். உமது நண்பியுடன் தொடர்பு வைத்துள்ள ஆணின் ஒழுக்க விழுமியங் களைப் பொறுத்து உமது நண்பியின் வாழ்வின் சீர்கேடு தீர்மானிக்கப்படும். உமது நண்பிக்கு பிரச்சனையின் நீள, அகலத்தை புரியவையுங்கள். மகிழ்ச்சியைத் தரும் விடயங்களுக்கு பின்னால் தொடர்ந்துவரும் பாரிய துன்பங்களை கொஞ்சம் புரியவையுங்கள். நண்பியின் உறவுக்கார இளைஞனுக்கு இந்த சிக்கலி லிருந்து விடுபடுமாறு உரிய விதத்தில் புரியவையுங்கள். எல்லாவற்றிலும் பார்க்க முக்கியமானது நண்பியின் கணவனை விரைவாக இங்கு வரவழையுங்கள். இல்லாவிடின் நண்பியை கணவனிடம் அனுப்பி வையுங்கள். ஏனெனில் நிலைமை இன்னும் சிக்கலானால் பாதிப்புக்களும் அதிகமாகும். உமது நண்பி தொழில் ஏதும் செய்தவராயின் இப்படியான பிரச்ச னைகள் அதிகமாக இருக்கும். ஏனெனில் சில வேளைகளில் உங்கள் நண்பிக்கும்.*

*பொழுதுபோக்காகவும் இப்படியான தேவையற்ற தொடர்புகளைப் பேணவும் இது சந்தர்ப்பமாகிவிடுகிறது. எனவே அவருக்கு பொருத்தமானதும் ஆர்வத்தை தூண்டக்கூடியதுமான ஒரு தொழிலில் சேர்த்துவிட்டீர்களேயானால் இப்பிரச் சினை சிலவேளைகளில் தானாக இல்லாமல் போய்விடலாம். உமது நண்பி தனிக்குடித் தனம் செய்பவரெனில் அவரின் நெருங்கிய உறவினர்களோடு வாழ்வதற்கான ஏற்பாடுகள் அதிகம் பொருத்தமானது. நண்பியின் பிள்ளையின் எதிர்கால நலனைக்கருதி நண்பி தன் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தியேயாகவேண்டிய தேவை உள்ளது. இல்லாவிடின் மகளின் எதிர்காலமும் சிலவேளைகளில் பாழா கலாம். எதற்கும் நண்பியை ஒரு நல்ல உளநல ஆலோசகரிடம் கூட்டிச்சென்று ஆலோசனை பெறுவது நல்லது. இது உங்கள் நண்பியின் பிரச்சனை மட்டுமல்ல. இது ஒரு சமுதாயப்பிரச்சனை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.* ●



▶ தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய மட்டத்தின் 2017ஆம் ஆண்டுக்கான விளையாட்டில் உதைபந்தாட்டத்தில் மூன்றாமிடத்தை வவுனியா இளைஞர் கழகம் மூன்றாமிடத்தை பெற்றது. இவர்களிற்கான விரவேற்பு வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்தில் நடந்தது.



▶ நாற்றுக்காக பதியம் இடப்பட்ட தேங்காய் ஒன்று முளைக்கும் போதே தேங்காய் காய்க்க ஆரம்பித்துள்ளது. இது குருணாகல் சியபலாகஸ்கொடுவ பகுதியில் நடந்துள்ளது.

# குடும்பி,தொப்பிகல் மலைகளை பாதுகாக்க முன்வருவார்களா?

இலக்கியா

குசலானமலை, கேவர்மலை, தொப்பி கல்மலை, கார்மலை, குடும்பிமலை, நாகம்புமலை, ரெண்டுகல்மலை, படர் மலை, மண் மலை போன்ற பல மலைகள் மட்டக்களப்பில் உள்ளன. பெரியமலைகள் என்று இல்லாமல், மலைக் குன்றுகள் என்றே சொல்லாமல்.

A15 திருமலை வீதியில் மட்டக்களப்பில் இருத்து 24வது KM தூரத்தில் வரும் கிரான் சந்தியில் இருத்து, புலிபாய்ந்த கல் வீதியில் வடமுனையை நோக்கிச் செல்லும் பாதையில் 26வது KM பிரிந்து 67 KM சென்றால் குடும்பிமலைக் கிராமம் இருக்கின்றது. வரலாற்று சிறப்புமிக்க எந்த தடயங்களும் இல்லாவிட்டாலும், அண்மைக் கால வரலாற்றில் இடம் பிடித்துவிட்ட ஒரு மலையாகவும், பெயராகவும், இந்த தொப்பிக்கல்மலைப் பிரதேசம் இடம் பெற்றுவிட்டது.

தொப்பிக்கல் மலை சம்பந்தமாக மயக்கமான தெளிவற்ற நிலை பலரிடமும் இருக்கின்றது. 1977 ம் ஆண்டுகளுக்குப் பிறகு சிங்கள அரசினதும், பாதுகாப்புபடைகளினதும், பேசுபொருளாக இந்தமலை இருந்து வருகின்றது. திடீர் என்று 2006 ம் ஆண்டு இந்ததொப்பிக் கல் மலைப் பிரதேசம் கவனத்தை ஈர்த்ததோடு ( google ) வலயத்தளத்திலும் தேடப்படும் ஒருபொருளாக மாறியது.

> **இலங்கை மத்தியவங்கியும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து தொப்பிக்கல்மலை என்று, குடும்பிமலையின் படத்தை 1000 ரூபாய் நாணயத்தாளில் பதிவிட்டு அந்தப் பிரதேசத்தில் அரசபடையினர் சிங்கள கொடியைப் பறக்கவிடுவது போன்று சாட்சிப்படுத்தி இருந்தது. இது ஒரு முக்கியத்துவம் மிக்க வரலாற்றுப் பதிவாக அரசு பதிவிட்டிருந்தது**

அத்தோடு உள்ளூரிலும், அண்டைய நாடுகளில் இருந்தும் இந்தப் பிரதேசத்தை எல்லோரும் ஆவலோடும் உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். என்னநடக்கின்றது? எப்படி நடந்தது? என்ற பல கேள்விகள் எல்லோருடைய மனங்களையும் கிளறிக் கொண்டு இருந்தது. போதாக் குறைக்கு இலங்கை அரசாங்கமும், இராணுவத்தினரும், அரச ஊடகங்கள் ஊடாக தொப்பிக்கல்மலைப் பிரதேசம் பற்றியே பேசிக் கொண்டு இருந்தனர்.

அத்தோடு இலங்கை மத்தியவங்கியும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து தொப்பிக் கல்மலை என்று, குடும்பிமலையின் படத்தை 1000 ரூபாய் நாணயத்தாளில் பதிவிட்டு அந்தப் பிரதேசத்தில் அரசபடையினர் சிங்களகொடியைப் பறக்கவிடுவது போன்று சாட்சிப்படுத்தி இருந்தது. இது ஒரு முக்கியத்துவம் மிக்க வரலாற்றுப் பதிவாக அரசு பதிவிட்டிருந்தது.

இந்தக் கொடி ஏற்றப்படுவதற்கு முன் இங்கே இந்தப் பிரதேசத்தில் பறந்து கொண்டிருந்த புலிக் கொடி பற்றியும், அதன் வரலாற்று தடம் பற்றியும் ஆய்வாளர்களை தேடிப்பார்க்கத் தூண்டிய ஒரு நிகழ்வாக இதைப் பார்க்கலாம். முதலில் தொப்பிக்கல்மலை, குடும்பிமலை, இரண்டுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் தூரம் என்பவற்றைப் பார்ப்போம். இந்தக் குடும்பிமலை, கிரான் சந்தியில் இருந்தது 26 வது மைல் கல்லில் இருந்து குறுக்காக 6 KM தூரத்தில் இருக்கின்றது.

சாதாரணமாக ஒரு சூடு நெல் கதிர்களை அறுத்து குவித்து வைப்பது போன்று தோற்றத்தில் இருக்கும், அடிவாரம் அகன்றும் விரிந்தது வட்டமாகவும், உச்சியில் ஒரு கல்லும் உடையாது, இந்த உச்சிக் கல் தூரத்தில் இருந்து பார்த்தால் ஒரு குடும்பியைப் போல (பிராமணர்கள் கட்டும் குடும்பியைப் போல) இருக்கும். இந்ததோற்றத்தை தூரத்தில் இருந்துபார்த்தல் தெளிவாகத் தெரியும்.

தொப்பிக்கல்மலை என்பது அதே பாதையில் மியான்குளச் சந்தியில் இருந்து 30வது KM, பிரிந்து தென்கிழக்குப் பக்கமாக 5 KM சென்று பெரியமியான்கல் வழியாக வெள்ளைக் கல் மலை, பாலவட்டவான், மயிலத்தமடு, மாதவணை போன்ற காட்டுப் பிரதேசங்களை அண்டியதாக கிரானில் இருந்தது சுமார் 50 KM தூரத்தில் இருக்கின்றது.

அதேபோல் செங்கலடிச் சந்தியில் இருந்து பதுளைவீதியில் சென்று மேற்குப் பக்கமாக, மாவடிஓடை, புலுட்டுமான் ஓடை, வழியாகவும், (சரியானபாதை இல்லை) செல்லலாம். பொலன்னறுவ மாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு திருமலை வீதியில் மன்னப்பிட்டிச் சந்தி ஊடாக அருகம்பல என்ற சிங்கள கிராமத்தை தாண்டி கிழக்குப் பக்கமாக, மாந்தலை ஆற்றரைக் கடந்தும் தொப்பிக்கல் மலைக்குப் போகலாம். இது வட்ட வடிவம் அல்லாத முன் பக்கத்திற்கு மட்டும் முனை வைத்த ஒரு தொப்பியை வைத்தது போன்று தோற்றத்தில் இருக்கும். இந்தப் பிரதேசத்தில் இன்னும் ஒருவரும் குடியேறவில்லை.

ஆனால் நீண்டகாலமாக வந்தாறுமூலை, சித்தாண்டி, கிரான் போன்ற கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பருவ காலத்தில் கால்நடைகளை மேய்ப்பதற்காக இங்கு வருவார்கள். இந்தப் பகுதி நீண்டகாலமாக தமிழர்களின் கால்நடைகள் மேய்க்கும் மேய்ச்சல் தரையாகவே பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் யுத்தம் முடிந்த பிறகு பெரும்பான்மை இனத்தவர்கள் மியான்கல், மாந்தலை ஆற்றைக் கடந்து வந்து இந்த பிரதேசத்தில் இருந்த காடுகளை அழித்து நெல்லும், வேறு உப உணவுப் பயிர்களும் செய்தார்கள்.


அத்தோடு இங்குஉள்ள தமிழர்களின் கால்நடைகளை துப்பாக்கியால் சுட்டும், சுருக்கு வைத்துப் பிடித்தும் அநியாயம் செய்தார்கள். இதைக் கேட்கச் சென்ற தமிழர்கள் அடித்து துன்புறுத்தப் பட்டார்கள். கால்நடைகளை கட்டிவைத்து நட்டஈடும் அறவிட்டார்கள். இவர்கள் காடுகளை அழித்தபோது வன இலாகாவினர் கண்டுகொள்ளவில்லை, இவர்களுக்கு உதவியாகவும், பாதுகாப்பாகவும் மாந்தலை ஆற்று ஓரத்தில் முகாம் அமைத்து பாதுகாப்புப் படையினர் இருந்தார்கள்.

இந்த மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கும், அத்துமீறிய குடியேற்றத்துக்கும் தற்போது தான் ஓரளவு தீர்வு கிடைத்துள்ளது.

இந்த இரண்டு மலைகளுக்கும் வித்தியாசம் தெரியாதவர்களே தொப்பிக்கல் மலையின் மறு பெயர்தான் குடும்பி மலை என்று நினைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இந்த மயக்கத்தை ஏற்படுத்தியது இலங்கை அரசாங்கமும், படைகளுமே. குடும்பிமலையைச் சுற்றி மீரானக் கடவை, சின்ன மியான்கல், பெரிய மீயான்கள்குளம், கிரான்வட்டை, அசுரவணச்சோலை போன்ற பல கிராமங்கள் இருக்கின்றன.

1960 ஆண்டு காலப் பகுதியில் சித்தாண்டி, கிரான், சந்திவெளி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காடுகள் வெட்டிசேனைப் பயிரும், வேளாண்மையும் செய்துவந்தார்கள். 1970ம் ஆண்டுகாலப் பகுதியில் தேக்குமரம் நட்டும் அரசாங்கத்தின் திட்டத்தின்படி பலருக்கு இங்கே குடியேற வாய்ப்புக்கள் கிட்டியது.

1977-ம் ஆண்டுகாலப் பகுதியில் ஒரு பௌத்த பிக்குவின் தலைமையில் ஆயிரக்கணக்கான சிங்களமக்கள் இப்பகுதியில் குடியேற்றப்பட்டு தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டது. இந்தக் குடியேற்றத்திற்கு பொலன்னறுவை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அதி தீவிரமாக செயல்பட்டார்.



இந்தக் காலப்பகுதியில் "பொடியன்களின்" ஆத்திரம் மேலோங்கியதால், இந்தக் குடியிருப்புக்கள் தீயிட்டு அழிக்கப்பட்டதோடு, குடியேற்றவாசிகளும் விரட்டி அடிக்கப்பட்டார்கள். குடும்பிமலையை அண்டிய கிராமங்களில் 69 குடும்பங்களும் ஏனைய பகுதிகளில் 169 குடும்பங்களைச் சேர்ந்த 774 பேர் குடியிருக்கின்றார்கள்.

மியான்கல்குளம் 1600 ஏக்கர் வயல் நிலத்திற்கு நீர் பாய்சக் கூடிய குளமாகும். 42 அங்கத்தவர்களைக் கொண்ட மீனவர் சங்கமும் இங்கு இயங்கி வருகின்றது. சமுர்த்திச் வங்கிச் சங்கம், வேல்ட் விசன் போன்ற அமைப்புக்களால், மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. மீன் பிடித்தல், கால்நடை வளர்த்தல், சேனைப் பயிர், விவசாயம் போன்ற தொழில்களின் ஊடாக இந்த மக்கள் வருவாயைத் தேடுகின்றனர்.

இவர்களின் முக்கிய பிரச்சனை மருத்துவமே. மருத்துவவசதி என்பது மருந்துக்குக்கூட இல்லாமலிருக்கிறது. போக்குவரத்து, குடி நீர்ப்பிரச்சனை, யானைப் பிரச்சனை போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படுமாக இருந்தால், இவர்களின் வாழ்க்கைத் தரம் மேலோங்கும்.

ஸ்ரீதர் சுவாமிநாதன்




# மற்றவர்களுக்கும் மதிப்பளித்தவர்!

**எம்.ஜி.ஆர்.** என்னதான் மக்கள் செல்வாக்கு பெற்றவராக இருந்தபோதும் மற்றவர்களுக்கு மதிப்பளிக்க தவறியதில்லை. முதல்வராக இருந்தபோது அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு உரிய மரியாதை அளித்தார். நிர்வாக விஷயங்களில் கட்சியினர் தலையீட்டையும் ஒருபோதும் அவர் அனுமதித்தது இல்லை.

முதல்வர்கள் முன்னிலையில் அமைச்சர்கள் பணிவும் பவ்யமும் காட்டுவது நாம் பார்த்து பழகிப்போன ஒன்று. திருச்சி சவுந்தரராஜன் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர். அவரோடு பல படங்களில் நடித்தவர். எம்.ஜி.ஆர் மன்றத்தின் பொருளாளராகவும் பணியாற்றிவர். அவரை தனது அமைச்சரவையில் எம்.ஜி.ஆர் சேர்த்துக் கொண்டார். தனது ரசிகர் மன்றத்தில் இருந்தவர்தானே என்று நினைக்காமல், அமைச்சருக்கு உரிய மரியாதையை அவருக்கு அளித்தார்.

1978ல் அமைச்சராக நியமிக்கப்பட்ட திருச்சி சவுந்தரராஜன், ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டபின், பொறுப்பேற்க கோட்டைக்கு வந்தார். முதல்வர் எம்.ஜி.ஆரும் உடன் வந்து, புதிய அமைச்சரின் அறைக்கு அழைத்துச் சென்று மாலை அணிவித்து வாழ்த்தி அமைச்சருக்கான இருக்கையில் அமரச் செய்தார். அதோடு மட்டுமல்ல; வழக்கமாக முதல்வர்கள் அமர்ந்திருக்க அவர் பின்னால் மற்றவர்கள் நிற்பதை பார்த்திருப்போம். ஆனால், அமைச்சர் நாற்காலியில் திருச்சி சவுந்தரராஜன் அமர்ந்திருக்க, அவர் அருகே தானும் மற்ற அமைச்சர்களோடு நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டார் எம்.ஜி.ஆர்!

> மத்தியில் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் தலைமையிலான அரசு கவிழ்ந்ததைத் தொடர்ந்து, சரண்சிங் பிரதமராக பதவியேற்றார். அவரது அமைச்சரவையில் அதிமுகவைச் சேர்ந்த பாலா பழனூர், சத்திய வாணி முத்து ஆகியோர் அமைச்சர்களாக பதவி வகித்தனர். தமிழகத்தின் ஒரு மாநிலக் கட்சியைச் சேர்ந்தவர்களை முதன்முதலில் மத்திய அமைச்சர்களாக்கிய பெருமை எம்.ஜி.ஆரையே சேரும்.



இதேபோன்று, அவரோடு பதவியேற்ற கே.ஏ.கிருஷ்ணசாமி உள்ளிட்ட அமைச்சர்களையும் வாழ்த்தி அவர்களுக்கு அருகே நின்று எம்.ஜி.ஆர் படம் எடுத்துக் கொண்டார். அமைச்சருக்குரிய நாற்காலியில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அமர்ந்திருக்க, பக்கத்தில் நின்று கொண்டிருந்த முதல்வர் அநேகமாக எம்.ஜி.ஆராகத்தான் இருக்கும். 1983ம் ஆண்டு எஸ்.ஆர்.ராதா அமைச்சராக பதவியேற்றபோதும் இதே மரபை எம்.ஜி.ஆர் கடைபிடித்தார். முதல்வர் அமைச்சர் என்பதைத் தாண்டி, தம்பிகள் பொறுப்புக்கு வருவதைப் பார்த்து மகிழ்ச்சியடையும் ஒரு மூத்த சகோதரனின் பாசமும் அதில் தெரிந்தது.

எம்.ஜி.ஆர் எப்போதுமே நாட்டு நடப்பிலும் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதிலும் விழிப்புடன் இருப்பார். அதுவும் முதல்வர் பொறுப்பில் இருந்தபோது மிகவும் கூர்மையாக இருந்தார். இப்போது போல அப்போதெல்லாம் தனியார் தொலைக்காட்சிகள், ஃபிளாஷ் நியூஸ், வட்ஸ் அப் இத்யாதிகள் கிடையாது. இருந்தாலும் தமிழகத்தின் மூலை முடுக்கிலும்கூட என்ன நடந்தாலும் உடனடியாக அறிந்துகொள்வதற்காக, முதல்வர் என்ற முறையில் சில ஏற்பாடுகளை எம்.ஜி.ஆர் செய்து வைத்திருந்தார்.

ஒருமுறை, முதல்வர் எம்.ஜி.ஆரைப் பார்ப்பதற்காக சென்னையைச் சேர்ந்த அதிமுகவினர் கூட்டமாக ராமாவரம் தோட்டத்துக்குச் சென்றனர். அவர்களிடம் எம்.ஜி.ஆர் “என்ன விஷயம்?” என்று விசாரித்தார்.

“தலைவரே, எங்க ஏரியாவுக்கு புது போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திருக்காரு. அவருக்கு நம்ப கட்சிக்காரங்களைக் கண்டாலே வெறுப்பு. அதிமுகவினர் என்று தெரிந்தாலே அடிக்கிறாரு. வேண்டுமென்றே எங்கள் மீது பொய் வழக்குகள் போடறாரு” என்று கோரஸாக குற்றப்பட்டியல் வாசித்தனர்.

“ஏன்? நீங்க என்ன பண்ணிணீங்க?” என்று அவர்களை ஆழம் பார்த்தார் எம்.ஜி.ஆர்!

“நாங்க ஒண்ணுமே பண்ணலை தலைவரே” பம்மியது கூட்டம்.

“அப்படியா?” என்று கேட்டு சில விநாடிகள் நிறுத்திய எம்.ஜி.ஆர், “ஆமா, உங்க ஏரியா ஸ்டேஷன்லே ஹெட் கான்ஸ்டபிளை அடிச்சது யாரு?” என்று கூட்டத்தினரை கூர்மையாக பார்த்தவாறே கேட்டார்.

கூட்டத்தில் இருந்த ஒருவருக்கும் பேச்சு மட்டுமல்ல சில விநாடிகள் மூச்சும் வரவில்லை. பதில் சொல்ல முடியாத மவுனமே அவர்களின் தவறை வெளிக் காட்டியதை புரிந்து கொண்ட எம்.ஜி.ஆரின் முகத்தில் கோபக் கனல் வீசியது.

“நான் ஒரு முதல் அமைச்சர். எனக்கு எல்லா தகவல்களும் செய்திகளும் உடனுக்குடன் வந்துவிடும். நீங்க தப்பு பண்ணிட்டு போலீஸ் மீது பழியைப் போடறீங்க. போலீஸ்காரங்களும் மனுஷங்க தானே? போலீஸைக் கடமையை செய்ய விடாம நீங்க போய் தொந்தரவு கொடுக்கிறீங்க. அப்புறம் போலீஸ்காரங்க நம்ம கட்சியினரை பழிவாங்கறாங்கன்னு எங்கிட்டயே வந்து சொல்றீங்க.

நாம ஆளும் கட்சியா இருக்கலாம். நிர்வாகம் எல்லோருக்கும் பொதுவானது. அரசு அதிகாரிகளை அவங்க எந்த துறையை சேர்ந்தவங்களா இருந்தாலும் மதிக்கணும். அவங்க பணிகளில் நாம குறுக்கிடக் கூடாது. தப்பு பண்ணிட்டு யாராவது எங்கிட்ட சிபாரிசுக்கு வந்தீங்கண்ணா, நான் பாத்துக்கிட்டு சும்மா இருக்கமாட்டேன். ஜாக்கிரதையா இருங்க” என்று வந்திருந்தவர்களை வார்த்தைகளால் புரட்டி எடுத்தார்.

அரண்டுபோன கட்சியினர், எம்.ஜி.ஆரைப் பார்த்து பெரிய கும்பிடாகப் போட்டுவிட்டு நான்கு அடிகள் பின்வாங்கி பதிலேதும் பேசாமல் திரும்பி நடந்தனர்.


“நில்லுங்க” எம்.ஜி.ஆரிடம் இருந்து அதட்டலாய் உத்தரவு பிறந்தது. எதற்கு என்று புரியாமல் மந்திரத்துக்கு கட்டுப் பட்டதுபோல கூட்டத்தினர் நின்றனர்.

தந்தை பெரியாரின் கண்டிப்பும் பேரறிஞர் அண்ணாவின் கனிவும் கலந்து ஒலித்தது எம்.ஜி.ஆரின் குரல்

“எல்லோரும் சாப்பிட்டுட்டு போங்க!”

தொடரும்...





# வடிவேலுவும் இலங்கை கிரிக்கெட்டும்




அன்ரூ இக்னேஷ்

வடிவேலுவின் பிரபல நகைச்சுவை ஒன்று உள்ளது. அடி வாங்கி உடம்பெல்லாம் இரத்த காயங்களுடன் இருக்கும் வடிவேலு, எப்படி அடி வாங்கினேன் என மனைவிக்கு சீரியசாக கதை சொல்லிக்கொண்டிருப்பார். முட்டுச்சந்திற்குள் வைத்து வாங்கியது. அவன் போன் போட்டு இன்னொருவனை அழைத்தது, வர நேரமில்லை ஆளை அனுப்பி வைக்க முடியுமா என ஒருத்தன் கேட்டதென, அத்தனையையும் சீரியசாக சொல்லிக் கொண்டிருப்பார். கிட்டத்தட்ட அதே நிலையில்தான் இலங்கை கிரிக்கெட் அணியும் உள்ளது. திரும்பும் திசையெல்லாம் மரணஅடிதான் விழுந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவுடனான தொடரின் முடிவு எப்படியிருக்குமென்பது நன்றாக தெரியும். 30 என்றோ, 20 என்றோ டெஸ்ட் தொடரை இந்தியா நிச்சயமாக வெல்லும் என்றுதான் கணிக்கப்படுகிறது. கிரிக்கெட் என்பதே ஊகிக்க முடியாத ஆட்டம்தான். ஆனால் இலங்கையின் தற்போதைய ஆட்டத்திறன் கணிப்பிட முடியாத போட்டி முடிவை ஏற்படுத்துவதல்ல. எதிரணியின் ஆட்டத்திறனை சரியாக வேண்டியிருக்கும்.

2016 பருவகாலத்தில் ஆரம்பித்து இந்த பருவகாலம் வரையான காலம்தான் இலங்கையின் மோசமான காலம். இந்த காலத்தில் அவுஸ்திரேலியாவை 30 என உதைத்தார்கள்தான். அந்த உதையை வைத்து இலங்கையின் டெஸ்ட் அணியை எடைபோட முடியாது. அவுஸ்திரேலிய பலவீனங்கள், உள்ளூர் சுழல் சாதகம், சங்ககாரவின் ஓய்வின் பின்னான காலத்தில் இலங்கை அணி முழுமையான திறமையை வெளிப்படுத்தியது என அணிக்கு உள்ளும், வெளியும் இருந்த கலவையான காரணங்களால் அது நிகழ்ந்தது. அப்போது குஷல் மெண்டிஸ் போன்ற சில வீரர்கள் தனிப்பட்டரீதியில் ஜொலித்தனர்.

2016 மேயில் இங்கிலாந்துடன் நடந்த முதலாவது டெஸ்டில் அலிஸ்ரர் குக்கின் புதிரான கப்டன்சியால் இலங்கை போட்டியை சமனிலையில் முடித்தது. அதன்பின், இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட் வரை 14 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளது. அவுஸ்திரேலியாவை வெள்ளையடித்தது. அதில் சிம்பாவே, பங்களாதேசுடனான முதலாவது போட்டியில்தான் இலங்கை வென்றது. இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, இந்தியா விடயம் இது. அணி வீரர்களின் தேர்வில் பிரச்சனையா அல்லது அணி நிர்வாகத்தில் ஏதேனும் குறைபாடா அல்லது பயிற்சியில் குறைபாடா அல்லது வீரர்களிடம் உள்ள குறைபாடா என்பதை கண்டறிய வேண்டும். இரண்டு ஆண்டுகளாக இலங்கை அணி தள்ளாடி வருகிறது. ஆனால் காரணத்தை இன்னும் கண்டறியவில்லை.

மூத்தவீரர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் போது புதியவர்கள் அந்த இடங்களை நிரப்புவார்கள். இந்தகாலத்தில் அணிகளில் தள்ளாட்டம் ஏற்படுவது உண்மைதான். ஆனால் இலங்கையில் மட்டும்தான், தள்ளாட்டத்திலிருந்து மீள முடியாத சிக்கல் நீடிக்கிறது. கிரிக்கெட் அனுபவம், அணிகளின் தரநிலையென்பது தனியே அணியுடன் சம்பந்தப்பட்டதல்ல. அது நாட்டுடனும் தொடர்புடையது. ஒரு அணி கிரிக்கெட்டில் தேர்ச்சியடைந்து செல்கிறதெனில், அதன் புறத்தாக்கம் நாட்டின் கிரிக்கெட் ஆட்டத்திறனையும் மேம்படுத்தியிருக்கும். அதிலிருந்து தான் காலத்திற்குகாலம் அணிகளை உருவாக்குவார்கள். இப்படியில்லையெனில், ஒவ்வொரு பத்தாண்டிலும் உலக கிரிக்கெட்டின் தரநிலை மாறியிருக்க வேண்டும்.

இலங்கை கிரிக்கெட் உச்சத்தில் இருந்த தரங்க ஆகியோர் அடித்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் அணியில் ஆடவில்லை. உபுல் வந்தால் கௌஷால் வெளியே. சந்திமலும், மெண்டிசும் 35வது வரிசையில் ஆடியவர்கள். இந்த தகவல்களுடன் பார்த்தால் இலங்கையின் துடுப்பாட்ட பலவீனம் தெரியும். முறையான தொடக்க ஆட்டக்காரர்கள் இல்லை. மூன்றாமிலக்கத்தில் ஆடும் மெண்டிஸ் இன்னும் பெரிய இன்னிங்ஸை ஆடும் பக்குவத்தை பெறவில்லை. 4ம் இலக்கம் வீழ்ந்தால், நடு மத்திய வரிசையில் ஓட்டம் குவிக்க ஆளே கிடையாது.

இதேகாலப்பகுதியில் இலங்கைக்கு எதிராக 16 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. இது இலங்கையின் மோசமான பந்துவீச்சை காட்டுகிறது. முதலாவது டெஸ்டின் முதல்நாளில் இந்தியர்கள் துடுப்பாட்ட பயிற்சிசெய்வதற்கு வீசியதை போன்ற மகா மட்டரகமான பந்துவீச்சு. நுவான் பிரதீப் ஒருவர்தான் பந்துவீசினார். இந்தவிதமாக பந்து வீசிவிட்டு, டெஸ்டை வெல்வதை பற்றியல்ல, சமப்படுத்துவதை கூட யோசிக்க முடியாது.

டில்ருவன் பந்துவீச்சு இந்தியாவிற்கு சவாலான ஒன்றல்ல. அவருக்காக புஸ்பகுமாரவை களமிறக்கியிருக்கலாம். அன்று கணிப்பிட்டால், போட்டியின் முடிவு எப்படியிருக்குமென ஊகிக்கலாம். அண்மைய வருடங்களில் இலங்கை பங்குபற்றிய டெஸ்டில் கணிப்பிற்கு மீறிய முடிவு கிடைத்ததென்றால், அது சிம்பாவேயுடனான போட்டியில்தான். நடுவர்களின் விசித்திர முடிவால் அது நடந்தது.

டெஸ்ட் தரப்படுத்தலில் இப்போது இலங்கை ஏழாவது இடத்தில் இருக்கிறது. நேர்மையாக சொல்ல வேண்டுமெனில், இன்றைய இலங்கையின் ஆட்டத்திறன் ஒன்பதாவது அல்லது பத்தாவது இடத்தில் தான் இருக்க தகுதியானது. தற்போது 93 புள்ளிகளை சேர்த்து வைத்திருக்கிறது. அடுத்த இடத்திலுள்ள மேற்கிந்தியத்தீவுகள் 75 புள்ளிகளுடன் இருக்கிறது. அதனால் ஒரு சில மாதங்களிற்கு இலங்கைக்கு மேலதிக தர இறக்கம் இருக்காது. ஆனால் சில மாதங்களில் மேற்கிந்தியாவின் புள்ளிகளிற்கு இறங்கினால், அடுத்த தொடர்களில் பங்களாதேஷ் இலங்கைக்கு அச்சுறுத்தலாகும். இலங்கை அணியின் தற்போதைய சீரழிவை அடுத்த ஆறுமாதங்களிற்குள் சீர்படுத்தவில்லையெனில், இலங்கை ஒன்பதாம் இடத்தில்தான் நீடிக்க வுடனான தொடர்களில் இலங்கை மோசமான தோல்வியை சந்தித்தது. பெரும்பாலான போட்டிகள் நான்கு நாளிற்குள் முடிந்தது. மிகப்பெரிய ஓட்டவித்தியாசத்தில் இலங்கை தோற்றது என்பதையும் கவனத்திில்கொள்ள வேண்டும்.

ஒரு ஆண்டில் ஆடிய 14 போட்டிகளில் 9 தோல்விகள். அவுஸ்திரேலியாவை விட்டால் சிம்பாவே, பங்களாதேஷ் ஆட்டங்கள்தான் ஆறுதலானவை. தோல்விகளில் இரண்டு இன்னிங்ஸ் தோல்விகள். கடைசியாக ஆடிய 7 போட்டிகளில் 4 போட்டிகளில் 200 இற்கும் மேலான ஓட்டங்களாலும், ஒன்றில் இன்னிங்சாலும் தோல்வியடைந்துள்ளது. அஞ்சிய இரண்டு போட்டிகளிலும் வென்றது. இந்த தரவின் அடிப்படையில் கவனித்தால், இலங்கையின் டெஸ்ட் தரம் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கிறது என்றுதான் தோன்றுகிறது. கட்டியெழுப்பப்பட்டுவரும் அணியின் ஆட்ட அனுபவம் அதிகரித்து செல்ல, மறுபக்கமாக அணியின் ஆட்டத்திறன் வீழ்ச்சியடைந்து செல்கிறது. இலங்கை அவசரமாக கவனம் செலுத்த வேண்டிய காலம் இருக்கிறது. இதிலிருந்து புதிய அணியை நம்மால் உருவாக்க முடியாமல் போனதேன்?

முக்கியமாக பயிற்சியாளர், தேர்வாளர்கள், கட்டுப்பாட்டுசபையில் இருந்து மாற்றத்தை ஆரம்பிக்க வேண்டும். கத்துக்குட்டியாக இருந்த இலங்கையை உலககிண்ணத்தை ஏந்தவைத்த ரணதுங்காவால் ஏற்படுத்தப்பட்ட மறுமலர்ச்சி மீண்டும் ஏற்படுத்தப்பட்டால்தான் இலங்கை கிரிக்கெட் உயிர்பிழைக்கும். நீண்டகாலமாக ரணதுங்கா கிரிக்கெட் தொடர்பான எந்த பொறுப்பிலும் இல்லை. ரணதுங்காவின் பங்களிப்பை இந்த சமயத்தில் ஏற்படுத்தலாம்.

இன்றைய இலங்கை அணியில் உள்ள பிரதான பிரச்சனையே எந்த வீரரும் தனித்திறமையை வெளிப்படுத்துவதில்லை. எப்பொழுதாவது குஷல் மெண்டிஸ், சந்திமால் சதமடிப்பார்கள். அப்பொழுது தான் இலங்கை கௌரவமான இலங்கை எட்டும். கடந்த 14 டெஸ்டில் இலங்கையர்கள் 9 சதங்களை அடித்துள்ளார்கள். இதில் சந்திமல் 3, மெண்டிஸ் 2, கௌஷால் சில்வா, திமுத் கருணாரத்ன, தனஞ்ஜெய, உபுல் அவரால் ஒன்றுமே செய்ய முடியாமல் போயிருந்தால்கூட பரவாயில்லை. முதல்தர போட்டிகளில் 19.85 என்ற ஆச்சரிய சராசரியில் 558 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஒரு வீரரை, 30 வயதாகியும் தேசிய அணிக்குள் உள்வாங்காமல் இருப்பதன் விசித்திரத்தை எப்படி புரிந்துகொள்வதென்றே தெரியவில்லை. அதுபோல வனிந்து ஹசரங்கவிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

துஷ்மந்த சமீர என்ற அற்புதமாக வேகப்பந்துவீச்சாளர் ஒன்றரை வருடத்தின் முன் அடையாளம் காணப்பட்டார். இன்று அவரை சுமார் பந்துவீச்சாளராக இலங்கை வைத்திருக்கிறது. திறமையுள்ள வீரர்களை வளர்த்தெடுக்க வேண்டிய பயிற்சியாளர்கள் என்ன செய்கிறார்கள்?

இலங்கை கிரிக்கெட் இதற்கு மேலும் தரம்தாழ இடமில்லை. எல்லா துறைகளிலும் கறாரான மாற்றம் செய்து, மறுமலர்ச்சிக் காலத்தை ஏற்படுத்தாவிட்டால்

ஆரம்பத்தில் சொன்ன வடிவேல் கதைதான் நடக்கும். இந்தியா துவைத்துவிட்டு விட, இன்னொரு அணி போன் போட்டு கூப்பிட்டு அடித்து அனுப்பும்.




அனுஷியா

## பிக்பாஸிற்கு போட்டியாக விவசாய நிகழ்ச்சி!

விஜய் டிவியின் பிக்பாஸ் நிகழ்ச்சிதான் இப்பொழுது நம்பர் வன் நிகழ்ச்சி. தினமும் 2 கோடி பேரும், கமல் தோன்றும் சனி, ஞாயிறுகளில் 4 கோடி பேரும் பார்ப்பதாக சொல்கிறார்கள். அதேபோல, இந்த நிகழ்ச்சிக்கு எதிரான குரல்களும் கணிசமாக உள்ளன. எழுதி வைத்து நடிக்கிறார்கள், கலாசார சீரழிவு என்கிறார்கள் அவர்கள். இப்பொழுதே பிக்பாஸ் பாணியில் புதிய நிகழ்ச்சியொன்றிற்கு திட்டமிட்டுள்ளனர். 5 ஏக்கர் நிலத்தை சுற்றி உயரமாக தடுப்பு அமைத்து, தண்ணீர் பம்பி, குடிசைகள், கயிற்று கட்டில் போடுகிறார்கள். படித்த இளைஞர்கள், யுவதிகள் அங்கு தங்கியிருந்து வயலில் நாற்று நடுவதில் தொடங்கி, அறுவடை வரை தங்கியிருக்க வேண்டும். அனைத்து வேலைகளையும் அவர்கள்தான் செய்ய வேண்டும். கடைசிவரை தாக்குபிடிப்பவருக்கு பரிசு. காஞ்சிபுரம் அருகே நிலம் எடுத்து, இடம் தயார்படுத்தப்பட்டு வருகிறது. ஆட்கள் தேர்வு நடக்கிறது. சில நடிகர்களும் உள்ளனராம். விரைவில் மக்கள் டிவியில் ஒளிபரப்பாகும்.

## நயன்தாராவின் நண்பியாகும் மாப்பிள்ளை ஜனனி!

சின்னத்திரையில் இருந்து சிவகார்த்திகேயன் சினிமாவிற்கு சென்று ஜெயித்தார். இதன்பின் சின்னத்திரையில் இருந்து சினிமாவிற்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. தொகுப்பாளினிகள் ரம்யா, திவ்யதர்ஷினி ஆகியோர் சினிமாவிற்கு சென்று சிறிய வேடங்களில் நடித்தனர். கல்யாணம் முதல் காதல் வரை சீரியல் நாயகி பவானி சங்கர், ஒரு படத்தில் நாயகியாக நடிக்கிறார். இப்பொழுது விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வரும் மாப்பிள்ளை சீரியலில் நடிக்கும் ஜனனியும் சினிமாவிற்கு வருகிறார். கதாநாயகி வேடத்தைதான் எதிர்பார்த்தார். ஆனால் வேலைக்காரன் படத்தில் நயன்தாராவின் நண்பியாக நடிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது.

## வீட்டோடு மாப்பிள்ளை பார்க்கும் அஞ்சரை பெட்டி சித்து!

சித்து என்ற பெயரில் அறிமுகமானவர் தொகுப்பாளினி சித்ரா. மக்கள் டிவியில் அறிமுகமாகி, சின்னப்பாப்பா பெரியபாப்பா, டார்லிங் டார்லிங் தொடர்களில் நடித்தவர். தற்போது ஜீ சனலில் அஞ்சரைப்பெட்டி நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார். ஜீ டான்ஸ் லீக்கிலும் நடனமாடுகிறார். இரண்டு படங்களில் இரண்டாவது நாயகி வேடத்தில் நடிக்கிறாராம். ஆரம்பத்தில் தொலைக்காட்சியில் முகம் காட்டவே வீட்டில் அனுமதிக்கவில்லையாம். இப்பொழுது சினிமாவிற்கே சம்மதித்தது தனது பொறுப்பான நடத்தைகளால் என பூரிக்கிறார். கூட்டுக்குடும்பமாக வாழ்வதால், திருமணம் செய்பவர் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டுமாம்.

## மாப்பிள்ளை சீரியல் வில்லியான கதை!

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் மாப்பிள்ளை சீரியலில் ஸ்ரீஜாவின் தங்கையாக நடிப்பவர் வைஷாலி தனிகா. ஜீ சனலில் லட்சுமி வந்தாச்சு சீரியலிலும் நடிக்கிறார். நண்பர் ஒருவர் மூலம் கிடைத்த வாய்ப்பு இப்படி பிரபலமானவராக மாற்றுமென நினைக்கவில்லையென்கிறார். கலக்கான தன்னால் ஒரு குழந்தைக்கு வில்லியாக நடிப்பது ஆரம்பத்தில் பொருந்தவில்லை, நிறைய முயற்சி செய்து இப்பொழுது டெரர் வில்லியாகிவிட்டேன் என்கிறார். லட்சுமி வந்தாச்சு சீரியலில் ஹீரோ கல்யாணமான பின்னரும் அவரை காதலிக்கும் வேடம் என்றதும், நிறைய தயங்கினாராம். பாத்திரங்களில் பலவகை, இது அதில் ஒரு வகையென சம்மதித்து விட்டேன் என்கிறார்.

## தள்ளிப்போகும் வீரமங்கை!

விஜய் டிவிக்காக வீரமங்கை வேலு நாச்சியார் என்ற மெகா தொடரை தயாரிக்கிறார் நடிகை குட்டி பத்மினி. சரித்திரகால பின்னணியில் தயாராகிறது. அனைத்து வேலைகளும் முடிந்து படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த சமயத்தில், பிக்பாஸ் ஒளிபரப்பானது. பிக்பாஸ் நிகழ்ச்சிகு அடுத்தாக இந்த தொடர் ஒளிபரப்பாக இருந்தது. ஆனால், நினைத்ததைவிட பிக்பாசிற்கு அதிக வரவேற்பு கிடைத்ததால், வேலுநாச்சியாரையும் ஒளிபரப்பினால் ரசிகர்கள் பார்க்க மாட்டார்கள் என விஜய் டிவி கருதுகிறது. பிக்பாஸ் நிகழ்ச்சி நிறைவடைந்த பின்னர்தான் வீரமங்கை வேலு நாச்சியார் தொடர் ஒளிபரப்பாகவுள்ளதாம்.

# வண்ணத் திரை

## சந்தானத்தின் சுந்தரம் சறுக்குமா?

சந்தானம் நடித்த சர்வர் சுந்தரம் படவேலைகள் முடிந்தும், பலமாதங்களாக வெளியாக முடியாமல் முடங்கிக்கிடக்கிறது. படத்தின் தமிழக உரிமையை வாங்கிய ஆர்.கே.பிலிம்சின் நிதிச்சிக்கல் காரணமாக படம் முடங்கியிருப்பதாக தெரிகிறது. இந்தப்படம் தவிர மணிகண்டன் இயக்கத்தில் ஓடிஓடி உழைக்கணும், செல்வராகவன் இயக்கத்தில் மன்னவன் வந்தானடி, கணேஷ் தயாரிப்பில் சக்கை போடு போடு ராஜா படங்களில் நடித்து வருகிறார் சந்தானம். சக்கை போடு போடு ராஜா படத்திற்கு சிம்பு இசையமைக்கிறார். சிம்பு இசையில் அனிருத், யுவன் சங்கர் ராஜா, டி.ராஜேந்தர் உள்ளிட்ட பலர் பாடுகிறார்கள். சர்வர் சுந்தரம் வெளியாக தாமதமானால், சக்கை போடு போடு ராஜா வெளியாகலாமென கூறப்படுகிறது.

## பாவனா இதற்காகத்தான் கடத்தப்பட்டார்!

பாவனா கடத்தல் வழக்கு பற்றி பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். கடத்தலுடன் தொடர்புடையதாக கூறப்படும் முன்னணி நடிகர் திலீப் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பாவனா திலீப் இடையே மோதல் ஏற்பட இரண்டு காரணம் கூறப்படுகிறது. திலீப் ரியல் எஸ்டேட் வர்த்தகத்தில் ஈடுபடுபவர். இதன்மூலம் வரும் கணக்கற்ற வருவாயை நண்பர்கள், தன்னுடன் நடிக்கும் நடிகைகளின் பெயரில் வைப்பாராம். பாவனாவிடம் கொடுக்கப்பட்ட சொத்துக்களை வாங்குவதில் தகராறு ஏற்பட்டுள்ளது. அத்துடன் மஞ்சுவாரியாரை முதல் திருமணம் செய்த பின்னர், காவ்யா மாதவனை காதலித்து வந்தார். இவர்கள் படப்பிடிப்பில் அடிக்கும் கூத்துக்களை பாவனாதான் உடனுக்குடன் மஞ்சுவாரியாருக்கு தெரியப்படுத்தியுள்ளார். இவை எல்லாவற்றிற்கும் பழிவாங்கவே பாவனாவை கடத்தி பாலியல் அத்துமீறல் புரிந்து, வீடியோ எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## நண்பன் இறந்ததால் அப்செட்டில் இருந்தாராம்!

ப்ரியா ஆனந்தை தமிழ் சினிமாவில் அண்மைக்காலமாக காணக்கிடைக்கவில்லை. எங்கே போனீர்கள் என்று கேட்டால், சென்டிமென்ற் கதை சொல்கிறார். அவர் சினிமாவிற்காக சென்னை வந்தபோது தனியாகத்தான் வந்தாராம். தம்பி மாதிரி பழகிய ஒருவரின் வீட்டில் தங்கியிருந்துதான் நடித்தாராம். திடீரென அவர் விபத்தில் இறந்த பின்னர் பல மாதங்களாக அப்செட்டில் இருந்தேன் என்கிறார். இப்போது இந்தி, மலையாளம், தெலுங்கு படங்களில் நடித்து வருகிறார். அதிலும் மலையாள, தெலுங்கு படங்கள் ஹிட் அடித்ததில் செம உற்சாகத்தில் இருக்கிறார்.



தீபா

## மகேஷ்பாபுதான் நம்பர் வன்!

வெளியீட்டிற்கு முன்பே பட வியாபாரத்தை முடிக்கும் நடிகர்களாக தென்னிந்தியாவில் ரஜினி, விஜய், அஜித்தான் இருக்கிறார்கள். படம் எப்படி போகிறதென்பது வேறுகதை. ஆனால், வெளியீட்டிற்கு முன்பே பட உரிமையை விற்றுவிடுவார்கள். இவர்களிற்கு போட்டியாக தெலுங்கில் இருந்து மகேஷ்பாபுவும் இந்த பட்டியலில் இணைந்துள்ளார். ஏ.ஆர்.முருகதாஷ் இயக்கத்தில் ஸ்பைடர் படம் தமிழ், தெலுங்கில் தயாராகி வருகிறது. இந்த படத்தின் வியாபாரம் பரபரப்பாக நடந்து வருகிறது. அண்ணளவாக 200 கோடி வரை படம் விலை போயுள்ளதாக கூறப்படுகிறது. அஜித், விஜய் பட வியாபாரத்தை விட இது அதிகம். தென்னிந்திய அளவில் அதிக வியாபாரமுள்ள நடிகராக மகேஷ் பாபு உருவாகி வருவதை இது காட்டுகிறது.

## கட்டழகியான அனுஷ்கா!

இஞ்சி இடுப்பழகி படத்திற்காக உடலை வெயிட் ஆக்கினார் அனுஷ்கா. பின்னர் பாகுபலி 2 இற்காக ஸ்லிம் ஆக முயன்றார். முடியவில்லை. அனுஷ்கா இளைப்பதற்காக அதிக காலம் காத்திருக்க முடியாத ராஜமௌலி படப்பிடிப்பை தொடங்கினார். பின்னர் கிராபிக்ஸ் மூலம்தான் ஸ்லிம்மாக காண்பித்தார்கள். பாகுபலி படத்தின் கிராபிக்ஸ் செலவில் பெரும்பகுதி அனுஷ்காவை ஸ்லிம்மாக காட்டவே செலவானது. பாகுபலியின் பாக்மதி படத்தில் ஒப்பந்தமாகியிருந்தார். என்றாலும், அனுஷ்கா ஸ்லிம்மான பின்னர்தான் படப்பிடிப்பை தொடங்கலாமென இயக்குனர் கண்டிப்பாக கூறிவிட்டார். இதையடுத்து கடுமையாக முயன்று ஸ்லிம்மாகிவிட்டார். அதே வேகத்தில் படத்திலும் நடித்து முடித்துவிட்டார். அண்மையில் நிகழ்ச்சியொன்றிற்கு பழைய கட்டழகு அனுஷ்காவாக வர, எல்லோரும் வாய் பிளந்தார்களாம்.

## மீண்டும் நடிக்கிறார் ஆபாசப்பட நடிகை!

பாடகி சுசித்ராவின் பெயரில் இயங்கிய சமூகவலைத்தளத்தில் நடிகை சஞ்சிதா ஷெட்டியினுடையது என கூறப்படும் ஆபாச வீடியோ ஒன்று வெளியானது. இதையடுத்து வெளியில் தலைகாட்டாமல் இருந்த சஞ்சிதா, இப்பொழுது வெங்கட் பிரபு இயக்கத்தில் பார்ட்டி படத்தில் நடிக்கிறார். இதன் படப்பிடிப்பிற்காக பிஜி செல்வதற்கு முன், இன்னொரு படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார். நீல் நித்தின் முகேஷ் நடிப்பில் வெளியான ஜானி கதார் படத்தின் ரீமேக்கிலேயே நடிக்கிறார். நீண்டகாலத்தின் பின் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கிறார். தியாகராஜன் தயாரிக்கிறார்.

## கத்தரின் தெரசாவின் பிகினி!

சினிமாவிற்கு வரும்போது எல்லா நடிகைகளும் சொல்வது கவர்ச்சியில் எல்லை தாண்ட மாட்டேன் என்று. கத்தரின் தெரசாவும் இதைதான் சொன்னார். தமிழில் மெட்ராஸ், கடம்பன், கதாநாயகன் என்ற சில படங்கள்தான் கிடைத்தன. இந்த நிலையில் தெலுங்கில் கிடைத்த வாய்ப்பொன்றை பிடித்துக்கொண்டார். அதில் தெலுங்கு படவிதியின் கீழ் பிகினியில் தோன்ற வேண்டும் என்றபோதும், துணிந்து நடித்துள்ளார். கௌதம் நந்தா என்ற இந்த படத்தில் கோபிசந்த் நாயகன். ஹன்சிகாவும் உண்டு. கவர்ச்சியில் பின்னியெடுக்கலாமென்ற நம்பிக்கையில் சம்மதித்திருக்கிறார். படம் திரைக்கு வந்து சில நாட்கள்தான். கத்ரினின் பிகினி காட்சிகளால் அங்கு வாய்ப்புக்கள் உறுதியென்கிறார்கள்



# பூவோடு உயிரையும் செருகினாள்

தமிழில் 96 வகை சிற்றிலக்கியங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று, பரணி. வெற்றி வீரனுக்குப் பாடுவதுதான் பரணி. அதுவும் சாதாரண வீரனுக்கு அல்ல. ஆயிரம் யானைகளைக் கொண்ட மிகப் பெரிய போர்ப்படையை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெறும் வீரனுக்குப் பாடப்படுவதுதான் பரணி.

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி

என்று சிற்றிலக்கிய இலக்கணம் கூறுகிறது.

பரணி இலக்கியங்களில் மிகவும் புகழ் பெற்றது செயங்கொண்டார் எழுதிய 'கலிங்கத்துப் பரணி. இதில் வரும் சந்தப் படல்களும் வர்ணனையும் கற்பனையும் நெஞ்சை அள்ளும். மொத்தம் 150 சந்தங்களில் பாடல்களைப் பாடியுள்ளார் செயங்கொண்டார். வேறு எந்த இலக்கியத்திலும் எவரும் இந்த அளவுக்கு அதிகமான சந்தங்களைக் கையாண்டதில்லை.

கலிங்கத்துப் பரணியில் வரும் கடை திறப்புக் காதை போல சிருங்கார ரசத்தைப் பாடும் இலக்கியம் ஒன்று இல்லை என்றே சொல்லலாம். போர் முடிந்து வீடு திரும்பும் வீரார்கள், தன் வீட்டுக் கதவைத் தட்டுகின்றனர். பிரிவால் வருத்தத்தில் இருக்கும் பெண்கள், கதவைத் திறக்க மறுக்கின்றனர். அவர்களைப் புகழ்ந்து பாடி, கதவைத் திறக்கச் சொல்கிறார் செயங்கொண்டார். அதுதான் கடை திறப்புக்காதை. அதில் இருந்து ஒரு பாடல்

முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல் மடவீர்
செம்பொற் கபாடம் திறமினோ!.

தங்களை ஒப்பனை செய்துகொண்ட அழகிய இளம் பெண்கள், பூப் பறிக்கத் தோட்டத்துக்குச் செல்கின்றனர். அவர்களின் அங்க அழகை ஒவ்வொன்றாக ரசித்து உருகிக் கிடக்கின்றனர் இளைஞர்கள். அப்போது அந்தப் பெண்கள், தோட்டத்தில் உள்ள செங்கழுநீர்ப் பூவைத் திருகி எடுத்து தங்கள் கூந்தலில் செருகுகிறார்கள்.

செங்கழுநீர்ப் பூவை மட்டுமா திருகி எடுத்துச் செருகினார்கள்? இல்லை. உருகிக் கிடந்த இளைஞர்களின் உயிரையும் சேர்த்துத் திருகி எடுத்து கூந்தலில் செருகிக் கொண்டு போகிறார்களாம். உருகிக் கிடந்தவன் செத்தான். அவன் உயிர் அவளிடம் அல்லவா இருக்கிறது இப்போது.

அத்தகைய அழகிய பெண்களே போர் முடித்து உங்கள் காதலர் வந்துள்ளார், கோபம் தணிந்து கதவைத் திறவுங்கள் என்கிறார் செயங்கொண்டார்.

இதே கருத்தை "என்னடி முனியம்மா உன் கண்ணுல மையி" என்ற திரைப்பாடலில் வைத்துள்ளார் முனியம்மா நடராஜன். சேலை கட்டும்போது புடவைக் கொசுவத்தை, இடுப்பில் செருகுகிறாள். அப்போது அவன் மனசையும் சேர்த்து செருகுகிறாளாம். பாடலைப் பார்ப்போம்

கண்டாங்கி சேலை கட்டி
கைநிறைய கொசுவம் வச்சு
இடுப்புல சொருவுறியே கண்ணாம்மா
அது கொசுவமல்ல என் மனசு பொன்னம்மா.

# இலக்கிய நயம்

## சிலேடைசுவை

சிலேடைப் பாடல்கள் என்பது, ஒரே பாடல் இரண்டு பொருள் தரும்படி எழுதுவது. சிலேடை எழுதுவதில் வல்லவர் கவி காளமேகம். அவர் ஒருமுறை, நாகப்பட்டினத்தில் சாமி கும்பிட கோயிலுக்குப் போய்க்கொண்டிருந்தார். கோயில் அருகே சிறுவர்கள் பலர், கொட்டைப் பாக்கை வைத்து கோலி விளையாடிக்கொண்டிருந்தனர். ஒரு கொட்டைப் பாக்கு காளமேகப் புலவர் தலையில் வந்து விழுந்தது. கோபமடைந்தார் அவர். உடனே, சாபம் விடுவதுபோல

"பாக்குத் தரித்து விளயாடும் சிறுபாலர்க்கு
நாக்குத் தறித்துவிட நாகேசா'

என்று சொல்லிவிட்டு, அதை கோயில் சுவரில் கரியால் எழுதத் தொடங்கினார்.

"பாக்குத் தரித்து விளயாடும் சிறுபாலர்க்கு
நாக்குத்" என்று எழுதியபோது கோயில் மணி ஓசை கேட்டது. தீபாராதனை முடிந்துவிடுமே என்று, எழுதுவதை பாதியில் விட்டுவிட்டுக் கோயிலுக்குப் போய்விட்டார்.

விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் இதைப் பார்த்தனர். அதில் ஒரு சிறுவன், இன்னொரு சிறுவன் மேலே ஏறி, காளமேகப் புலவர் பாதியில் விட்டுச் சென்ற வாசகத்தின் மீதியை எழுதி முடித்தான். எப்படி தெரியுமா?

"பாக்குத் தரித்து விளயாடும் சிறுபாலர்க்கு
நாக்குத் தமிழ்மணக்க நாகேசா" என்று எழுதி முடித்தான். திரும்பி வந்து பார்த்த புலவர், சிறுவர்களின் தமிழ்ப் புலமையை வியந்து பாராட்டினார்.

சிலேடையாகப் பேசுவதில் வல்லவர் தமிழறிஞர் கி.வ.ஜகன்னாதன். ஒருமுறை, நண்பர்களுடன் காரில் போய்க்கொண்டிருந்தார். இவரைத் தவிர மற்ற எல்லாரும் இளைஞர்கள். இவருக்கு வயது 70.

திடீரென்று கார் நின்றுவிட்டது. தள்ளிவிட்டுதான் மீண்டும் ஸ்டார்ட் செய்ய வேண்டும் என்றார் டிரைவர். எல்லாரும் காரைவிட்டு இறங்கி தள்ளப் போனார்கள். அப்போது ஒருவர், கி.வ.ஜ.வைப் பார்த்து, "நீங்க தள்ள வேஎண்டாம். இருங்க" என்றார். கி.வ.ஜ. உடனே. "என்னைத் 'தள்ளாதவன்'னு நினைச்சிங்களா?" என்று சிலேடையாகச் சொன்னார். எல்லாரும் ரசித்துச் சிரித்தனர்.

திமுக தலைவர் கருணாநிதியும் சிலேடையாகவும் நகைச்சுவை யாகவும் பேசுவார். பத்து ஆண்டுகளுக்கு முன்பு வீட்டில் நாற்காலியை விட்டு எழுந்து, வேட்டியை சரி செய்து கட்டிக்கொண்டிருந்தார் கருணாநிதி. முதுமை காரணமாக நிற்க முடியவில்லை அவரால். கீழே தள்ளியது. அருகில் இருந்த துரைமுருகன் தாங்கிப் பிடித்துக்கொண்டார். அப்போது கருணாநிதி அடித்த கமெண்ட்

"என்னய்யா தள்ளாத வயசுன்னு சொல்றாங்க..இப்படி தள்ளுது".

# கண்ணதாசனின் கவித்துவ பதில்

சிக்கலான கேள்விகளுக்கும் சாமர்த்தியமாகவும் நகைச்சுவையாகவும் பதில் சொல்வது ஒரு கலை.

இங்கிலாந்து பிரதமராக சர்ச்சில் இருந்தபோது, லண்டனில் பெரும் வெள்ளப் பேரழிவு ஏற்பட்டது. நாடாளு மன்றத்தில் இது பற்றிப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர், "வெள்ளப் பேரழிவுக்கு அரசு எடுத்துள்ள நிவாரண நடவடிக்கைகள் போதாது. calamity (பேரழிவு)க்கும் catastrophy (பெரும்பேரழிவு)க்கும் உள்ள வித்தியாசம் பிரதமருக்குத் தெரியவில்லை" என்றார்.

சர்ச்சில் உடனே, "ஏன் தெரியாது? நன்றாகவே தெரியும். தேம்ஸ் நதியில் எதிர்க்கட்சித் தலைவர் தவறி விழுந்து விட்டால் அது calamity. அப்போது அவரை யாராவது காப்பாற்றிவிட்டால் அது catastrophy என்று சொன்னார். எதிர்க்கட்சியினர் உட்பட எல்லாரும் ரசித்துச் சிரித்தனர்.

கவியரசர் கண்ணதாசனும் இப்படி சமயோசிதமாக பதில் சொல்வதில் வல்லவர்.

கண்ணதாசன், திராவிட இயக்கத்தில் தீவிரமாக இருந்த காலம். ஒரு பொதுக் கூட்டத்தில் அவருக்கு வாள் பரிசளித்தார்கள். அதைப் பெற்றுக் கொண்ட கண்ணதாசன், "இதுதான் வீர வாள். மற்ற வாள் வருவாள் போவாள்" என்றார். சுற்றி இருந்தவர்கள் அதை கேட்டு ரசித்துச் சிரித்தனர்.



கவியரசரிடம் ஒரு நிகழ்ச்சியில், "ஒரு கவர்ச்சி நடிகையுடனும் கதாநாயகியுடனும் ஒரு படகில் நீங்கள் போய்க் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு நீச்சல் தெரியும். நடிகைகள் இருவருக்கும் நீச்சல் தெரியாது. திடீரென்று படகு கவிழ்ந்துவிடுகிறது? கதாநாயகியைக் காப்பாற்றுவீர்களா? கவர்ச்சி நடிகையைக் காப்பாற்றுவீர்களா? "என்று கேட்டனர்.

இதற்கு கவியரசர் சொன்ன பதில் 'நான் நதியைக் காப்பாற்றுவேன்'.

இன்னொரு நிகழ்ச்சியில், 'நடிகைக்கும் நடிகை கணவருக்கும் என்ன உறவு?" என்று கண்ணதாசனிடம் ஒருவர் கேட்டார். அதற்கு கவியரசர் சொன்ன பதில் 'புலி மார்க் சீயக்காய்த் தூளின் பாக்கெட்டின் மீது உள்ள புலிக்கும் சீயக்காய்க்கும் உள்ள உறவு'.


இதன் பொருள், கவியரசரின் உதவியாளருக்குப் புரியவில்லை. நிகழ்ச்சி முடிந்து காரில் வீட்டுக்குப் போகும் போது கண்ணதாசனிடம் விளக்கம் கேட்டார். கண்ணதாசன் சொன்னார் 'அது புலி மார்க் சீயக்காய்தான். ஊரில் எல்லாருக்கும் பயன்படுகிறது. புலி என்றைக்காவது பயன்படுத்தியது உண்டா?'. அடடா எவ்வளவு சூசகம்?

# நண்பர்களுக்கு வழி. உறவுகளுக்கு?

பிறை

எனது நண்பன் ஒருவரின் உறவுகள் கடந்த வாரம் லண்டனில் இருந்து வந்தார்கள். வந்ததும் நல்லூர் முருகனிடம் சென்று முகத்தை காட்டிவிட்டு தமது உறவுகளின் வீடுகளுக்குச் சென்றார்கள். நண்பன் வீட்டுக்கும் வந்தார்கள். கையில் கிறீன் கிறேக்கர் ஒரு பிஸ்கட் பெட்டி கண்டோஸ் சொக்கிலேட்டுக்கள் உட்பட ஆயிரம் ரூபாய் பணத்தையும் வழங்கியுள்ளனர். பல வருடங்கள் கழித்து வெளிநாட்டில் இருந்து வீட்டுக்கு வந்தவர்கள் அவர்கள் வெளிநாட்டில் என்ன கஷ்ரமோ என்று தெரியாமல் கொடுத்ததை நண்பன் வாங்கினான். பின்னர் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். தங்களது வாழ்க்கை எப்படி போகிறது என்று கதைத்துக் கொண்டார்கள். இதன் போது நண்பனை விட அவனது உறவுகள் கூடுதலாக கஷ்ரப்படுவதாக சொல்லிக் கொண்டனர்.

அதேவேளை அவனின் நண்பன் குடும்பமும் லண்டனில் இருந்து வந்திருந்தார்கள். பல வருடங்கள் நண்பனைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கத்தில் அவனும் பல பொருள்களுடன் நண்பனின் வீட்டுக்கு வந்து பொருள்கள் அடங்கிய பாக்கினையும் ஆயிரம் பவுண்ஸ் பணத்தையும் கொடுத்தான். எனது நண்பன் அவனிடம் கேட்டான் "உனக்கு கஷ்ரம் இல்லையா?" என்று அதற்கு அவனோ "லண்டனில் இருந்து வாரன் கஷ்ரமோ என்று கேட்கிறாய் விசரா உனக்கு" என்று சொன்னான். இந்தக் குழப்பத்தில் எனது நண்பன் என்னிடம் கேட்டான் "எனது உறவுகள் லண்டனில் கஷ்ரம் என்று சொல்கிறார்கள் எனது நண்பன் கஷ்ரம் இல்லை என்று சொல்கிறான். இதில் எது உண்மை" என்று கேட்டான். நானோ "உனது உறவுகளுக்கும் யாரும் நண்பர்கள் இங்கே இருப்பார்கள்" என்று சொன்னதும். "என்ன சொல்கிறாய்" என்று திருப்பி கேட்டான். நானோ "நண்பர்களுக்கு நண்பர்கள் உதவி செய்ய முன்வருவார்கள் உறவுகளுக்கு உறவுகள் உதவி செய்ய முன்வருவதில்லை. அதனால் உனது உறவுகளுக்கும் உதவி செய்ய நண்பர்கள் இருக்கிறார்கள் போலும் நல்லூர் கந்தன் வழிவிடுகிறார் எங்களுக்கு வழி தெரியவில்லை" என்று அவனுக்கு சொன்னேன்.



# பாகிஸ்தான்: திசை அறியா பயணம்

✍ பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி

தனது வருமானத்தை சரியாக காட்டத் தவறிய காரணத்தால் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அன்றே அவர் பதவி விலகி விட்டார்.

இதையடுத்து, முன்னாள் பெற்றோலியத் துறை அமைச்சர் ஷஹித் காகான் அப்பாஸி இடைக்கால பிரதமராகி இருக்கிறார். பதவி விலகிய நவாஸின் இளைய சகோதரர் ஷாபாஸ் ஷெரீப், இப்போது பஞ்சாப் மாகாண முதல்வராக உள்ளார். இவர், அடுத்த சில வாரங்களில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு, நிரந்தர பிரதமராக பொறுப்பு ஏற்றுக் கொள்வார் எனத் தெரிகிறது.

ஆனால் பாகிஸ்தான் ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொண்டாலும், தேர்தல் மூலம் ஜனநாயக முறைப்படி அரசைத் தேர்ந்தெடுத்தாலும், ஆட்சி அதிகாரம் முழுமையாய் அரசாங்கத்திடம் இருந்ததாய் சரித்திரமே இல்லை.

14 ஓகஸ்ட் 1947ல் சுதந்திரம் பெற்று, 1956ல் தனியே அரசமைப்புச் சட்டம் ஏற்படுத்திக்கொண்ட, 20 கோடிக்கும் மேலாக மக்கள் தொகை கொண்ட 'தூய நிலம்' பாகிஸ்தான்.

அயூப்கான், யாஹ்யாகான், புட்டோ, ஜியாஉல்ஹக், பெனாசிர், முஷாரப், ஜர்தாரி, நவாஸ் ஷெரீப் என்று பலரும் 'வந்தார்கள்; சென்றார்கள்'. அவ்வளவு தான். ஒருவருக்கும், ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே இல்லை.

## பலமுனை அதிகார மையங்கள்

கடந்த 2013ல் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நவாஸ் ஷெரீப் பிரதமரானார். அது ஒரு சரித்திர


ஷாபாஸ் ஷெரீப்

முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம். ஆம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமரிடம் இருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றொருவருக்கு அரசு கை மாறியது, அதுவே முதன்முறை. 1947ல் இருந்து 2013 வரை, 66 ஆண்டுகளில் ஒருமுறைகூட அவ்வாறு நிகழ்ந்தது இல்லை. பலமுனை அதிகார மையங்கள்தான் இதற்குக் காரணம்.

பாகிஸ்தானின் ராணுவம், அரசாங்கத்தின் ஓர் அங்கமாக கட்டுப்பட்டு நடந்துகொள்ள முன்வந்ததே இல்லை. மாறாக, அரசின் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதிக்கம் செலுத்துவதையே முழுநேர தொழிலாகக்கொண்டு இருக்கிறது. அயூப்கான், ஜியாஉல்ஹக், முஷாரப் என்று, ராணுவ தளபதிகள், ஆட்சியைக் கைப்பற்றியபோது, ஜனநாயக நெறிமுறைகள் குறித்தெல்லாம் பொதுமக்கள் யாரும் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. இது எப்படி சாத்தியம் ஆயிற்று?

## ராணுவத்துக்கு மக்கள் ஆதரவு

இந்தியாவும் பாகிஸ்தானும் தனது குடிமக்களிடம் மற்ற நாடு பற்றிய விரோதப் போக்கை வளர்ப்பதில் முனைப்பு காட்டி வருகிறன. இதனால் பாகிஸ்தானில் ஒரு அரசியல் தலைவரை விடவும், ராணுவத்துக்கே மக்கள் ஆதரவு அதிகமாக உள்ளது. இதுவே அதிபர், பிரதமர், தலைமை நீதிபதிகளுக்கு, தலைமேல் தொங்கும் கத்தியாக எந்நாளும் அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது.

இதிலிருந்து விடுபட்டு சுதந்திரமாய் செயல்பட நினைப்பவர்கள் ராணுவத்தாலோ, நீதிமன்றத்தாலோ தூக்கி எறியப்படுவார்கள். இதன்மூலம் நவாஸ் ஷெரீபின் ஊழலுக்கு ஆதரவு தெரிவிப்பதாக எண்ண வேண்டாம்.

2007ல் பாகிஸ்தான் உச்ச நீதிமன்ற நீதிபதி இப்திகார் முஹமது சவுத்ரிக்கு எதிராக அப்போதைய அதிபர் முஷாரப் எடுத்த அதிரடி நடவடிக்கை மறக்க முடியாதது. முஹமது சவுத்ரி பதவி நீக்கம் செய்யப்பட்டார்; கைது, சிறை வாசம் எல்லாம் அனுபவித்தார். உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு நேர்ந்த இந்த அவலங்களை அந்த நாட்டில் யாராலும் தடுக்க முடியவில்லை. ஆனால் பலமாக எதிர்ப்பு எழுந்தது.

பாகிஸ்தான் ராணுவத்துக்கு இணையான மற்றொரு அதிகார மையம் உளவுத்துறை (ஐஎஸ்ஐ). உள்நாட்டு குழப்பங்கள் அனைத்திலும் இதன் பங்கு கணிசமாக இருக்கும் என்று பரவலாக சொல்லப்படுகிறது.

இது எந்த அளவுக்கு உண்மை அல்லது பொய் என்பதை நம்மால் கணிக்கக்கூட முடியவில்லை. இது போதாதென்று இருக்கவே இருக்கின்றன தீவிரவாதக் குழுக்கள். ஏதோ ஒன்று, இரண்டு என்று எண்ணிவிட வேண்டாம். நாம் அறிந்த பெயர்கள் இவ்வளவுதான். ஆனால் டசின் கணக்கில் உள்ளன.

## காஷ்மீர் விடுதலை

எல்லாருக்கும் பொதுவான முழக்கம் 'காஷ்மீர் விடுதலை'. இதைச் சொல்லிக் கொண்டு அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இவர்களுக்கு எதிராக, அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது. மீறி நடவடிக்கை எடுத்தால், ராணுவம், ஐஎஸ்ஐ, தீவிரவாத குழுக்கள், எதிர்க்கட்சிகள் என்று அத்தனை பேரும் ஒன்றுசேர்ந்து விடுவார்கள். பிறகு அரசாவது சட்டமாவது. எல்லாம் அதோ கதிதான்.

ஒருநாள் இடைவெளியில் இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்றன. இந்தியாவில் மட்டும் ஜனநாயக அமைப்புகள் வலுவாக இருக்கும்போது, பாகிஸ்தானில் ஏன் சாத்தியம் ஆகாமல் போனது? இத்தனைக்கும் இந்தியாவில்தான் சாதி, மத, இன, மொழிப் பிரச்சினைகள் ஏராளம்.

பாகிஸ்தானில் இவ்வகை பாகுபாடுகளே இல்லையே... பிறகும் ஏன் இப்படி...? ஆட்சிகள் மாறுவதும் ஆட்சியாளர்கள் தண்டிக்கப்படுவதும் உலகம் எங்கும் நடைபெறுவதுதான். ஆனால் அங்கெல்லாம் அரசியல் ஸ்திரத்தன்மை பற்றிய கேள்வி பெரிதாக எழுப்பப்படுவது இல்லை. ஒருவர் போனால் வேறொருவர். அவ்வளவுதான். ஒரு சில நாட்களிலேயே இயல்பு நிலை திரும்பி விடும்.

பாகிஸ்தானில் மட்டும் நிலையற்ற அரசியல் சூழல், நிலையான அம்சமாகி இருக்கிறது. அந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு பெரும் தடையாக இருப்பதே இதுதான். தீவிரவாத செயல்களுக்கு, சில சமயங்களில் நேரடியாகவும், பல சமயங்களில் மறைமுகமாகவும் ஆதரவு அளிப்பதை, எல்லா அரசுகளுமே தொடர்ந்து செய்து வருகின்றன. இதனால் சர்வதேச நாடுகள் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன. எந்த நேரத்திலும் பொருளாதாரத் தடை கூட விதிக்கப்படலாம்.

பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் சற்றும் அசைந்து கொடுப்பதாய் இல்லை. காஷ்மீர் விவகாரம் மட்டுமே அத்தனை அதிகார மையங்களின் பொதுவான அம்சமாக இருந்து, அவர்களின் இருப்பை நியாயப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

நவாஸ் ஷெரீப் பதவி விலகியதால் மட்டுமே தூய்மை வந்துவிடப் போவதில்லை. அரசின் செயல் திட்டம் மாறி விடப் போவதில்லை. குறுகிய அரசியல், மத மாச்சர்யங்களுக்கு இடம் அளிக்காத தலைவர்களே பாகிஸ்தானின் உடனடி தேவை. இதற்கு நீண்ட தூரம் போக வேண்டி இருக்கிறது. அதற்கு முன்னதாக, பயணிக்கவேண்டிய திசையைமட்டுமாவது தீர்மானித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நிற்கிறது பாகிஸ்தான்.

## பிராந்தியத்துக்கும் நல்லதல்ல

திசையறியாப் பயணம் இனியும் தொடர்வது அந்த நாட்டுக்கு மட்டுமல்ல; பிராந்தியத்திற்கும் கூட நல்லதல்ல. கலகத்தில் இருந்துதான் தீர்வு; குழப்பத்தில் இருந்துதான் தெளிவு பிறக்கும் என்பார்கள்.

பாகிஸ்தானில் அதற்கான அறிகுறி எதுவும், கடந்த 70 ஆண்டுகளில் தோன்றவே இல்லை. ஒரு கலகத்தில் இருந்து மற்றோர் கலகமும், ஒரு குழப்பத்தில் இருந்து மேலும் சிக்கலான வேறோர் குழப்பமுமே பிறப்பதைப் பார்த்து வருகிறோம்.

இதோ.. அடுத்த அத்தியாயம். இதன் முடிவிலாவது 'சுபம்' வருகிறதா... பார்ப்போம்.

# கழுதை தேய்ந்து கட்டெறும்பான பனைவள அபிவிருத்தி கண்காட்சி!


சரவணபவஆனந்தம் திருச்செந்தூரன்

வடமாகாணசபையால் வருடாந்தம் பனை அபிவிருத்தி வாரம் பிரகடனப் படுத்தப்பட்டு, பனம் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி முத்திரைசந்தி சங்கிலியன் தோப்பில் நடத்தப்பட்டு வந்தது. கடந்த சில வருடங்களாக நடத்தப்பட்டு வந்த இந்த கண்காட்சியால், ஓரளவு வருமானத்தை பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுவந்தன. பனை உற்பத்தி பொருள்களின் சந்தை வாய்ப்பு அருகி வரும் நிலையில், இப்படியான சில முயற்சிகள்தான் பனம்பொருள் உற்பத்தியாளர்களிற்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையை போல, பனை அபிவிருத்தி வாரம் தேய்ந்து, இம்முறை வெறும் மூன்று நாட்கள் மட்டுமே பனைவள அபிவிருத்தி கண்காட்சி என்ற பெயரில் கண்காட்சி நடந்தது. கடந்த சில வருடங்களாக நடந்த பனை அபிவிருத்தி வாரம், கண்காட்சிகளுடன் ஒப்பிடும்போது இம்முறை கண்காட்சி சோபையிழந்திருந்தது. வடமாகாண விவசாய அமைச்சராக பொ.ஐங்கரநேசனின் பதவி வகித்த சமயத்தில், கண்காட்சியை ஒழுங்கு செய்ததற்கும், இம்முறை வடமாகாண கூட்டுறவு திணைக்களம் ஒழுங்கு செய்ததற்குமிடையில் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு தெரிந்தது.






இம்முறை எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்கவில்லை, கண்காட்சி ஏற்பாட்டில் முறையான திட்டமிடல் கிடையாது என ஏராளம் குற்றச்சாட்டுக்களை பனை அபிவிருத்தி சங்கங்களும், பார்வையாளர்களும் வைக்கிறார்கள். கடந்த சில வருடங்களாக கண்காட்சிகளை கட்டியிருந்தது. அப்பொழுது இலட்சக்கணக்கில் விற்பனை நடந்தது, இம்முறை சில ஆயிரங்களில் மட்டுமே விற்பனை நடந்ததாக விற்பனையாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

'கடந்த வருடம் நாளாந்தம் 60,000 ரூபா வரை விற்பனை நடந்தது. இம்முறை அப்படியில்லை. கடந்த வருடம் ஏழு நாட்கள் கண்காட்சி நடந்தது. அதுவும் வருமானத்தை பெருக்கியது. இம்முறை மூன்றுநாட்கள் என்பதால் சங்கங்களிற்கு உரிய வருமானம் கிடைக்கவில்லை' என்கிறார் முல்லைத்தீவு மாவட்ட பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விற்பனைகூடத்தில் கடமையிலிருந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பாலசுந்தரம் தெரிவித்தார். இந்த சமாசத்தில் 1800 வரையான பனம்பொருள் உற்பத்தியாளர்கள் அங்கத்தவர்களாக இருப்பதாக தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பனை தென்னைவள கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் காசாளர் சுகந்தனும் இதேவிதமான கருத்தையே வெளியிட்டார். 'இம்முறை ஒழுங்கமைப்பிலும் நிறையக் குறைபாடுகள் இருந்தன. நாளாந்தம் சராசரியாக 20,000 ரூபா அளவிலேயே விற்பனை நடந்தது. ஒழுங்கமைப்பு குறைபாட்டாலோ என்னவோ பார்வையாளர்களும் குறைவாக இருந்தார்கள்' என்றார்.

'நல்லூர் ஆலய திருவிழா ஆரம்பித்த பின்னர் கண்காட்சியை வைத்ததால் மக்கள் வரவில் பாதிப்பை ஏற்படுத்தியது. நல்லூருக்காக ஏற்படுத்தப்பட்ட வீதித் தடைகளும் மக்கள் வரவை பாதித்தது. கடந்த வருடங்களின் திருவிழாவிற்கு முன்னரே கண்காட்சி முடிந்ததால் பார்வையாளர்கள் அதிகமாக வந்தனர். இம்முறை கண்காட்சிக்கான விளம்பரங்களும் அதிகமாக இருக்கவில்லை. பனை அபிவிருத்தி வாரம், அதன் முக்கியத்துவம், இந்தகண்காட்சி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை. கண்காட்சி சமயத்தில் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப்பட்டதால் பாடசாலைகளிலிருந்தும் யாரும் வரவில்லை' என்றார் பண்டத்தரிப்பு பனை, தென்னைவள கூட்டுறவுச்சங்க உதவியாளர் நடராஜா காந்தரூபன்.


சி.பாலசுந்தரம்



நடராஜா காந்தரூபன்

இம்முறை பனைவள அபிவிருத்தி கண்காட்சி பிசுபிசுத்து போனதற்கு முக்கிய காரணம் அதிகாரிகளின் பொறுப்பற்றதன்மைதான். 2015இல் பனை அபிவிருத்தி வாரத்தை அமுல்படுத்துவது தொடர்பான பிரேரணை ஐங்கரநேசனால் முன்வைக்கப்பட்டு, அந்த வருடம் யூலை 22 28 வரை அனுஸ்டிக்கப்பட்டது. மில்க்வைற் கனகராசாவின் நினைவுதினம் யூலை 22ம் திகதி. வடக்கில் பனைகளின் பரவலிற்கு தனியொருவராக உழைத்தவர் கனகராசா. வடக்கில் இன்று அதிக பனைகள் இருப்பதற்கு ஒரே காரணம் கனகராசா தான். ஆவரை நினைவுகூரும் விதமாக 22ம் திகதி பனை அபிவிருத்தி வாரம் ஆரம்பித்தது. ஆனால், மாகாணசபையில் நிறைவேற்றிய பிரேரணையை மாகாண நிர்வாகமே புறமொதுக்கி, 28-30ம் திகதி வரை கண்காட்சியை நடத்தியுள்ளது.

இம்முறை கண்காட்சியை ஒழுங்கமைத்த கூட்டுறவு திணைக்களம் ஒரு சடங்கை போலவே நடத்தி முடித்திருக்கிறது. எங்கள் சுதேசிய வளமான பனையை பாதுகாப்பது, பனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, அதை நம்பியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது போன்றவற்றில் கூட்டுறவு திணைக்களத்திற்கோ, அதற்கு பொறுப்பான அமைச்சரிற்கோ போதிய பொறுப்புணர்வு இருந்ததாக தெரியவில்லை. கனகராசாவையும் பனையையும் தொடர்புபடுத்தி பார்க்க தெரியாமல் நல்லூரையும் பனையையும் பொருத்திப் பார்த்து, கண்காட்சியை சொதப்பலாக்கியுள்ளனர்.

இந்த கண்காட்சியை நம்பி வடக்கு முழுவதுமுள்ள ஆயிரக்கணக்கான பனம்பொருள் உற்பத்தி தொழிலாளர்கள்


சுகந்தன்

ஒரு வருடமாக தயாராகுவார்கள். இம்முறை கண்காட்சி நாட்களையும் சுருக்கி, கண்காட்சியையும் முறையாக நடத்தாதது அந்த மக்களின் உழைப்பிற்கான சந்தையை பெறுவதை தடுத்துள்ளது.

மன்னாரில் இருந்து வந்திருந்த ஒருவர் சொன்னார் கடந்த வருடங்களில் நாங்கள் கொண்டு வரும் அனைத்து உற்பத்திகளும் தீர்ந்துவிடும். நமது கொட்டகைக்குள் தரையில் விரித்த பாயும் விற்பனையான வரலாறுண்டு. இம்முறைதான் கொண்டு வந்தவற்றை திருப்பி கொண்டு செல்கிறோம்' என்று.

பனை அபிவிருத்தி வாரத்தின், கண்காட்சியின் அவசியம் விற்பனையை மற்றும் இலக்காக கொண்டது அல்ல. பனை எமது தேசிய வளம். வட மாகாண மக்களின் பெரும் வளம். அந்த வளத்தினை பயன்படுத்துவது என்பது அதனைப் பொருளாதாரமாகக் கொண்ட மக்களின் வயிற்றினை நிரப்புவதோடு மட்டுமல்லாமல், பனை வளத்தினை பொருளாதார மீட்டலுக்காக பயன்படுத்துவதற்கான உரையாடலை ஆரம்பிப்பதுடன் பனை மரத்தினை பெருக்கத்தினை அதிகரிப்பதுடன் அவ்வளத்தை அழிவிலிருந்து தடுப்பதும் ஆகும். பனையினை அழியவிடுவதென்பது பனையினை அடிப்படையாகக் கொண்டு தொழில் செய்யும் கூட்டத்தின் கழுத்தை நெரிப்பதற்கு ஒப்பானது.

## பொருத்து வீடு:

# இது உலக லெவல் டீல்

### கூட்டமைப்பு எதிர்ப்பு; சிவமோகன் எம்.பி ஆதரவு!

கரிகாலன்

யுத்தத்தால் பாதிப்படைந்து மீள்குடியேறிய மக்கள் பலர் அடிப்படை வசதிகளற்ற நிலையில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களுக்காக வெளிநாடுகளின் உதவிகளுடன் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்ட போதும் அவற்றில் பல முறைகேடுகள் ஏற்பட்டுள்ளதுடன், எல்லா மக்களுக்கும் முழுமையாக வீடுகள் கிடைக்கவில்லை. இந்நிலையில் மத்திய அரசாங்கம் வடக்கில் பொருத்து வீட்டினை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த வீட்டைப் பொறுத்தவரை செலவு கூடியதும், எமது காலநிலைத் தன்மைக்களுக்கு நீண்டகாலத்திற்கு பொருத்தமற்றது எனவும் ட்டமைப்பு எதிர்த்தது. 25 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடனும் நடைமுறைப்படுத்தப்பட இருந்த இந்த வீட்டுத் திட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்த்தது. தற்போது அதில் வழங்கப்படவிருந்த கணினி, சோபாசெற் உள்ளிட்டவை நீக்கப்பட்டு, 16 இலட்சம் பெறுமதியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தற்போதைய திட்டத்தில் சூரியமின் கலம் பொருத்தப்பட்டு, பிரதான மின்இணைப்புடன் இணைக்கப்படவுள்ளது. மேலதிக மின்சாரம் பொதுப் பாவனைக்கு விடப்பட்டு, அதற்கான பணம் உரியவருக்கு வழங்கப்படவுள்ளது.

உலகின் பிரபலமான உருக்கு நிறுவனமான ஆர்செலார் மிட்டல் நிறுவனம்தான் இந்த பொருத்துவீட்டின் பின்னணியில் உள்ள நிறுவனம். உலகளவில் உருக்கு வியாபாரத்தில் கொடிகட்டி பறந்த இந்த நிறுவனம் கடந்த சில வருடங்களாக வியாபாரத்தில் பின்னடைவை சந்தித்துள்ளது. பங்குசந்தையில் கணிசமான சரிவை சந்தித்து வரும் நிலையில், உலகவங்கி ஆர்செலார் மிட்டல் நிறுவனத்திற்கு கைகொடுத்துள்ளது. உலகவங்கியிடம் பல ஆயிரம் கோடி ரூபா கடன் வாங்கியுள்ள ஆர்செலார் நிறுவனத்தை சரியவிடாமல் பாதுகாப்பதற்காக, பெருந்தொகை பணம் வட்டியில்லாமல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு பதிலீடாக வடக்கு கிழக்கில் பொருத்துவீடுகளை ஆர்செலார் மிட்டல் நிறுவனம் அமைக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் குறித்த வீத தரகுப்பணம் பிரதான இரண்டு கட்சிகளிற்கும் செல்வதாக குற்றம்சாட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட பலர் வீடு இல்லாமல் இருக்கும் நிலையில் 22,000 பேருக்கு மட்டும் 25 இலட்சம் செலவில் வீட்டை வழங்குவதைக் காட்டிலும் செலவை குறைத்து அவற்றை கல்வீடாக பலருக்கு வழங்க முடியும் என்பது கூட்டமைப்பின் வாதம். ஆனாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பையும் மீறி பத்திரிகைகளில் பொருத்து வீட்டுக்கு விண்ணப்பம் கோரி விளம்பரம் செய்த மத்திய மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அதனை நடைமுறைப்படுத்த முயன்றார். வடமாகாண முதலமைச்சர் உள்ளிட்ட வடமாகாண சபையும் கடுமையாக எதிர்த்தது. தற்போது இவ் வீட்டுத்திட்டத்திற்கு தடை கோரி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் நீதிமன்றில் வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.

தடைகள், எதிர்ப்புக்களையும் தாண்டி மீள்குடியேற்ற அமைச்சர் அந்த வீட்டு திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த களம் இறங்கியுள்ளதாக அறிய முடிகிறது. வடக்கில் முதல் கட்டமாக 6000 வீடுகள் அமைக்கப்படவுள்ளது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் எதிர்ப்பை கடந்து வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. இதற்காக அவர்கள் கையிலெடுத்து உத்தி, வடக்கிலுள்ள தமது பிரதிநிதிகள் ஊடாக வீட்டுத்திட்ட பயனாளிகளை தேர்வுசெய்வது. அரச நிர்வாக முறைகளை மீறி இந்த வீட்டுத்திட்ட தெரிவு இடம்பெற்றுள்ளமை பல்வேறு இடங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிராமம் கிராமமாக செல்லும் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் இவ் வீட்டுத்திட்டத்தை பெறுவதற்கு மக்களது விபரங்களை திரட்டுவதுடன் மக்களை தமது கட்சிக்கு இணைக்கும் உத்தியாகவும் இதனை கையாளத் தொடங்கியுள்ளனர். சில பகுதிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பயனாளிகளை தெரிவு செய்து தருமாறு குறிப்பிட்ட தொகை வீடுகள் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது.

மக்களிடமும் இவ்வீட்டுத் திட்டத்தை பூரண விருப்பத்துடன் பெறுவதாக கடிதமும் பெறப்படுகிறது. வடக்கில் மாகாண சபையும், மாவட்ட செயலகம் உள்ளடங்கிய அரச நிர்வாக கட்டமைப்புக்களும் இருக்கும் நிலையில் ஒரு அரசியல் கட்சி தனது கட்சி ஊடாக வீட்டுத்திட்டத்தை வழங்க எடுத்துள்ள நடவடிக்கை ஏனைய கட்சி ஆதரவாளர்கள் மத்தியிலும், பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தமது ஆதரவாளர்களை மையப்படுத்தி தெரிவு இடம்பெற்றுள்ளமையால் பல மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வீட்டுதிட்டம் இல்லாது மழை, வெயில் என நாளாந்தம் போராட்ட வாழ்க்கை நடத்தும் மக்கள் பலர் இதனால் வெகுவாக பாதித்துள்ளனர். பொருத்தமற்ற தெரிவுகள் பல இடம்பெற்றுள்ள நிலையில் வீட்டு திட்டம் தேவை என கூறி பலர் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களை சந்தித்து வருகின்றனர். ஆனாலும், இது அமைச்சரால் நேரடியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. தாம் ஒன்றும் செய்ய முடியாது என அதிகாரிகளும் கைவிரித்து விடுவதாக தெரியவருகிறது. குறிப்பாக வவுனியாவில் பாராதிபுரம், கணேசபுரம் பகுதி மக்கள் பிரதேச செயலாளர், மாவட்ட அரச அதிபர் ஆகியோரை சந்தித்து குறித்த வீட்டுத் திட்டத்தில் வீடற்ற தாம் புறக்கணிக்கப்பட்டதாகவும் வீடுகள் உள்ள பலருக்கும் வீடுகள் வழங்க தெரிவுகள் இடம்பெற்றுள்ளதாகவும் முறைப்பாடு செய்துள்ளனர். தமது கிராமங்களில் பொருத்தமற்ற சில தெரிவுகள் கட்சி ஆதரவாளர்களால் இடம்பெற்றுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதே நிலை தான் பல பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த வீட்டுத்திட்டத்தை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் பொருத்துவீட்டிற்கு ஆதரவாக உள்ளார். பொருத்துவீடு தேவையில்லையென முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற முயன்றபோது, இணைத்தலைவர்களில் ஒருவரான அவர், தீர்மானத்திற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து தடுத்து நிறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சுமார் 2000 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்தப்பகுதி சுதந்திரக்கட்சியை சேர்ந்த ஒருவருக்கு 50 வீடுகளும், சிவமோகனிற்கு 500 வீடுகளும், எஞ்சியவற்றை ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஊடாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. வீடுகளிற்கான கோட்டாவை பெற்றவர்கள் தமது ஆதரவாளர்கள் ஊடாக ஆட்களை திரட்டுவதுடன், கட்சி அலுவலகங்களில் அதற்கான விபரங்கள் பதிவுசெய்யப்பட்டு, கொழும்புக்கு அனுப்பப்பட்டு மீள்குடியேற்ற அமைச்சரின் அலுவலகத்தில் இருந்தே மாவட்டசெயலகங்களிற்கு வழங்கப்படுகிறது. பயனாளிகளிற்கு வழங்கலாமா இல்லையா என்பதைதான் பிரதேசசெயலகங்கள் முடிவுசெய்யலாம். பயனாளிகளில் மாற்றம் செய்ய முடியாது. புதிய பயனாளியை, மேலே சொன்ன படிமுறையின் ஊடாக புனர்வாழ்வு அமைச்சு அனுப்புகிறது.

வீடு மக்களின் அடிப்படை தேவை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவில் வீட்டு தேவை அதிகமுள்ளது. வீட்டு தேவையை எப்படி நிறைவு செய்வதென்பதில் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியம். கூட்டமைப்பும் அரசும் ஏட்டிக்குப்போட்டியாக நடப்பதால், பாதிக்கப்படப் போவதென்னவோ மக்கள் தான்.






சி.சிவமோகன்
தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பி

பொருத்துவீடா கல்வீடா என்றால் கல்வீடு என்றுதான் சொல்வேன். ஆனால் கல்வீடு கொடுக்க வேண்டுமே. முல்லைத்தீவில் குடும்பத்தலைவர்களை பறிகொடுத்துவிட்டு ஆயிரக்கணக்கானவர்கள் கூடாரத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கல்வீடா பொருத்துவீடா என்று இழுபறிபட்டுக் கொண்டிருந்தால் அவர்கள் கூடாரத்திற்குள்தான் இருக்க வேண்டும். பொருத்துவீட்டை எதிர்ப்பவர்கள் அதற்கான மாற்று திட்டத்தை கொண்டு வர வேண்டும். இலங்கை வங்கியில் கடன் வாங்கி வீடமைக்கும் திட்டத்தை தமிழ்தேசிய கூட்டமைப்பு முன்வைத்தது. ஆனால் அரசிடம் பணமில்லாததால் அது நிராகரிக்கப்பட்டு விட்டது. வீடுகளை கட்டிக்கொடுக்க அரசிடம் பணமில்லையென்பதே உண்மை. உலகவங்கியின் இந்த திட்டத்தை நிராகரிக்க தேவையில்லை. தனிநபர், இருவர் உள்ள குடும்பங்கள் வீடுகளை கோரினால் பொருத்துவீட்டை வழங்கலாமென மாவட்டசெயலகத்திற்கும் எனது அபிப்பிராயத்தை சொல்லியுள்ளேன். பொருத்துவீடு வேண்டாமென தமிழ்தேசிய கூட்டமைப்பு அனுப்பிய கடிதத்தில் கையெழுத்திட்டேன் என்பது உண்மைதான். கட்சி கேட்டதால் செய்தேன். ஆனால் இப்படியே எல்லாவற்றையும் எதிர்த்துக்கொண்டிருந்தால் என்ன பயன்? புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்கள் வீடு வாங்கியுள்ளோம் என்கிறார்களே அது எது? இதைப்போன்ற வீடுகள்தான். இங்கு வருவது சிறிய திட்டம் அவ்வளவுதான். மக்களிற்கு கிடைக்க வேண்டிய வீட்டை குழப்பிய வரலாற்று பழி எனக்கு தேவையில்லை. நான் பயனாளிகளை தேர்வுசெய்யவில்லை. ஒருவகை நிமோனியா தொற்றால் மூன்று மாதமாக முல்லைத்தீவுக்கே போகவில்லை. இன்னும் மூன்றுமாதம் வீட்டுக்குள்ளேயே இருந்து ஓய்வெடுக்குமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# செவ்வாய் தோஷத்தை எப்படி வெல்வது?

1. செவ்வாய் தோஷம் கொண்ட இருவர் திருமணம் செய்து கொண்டால் இந்த கிரகத்தின் தாக்கங்கள் ஒன்றுமில்லாமல் போய் விடும்.
2. கும்ப விவாகம் என்ற ஒரு வகையான திருமணம் இந்த தோஷத்தின் தாக்கங்களை குறைக்க உதவிடும். இந்த வகை திருமணத்தில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் ஒரு மரத்தையோ அல்லது தாழியையோ திருமணம் செய்ய வேண்டும். இது செவ்வாய் தோஷத்தை ஒன்றுமில்லாமல் செய்து விடும்.
3. செவ்வாய்க்கிழமைகளில் உண்ணாவிரதம் இருந்தால் செவ்வாய் தோஷங்களின் எதிர்மறையான தாக்கங்கள் குறையும்.விரதத்தின் போது,செவ்வாய் தோஷக்காரர்கள் துவரம் பருப்பை மட்டுமே உண்ணலாம்.
4. செவ்வாய்க்கிழமைகளில் நவகிரக மந்திரம் மற்றும் ஆஞ்சநேயர் மந்திரங்களை பாடினால், செவ்வாய் தோஷக்காரர்களுக்கு நல்ல பலனை அளிக்கும்.
5. செவ்வாய்க்கிழமைகளில் பூஜைகள் புரிவதும், ஆஞ்சநேயர் கோவில்களுக்கு செல்வதும் கூட இந்த தோஷத்தை போக்குவதற்கான சிறந்த வழியாகும்.
6. செவ்வாய் தோஷக்காரர்கள் இரத்தக்கல் பதித்த தங்க மோதிரத்தை தங்கள் வலது கரத்தில் உள்ள மோதிர விரலில் அணியலாம்.
7. இந்த தோஷத்தின் தாக்கம் 28 வயதுக்கு பிறகு குறையும் என்பதால், அதற்கு பிறகு திருமணம் செய்யலாம்.





# பிரச்சினைகளை தீர்க்கும் ராகுகால பூஜை

சர்ப்ப கிரகங்களான ராகுவும் கேதுவும், துர்க்கை தேவியை வழிபாடு செய்ததின் பயனாகவே கிரகங்களாகும் வரத்தைப் பெற்றதாக புராணங்கள் கூறுகின்றன. ஒரு நாளில் உள்ள இருபத்தி நாலு மணி நேரத்தில் 1½ மணி நேரம் ராகுவும், 1½ மணி நேரம் கேதுவும் அம்பிகையை பூஜிக்கின்றனர். ராகு வழிபடும் நேரம் ராகு காலம் என்றும், கேது வழிபடும் நேரம் எமகண்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த நேரங்களில் மற்ற கிரகங்களின் ஆற்றல் குறைந்திருக்கும் என்பதாலேயே, ராகுகாலத்தில் சுப காரியங்களை செய்வது தவிர்க்கப்படுகிறது. அதே சமயம் ராகு காலத்தில் அம்மனை ஆராதிப்பது, குறிப்பாக சண்டிகையாகவும், துர்க்கையாகவும் தேவியை வணங்குவது சிறப்பான பலனைத் தரும் என்கிறது தேவி பாகவதம்.

ராகுகாலம் என்பது ஒவ்வொரு நாளிலும் குறிப்பிட்ட 1½ மணி நேரமாகும். ராகு காலத்தில் செய்யப்படும் துர்க்கை பூஜை சிறப்பு மிக்கது. அதிலும் சிறப்பானது செவ்வாய்க்கிழமைகளில் ராகு காலத்தில் செய்யப்படும் பூஜை. ஏனெனில் அந்த தினத்தில் ராகுவோடு இணைந்து செவ்வாயும், அம்பிகையை 'மங்கள சண்டிகையாக' வணங்குவதே காரணம்.

செவ்வாய், ராகு ஆகிய கிரகங்களால் தோஷம் இருந்தாலோ அல்லது வாழ்வில் தடைகளும், துன்பங்களும் தொடர்ந்தாலோ ராகு கால வழிபாட்டினை மேற்கொண்டு, துர்க்கையையும் மங்கள சண்டிகையையும் வழிபடுவது நற் பலன் தரும். துர்க்கையை பார்த்தபடி தீபம் ஏற்றுவது நல்லது. கிழக்கு அல்லது மேற்கு திசை நோக்கி தீபம் ஏற்றவேண்டும். வாரத்தில் அனைத்து நாட்களுமே ராகுகாலத்தில் தேவி வழிபாடு செய்வது சிறந்த பலனைத் தரும். இருப்பினும் குறிப்பிட்ட பிரச்சினைகள் தீர பிரத்தியேக தினங்களில் வணங்குவது சிறப்பு என்பது ஐதீகம்.

அதன்படி செவ்வாய்க்கிழமை ராகுகாலத்தில் துர்க்கையை வணங்கினால், திருமணத் தடை, முன்னேற்றத் தடை, கடன் பிரச்சினைகள், சகோதரர்களிடையே ஒற்றுமையின்மை, வீடு, மனை தொடர்பான பிரச்சினைகள், விபத்து பாதிப்புகள் ஆகியவை நீங்கச் செய்யும்.

வெள்ளிக்கிழமை ராகுகாலத்தில் செய்யும் பூஜையால் குடும்ப பலம் சீராகும். தனிப்பட்ட வேண்டுதல்கள் பலன் தரும். மகப்பேறு கிட்டும். மனைவி ஆயுள் பலம் கூடும். வாரிசுகள் வாழ்வில் தடைகள் நீங்கும். பொன், பொருள் சேரும். வீண் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்கும்.

ஞாயிற்றுக்கிழமை ராகுகாலத்தில் செய்யும் வழிபாட்டினால், தீராத நோய்களின் தாக்கம் குறையும். எதிரிகள் பயம் நீங்கும். பெற்றோருடன் ஒற்றுமை அதிகரிக்கும். வெளிநாட்டு வாய்ப்புகள் கிடைக்கும்.

# இந்தவார ராசி பலன்கள்



**06.08.2016 – 12.08.2016**

மேஷம்: சுக ஸ்தானம், பஞ்சம ஸ்தான கிரக சேர்க்கைகள் காரணமாக தடுமாற்றங்கள், அதீத சிந்தனை வயப்படுவீர்கள். ராசிநாதன் செவ்வாய் நீச்ச நிலையில் இருப்பதால் வீண் பேச்சுகளை தவிர்க்கவும். நிலம், சொத்து சம்பந்தமாக தீர ஆலோசித்து செய்யவும். சுக்கிரனின் பார்வை காரணமாக வராத கடன் வசூலாகும். கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடிவரும். சகோதர உறவுகளுடன் அனுசரித்துப் போகவும். தொழில், வியாபாரம் லாபகரமாக இருக்கும். பணப் புழக்கம் உண்டு. புதிய முதலீடுகளை கவனமாகச் செய்யவும்.

ரிஷபம்: ராசிநாதன் சுக்கிரன் தன ஸ்தானத்தில் இருப்பதால் மனநிறைவும் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. வெளியூரிலிருந்து எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். செவ்வாய் சாதகமாக இல்லாததால் நண்பர்களிடம் இருந்து சற்று விலகி இருக்கவும். பயணத்தின்போது உடைமைகளை சரிபார்த்துக் கொள்ளவும். சூரியன் 3ல் இருப்பதால் நிறை, குறைகள் உண்டு. பூர்வீகச் சொத்து விஷயமாக ஒருமித்த கருத்து ஏற்படும். கல்வி வகையில் அலைச்சல், செலவுகள் உண்டு. பழைய வண்டியை மாற்றி புது வண்டி வாங்குவீர்கள்.

மிதுனம்: யோக அம்சங்கள் கூடிவரும் நேரம். ராசியில் சுக்கிரன் இருப்பதால் மகிழ்ச்சி, குதூகலம் இருக்கும். பெண்கள் விரும்பிய ஆடை, அணிகலன்கள் வாங்கி மகிழ்வார்கள். புதன் பார்வை காரணமாக மருத்துவ சிகிச்சையில் இருந்தவர்கள் குணமடைவார்கள். செவ்வாய் 2ல் இருப்பதால் அவசிய, அநாவசியச் செலவுகள் இருக்கும். வாக்குவாதம், வாக்குறுதி இரண்டும் வேண்டாம். தடைபட்டு வந்த குலதெய்வ நேர்த்திக் கடன்களை செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் சீரான நிலை உண்டு. சுபகாரிய விஷயங்களுக்கு பிள்ளையார் சுழி போடுவீர்கள்.

கடகம்: வார ஆரம்பத்தில் ராசிநாதன் சந்திரனின் பார்வை சாதகமாக இருப்பதால் முயற்சிகள் வெற்றியடையும். பூர்வீகச் சொத்து சம்பந்தமாக இருந்த தேக்கநிலை நீங்கும். ராசியில் செவ்வாய் நீச்சமாக இருப்பதால் பலவிதமான சிந்தனையில் மூழ்கி இருப்பீர்கள். பிள்ளைகளால் மன அமைதி கெடலாம். குருபகவானின் பார்வை காரணமாக மனைவி வீட்டில் சிறிது உதவிகள் கிடைக்கும். பழைய வண்டியை மாற்றி புதுவண்டி வாங்குவீர்கள். உத்யோகத்தில் அலைச்சல், மனக்குறை, பயணங்கள் இருந்தாலும், சலுகைகள், ஆதாயம் கிடைக்கும்.

சிம்மம்: நிழல் கிரகங்கள் மற்றும் சனி பகவானின் சஞ்சாரம் காரணமாக அலைச்சல், கோபதாபங்கள் வந்து நீங்கும். அலுவலகப் பணி காரணமாக வெளியூர் சென்று தங்க வேண்டி வரலாம். செவ்வாய் 12ல் இருப்பதால் உடல்நலத்தில் கவனம் செலுத்துவது அவசியம். சமையலறையில் பெண்கள் சற்று கவனமாக இருப்பது நல்லது. புதன் ராசியில் இருப்பதால் ஏதாவது ஒருவகையில் பணம் புரளும். மகனுக்கு பெரிய நிறுவனத்தில் இருந்து வேலைக்கான அழைப்பு வரும். மாமனார் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

கன்னி: தொட்டது துலங்கும் கிரக அம்சங்கள் சாதகமாக உள்ளது. கன்னிப் பெண்களின் ஆசைகள், தேவைகள், ஏக்கங்கள் நிறைவேறும். சுக்கிரன் சுகஸ்தானத்தைப் பார்ப்பதால் குடும்பத்தில் மனநிறைவு உண்டு. தாயார் மூலம் உதவிகள் கிடைக்கும். தசாபுக்தி சாதகமாக உள்ளவர்கள் நான்கு சக்கர வண்டி வாங்குவார்கள். செவ்வாய் நீசமாகி இருப்பதால் சகோதர உறவுகளிடம் அனுசரித்துப் போகவும். நிலம் சம்பந்தமான விஷயங்களில் அவசரம் வேண்டாம். உத்யோகம் சாதகமாக இருக்கும். பதவி உயர்வுடன், இடமாற்றத்திற்கும் வாய்ப்புள்ளது.

துலாம்: நிறை, குறைகள் இணைந்த வாரம். ராசிநாதன் சுக்கிரன் சாதகமாக இருப்பதால் இல்லறம் இனிக்கும். பிள்ளைகள் உங்களைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்பார்கள். சந்திரனின் சஞ்சாரம் காரணமாக திடீர் பயணங்கள், அலைச்சல்கள் இருக்கும். கன்னிப் பெண்களுக்கு தோழிகளால் சில சங்கடங்கள் வந்து நீங்கும். செவ்வாய் நீச்சமாக இருப்பதால் நண்பர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். மனம் ஆன்மிகத்தில் லயிக்கும். பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு குடும்பத்துடன் சென்று வருவீர்கள்.

விருச்சிகம்: சனிபகவானின் சஞ்சாரம் காரணமாக அசதி, சோர்வு, மனக் குழப்பம் வந்து நீங்கும். சுக்கிரனின் பார்வை பலத்தின் காரணமாக பணப்புழக்கம் இருந்தாலும் வீண் செலவுகள் இருக்கும். நண்பர்களுடன் சுற்றுலா சென்று வருவீர்கள். கண் சம்பந்தமான பிரச்னைகளை அலட்சியம் செய்ய வேண்டாம். சூரியனின் அமைப்பு காரணமாக அரசாங்க வேலைகள் சற்று தாமதமாகும். தந்தையுடன் வீண் விவாதங்கள் வேண்டாம். வியாபாரம் லாபகரமாக இருக்கும். புதிய தொழில் தொடங்கும் யோகம் உள்ளது.

தனுசு: செவ்வாய் நீசமாக இருந்தாலும் தன ஸ்தானத்தைப் பார்ப்பதால் கையில் காசு, பணம் புரளும். பிள்ளைகளின் கோரிக்கைகள், ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். சுக்கிரன் 7ல் நிற்பதால் சாதக, பாதகங்கள் உண்டு. கன்னிப் பெண்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. சூரியனின் பார்வை காரணமாக சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். போட்டி, பந்தயங்களில் கலந்துகொண்டு வெற்றி பெறுவீர்கள். அவசரத் தேவைக்காக வாங்கிய கடனை அடைப்பீர்கள்.

மகரம்: அனுகூலம், அலைச்சல், சந்தோஷம், மனக்குறை என்று கலவையான பலன்கள் உண்டு. செவ்வாய் நீச்சமாக இருப்பதால் பேச்சில் கவனம் தேவை. வாக்குவாதம், வாக்குறுதி இரண்டும் வேண்டாம். தந்தையாரின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வேலைக்கான தேர்வு எழுதியவர்களுக்கு வெற்றிச் செய்தி உண்டு. புதன் பார்வை காரணமாக கைமாத்து கொடுத்த பணம் வசூலாகும். புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியத்தை எதிர்பார்க்கலாம். வியாபாரம் கை கொடுக்கும். பணப்புழக்கம் உண்டு.

கும்பம்: ருண, ரோக, சத்ரு ஸ்தான கிரக அமைப்புகளால் ஒரு வேலையை முடிக்க பலமுறை அலைய வேண்டியது இருக்கும். புதனின் பார்வை காரணமாக மனநிறைவு உண்டு. உயர்பதவியில் இருக்கும் நண்பர் உதவுவார். சமையலறைக்குத் தேவையான மின்சாதனங்கள் வாங்குவீர்கள். நண்பர்களிடையே கருத்து வேறுபாடுகள் வந்துபோகும். வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் ஏற்படும் வாய்ப்புள்ளது. வியாபாரம் சீராக இருக்கும். பாக்கிகள் வசூலாகும். வேலையாட்களால் டென்ஷன் இருக்கும்.

மீனம்: உங்கள் ராசிக்கு 4, 5, 6, 7 ஆகிய வீடுகளில் வரிசையாக கிரகங்கள் இருப்பதால் முக்கிய முடிவுகள், திருப்பங்கள் ஏற்படும். சுக்கிரனின் பார்வை காரணமாக இடமாற்றத்திற்கு இடமுண்டு. சந்திரன், குரு தொடர்பால் வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம். சுபகாரிய விஷயமாக திங்கட்கிழமை நல்ல தகவல் வரும். தொழில், வியாபாரம் செழிப்படையும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். பாரம் கை கொடுக்கும். வேலையாட்களை அனுசரித்துச் செல்லவும்.




## எதிர்பார்ப்பை தூண்டும் நொக்கியா 8!

எச்எம்டி குளோபல் நிறுவனம் ஓகஸ்ட் 16ம் திகதி விழா ஒன்றிற்கு ஏற்பாடு செய்து அதற்கான அழைப்பிதழ்களை வெளியிட்டுள்ளது. பிரத்தியேக கூட்டத்தில் நொக்கியா போன்களின் அடுத்த மைல்கல் விழாவாக இது அமையும் என அழைப்பிதழலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விழாவில் அந்நிறுவனம் நொக்கியா 8 சாதனங்களை வெளியிடுவது குறித்து எவ்வித அறிவிப்பையும் வழங்கவில்லை. எனினும் இவ்விழாவில் நொக்கியா 8 ஸ்மார்ட்போன் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நொக்கியா 8 எதிர்பார்க்கப்படும் சிறப்பம்சங்கள்:**

- 5.3 இன்ச் குவாட் எச்டி 2560X1440 பிக்சல் சூப்பர் AMOLED டிஸ்ப்ளே
- ஆக்டாகோர் ஸ்னாப்டிராகன் 835 பிராசஸர்
- 4 ஜிபி / 6 ஜிபி ரேம்
- 64 ஜிபி / 128 ஜிபி இன்டெர்னல் மெமரி
- மெமரியை கூடுதலாக நீட்டிக்கும் வசதி
- அண்ட்ரோய்ட் 7.1.1 நௌக்கட்
- 13 எம்பி டூயல் பிரைமரி கமரா, டூயல்டோன் எல்இடி பிளாஷ்
- 13 எம்பி செல்ஃபி கமரா
- கைரேகை ஸ்கேனர், நோட்டிபிகேஷன் எல்இடி
- டூயல் ஸ்பீக்கர்
- 4ஜி வோல்ட்இ, வைபை, ப்ளூடூத்

புதிய நொக்கியா 8 புளூ, ஸ்டீல் மற்றும் புளூ மற்றும் கோல்ட் காப்பர் நிறங்களில் வெளியாகும் என்றும் இதன் விலை 686 டொலர்கள் அதாவது இலங்கை மதிப்பில் அண்ணளவாக ரூ. 105,335 வரை நிர்ணயம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




## வயர்லெஸ் சார்ஜிங் வசதி கொண்ட முதல் லப்ரொப்

டெல் லேடிட்டியூட் 7285 மொடல் லப்ரொப் சர்வதேச சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வயர்லெஸ் சார்ஜிங் வசதி கொண்ட உலகின் முதல் லப்ரொப், பார்ப்பதற்கு மைக்ரோசாப்ட் சர்பேஸ் ப்ரோ போன்றே காட்சியளிக்கிறது.

இந்த ஆண்டு நடைபெற்ற நுகர்வோர் மின்சாதன விழாவில் அறிமுகம் செய்யப்பட்டது. ரப்லெட் மற்றும் கழற்றக் கூடிய கீபோர்ட் கொண்டுள்ள புதிய லப்ரொப் 13-இன்ச் டிஸ்ப்ளே 2880X1920 பிக்சல் டச் ஸ்கிரீன் வழங்கப்பட்டுள்ளது.

டெல் 2-இன்-1 மொடல் இன்டெல் கோர் i5 பிராசஸர் 128 ஜிபி மெமரி மற்றும் i7 பிராசஸர் 256 ஜிபி மெமரியும் 8 அல்லது 16 ஜிபி ரேம் வழங்கப்படுகிறது.

டெல் 7285 லேடிட்டியூட் நோட்புக் விலை 1199 டாலர்கள் அதாவது இந்திய மதிப்பில் ரூ.78,000 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்துடன் வயர்லெஸ் சார்ஜிங் கீபோர்ட் மற்றும் வயர்லெஸ் சார்ஜிங் மேட் 549.99 டாரல்கள் அதாவது இந்திய மதிப்பில் ரூ.35,439 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



## இலவச வைபை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை!

ஷொப்பிங் மோல், உணவகம் என எங்கு சென்றாலும் இலவச வைபை நம்மை வரவேற்கும் போது சில நிமிட பேஸ்புக், அல்லது வட்ஸ்அப் செக் செய்ய நம்மில் பலரும் விரும்புவோம்.

சில மணி துளிகள் பயன்படுத்தக் கூடிய வைபை நமக்கு பேராபத்தை விளைவிக்கும் என நம்மில் பலரும் அறியாத ஒன்றாக இருக்கிறது. இவ்வாறு இலவச வைபை ஆபத்துக்களை அறியாதோர், அவற்றை பயன்படுத்தும் போது அவசியம் கவனிக்க வேண்டியவற்றை தொடர்ந்து பார்ப்போம்.

### ஓ.எஸ். அப்டேட்:

இலவச வைபை பயன்படுத்தும் போது உங்களது ஸ்மார்ட்போன் ஓ.எஸ். அப்டேட் செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஸ்மார்ட்போன்களுக்கு வழங்கப்படும் அப்டேட் புதிய அம்சங்களை வழங்குவதோடு, ஸ்மார்ட்போன்களை பாதுகாப்பாகவும், மால்வேர் பாதிக்காதபடி இயங்குதளத்தை கடினமாக்குகிறது. இதனால் ஹக்கர்கள் உங்களது தகவல்களை திருட முடியாது.

இதனால் உங்களது ஸ்மார்ட்போன் இயங்குதளத்தை எப்போதும் அப்டேட் செய்திருப்பது அவசியம் ஆகும்.

### மொபைல் அண்டிவைரஸ்:

பொது வைபை இணைப்புகளில் மாலவேர் தாக்குதல்களுக்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கும். இதனால் ஸ்மார்ட்போனில் முறையான அண்டிவைரஸ் மென்பொருள்களை இன்ஸ்டோல் செய்வது அவசியம் ஆகும். இவ்வாறான மென்பொருள்கள் மால்வேர் தாக்குதல்களை எதிர்கொண்டு ஸ்மார்ட்போனில் உள்ள தகவல்களை பாதுகாக்கும்.

### பொது வைபை வேகம் குறைந்தால்:

இலவசவைபைபயன்படுத்தும்போது இண்டர்நெட் வேகம் வழக்கத்தை விட மிக மோசமாக இருக்கும் பட்சத்தில் வைபை இணைப்பை உடனடியாக துண்டித்து விடுவது நல்லது.

இவ்வாறு இண்டர்நெட் வேகம் குறைவாக இருக்கும் போது வைபை ரவுட்டர் ஹக் செய்யப்பட்டிருப்பதை உணர்த்தும். இதுதவிர உங்களது சாதனத்தில் இருந்து தகவல்கள் மற்றொரு சாதனத்திற்கு பரிமாற்றம் செய்யப்படும் போது இண்டர்நெட் வேகம் குறையும்.

### ஒன்லைன் ஷொப்பிங்:

பொது இடங்களில் பயன்படுத்தும் போது ஒன்லைன் ஷொப்பிங் மற்றும் வங்கிநடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. சில டூல்களை கொண்டு ஸ்கேமர்கள் உங்களது வேலையை சிரமப்படுத்தவோ அல்லது இடையூறு செய்ய முடியும்.

இதோடு உங்களது பாஸ்வேர்டுகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளும் நிறுவனங்களுடன் மட்டும் ஷொப்பிங் செய்ய வேண்டும். முடிந்த வரை ஷொப்பிங் மற்றும் வங்கிப் பணிகளை மேற்கொள்ள மொபைல் இண்டர்நெட் டேட்டா பயன்படுத்துவது நல்லது.



## சுசுகி விஸ்டார்ம் 100 எக்ஸ்.டி பைக்!

சர்வதேச சந்தைக்காக சுசுகி நிறுவனம் விஸ்ட்ராம் 1000 பைக்கில் ஸ்டார்ன்டர்ட் மற்றும் எக்ஸ்.டி என இரண்டு மொடல்களை அறிமுகம் செய்து வைத்தது.

வெளியான நாடுகளில் பெரும்பாலும் நல்ல வரவேற்பை தக்கவைத்துக்கொண்டு வரும் இந்த இரு பைக்குகளும் தென்னாசியாவில் விற்பனையில் இல்லை.

இது சுசுகி விஸ்டார்ம் சிரீஸில் வெளியிட்ட பைக்கின் மேம்படுத்தப்பட்ட மொடலாகும். இந்தியாவில் வெளிவரும் வரும் போது விஸ்டார்ம் 1000 எக்ஸ்.டி பைக்கில் சில கூடுதலான அம்சங்கள் சேர்க்கப்படவுள்ளன.

தோற்றம், விண்ட்ஸ்கீரினை மூன்று விதமாக மாற்றிக்கொள்வது மற்றும் புதிய நிறங்கள் கொண்ட தோற்றம் என தென்னாசியாவில் வெளியாகும் விஸ்டார்ம் 1000 எக்ஸ்.டி பைக்கில் கூடுதல் அம்சங்கள் இருக்கும்.

எனினும் எஞ்சின் திறனில் எந்த மாற்றமும் இருக்காது. விட்வின் சிலிண்டர் கொண்ட 10377 சிசி திறன் பெற்ற இதனுடைய லிக்குவிட் கூல்ட் எஞ்சின் 6ஸ்பீட் கியர் பொக்ஸோடு கூட்டணி அமைத்துள்ளது.

மிகவும் செயல்திறன் கொண்ட இந்த தேர்வுகளுடன் பைக்கின் வாடிக்கையாளர்களுக்கு அதிகட்பட்சம் 98 பிஎச்பி பவர் மற்றும் 103 என்.எம் டார்க் திறனை இது வழங்கும்.

முன்பக்க சக்கரங்கள் 19இஞ்ச் அளவிலும், பின் பக்க சக்கரங்கள் 17இஞ்ச் அளவிலும் இருக்கும். சூயல்ஸ்போர்ட் டியூப்லெஸ் வகையை சேர்ந்த பைக்கின் டயர்கள் கொயில் ஸ்பிரிங்க்ஸுடன் கூடிய டெலஸ்கோபிக் மோனோ அப்லெயர் ஷொக்குகளை பெற்றிருக்கும்.

பாதுகாப்பு தேவைகளில் பாஷின் டிராக் பிரேக் சிஸ்டம் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் ஏபிஎஸ், கோர்னரிங் ஏபிஎஸ், போன்ற இத்யாதிகளும் இதில் உள்ளன.

சுசுகி தயாரித்து வரும் இந்த சிரீஸ் பைக்குகளில் இருப்பது போன்ற ரைட்பைவயர் தொழில்நுட்பம் இதில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவிப்பின் காரணமாக தென்னாசியா வாடிக்கையாளர்களிடம் சிறு பரபரப்பை ஏற்படுத்தியுள்ள சுசுகி விஸ்டார்ம் 1000 எக்ஸ்.டி பைக் உடைய விலையை கேட்டால், தலை சுற்றும் இலங்கை மதிப்பில் அண்ணளவாக 30 இலட்சத்திற்கு விற்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஹாண்ட் பாக்ஸில் பலவிதம்!



ஹாண்ட்பாக் என்பதில் அலுவலக பயன்பாடுகள் தவிர்த்து சாதாரணமான தினசரி பயன்பாடு, விழாவிற்கு ஏற்றது என்றவாறு பலரகங்கள் உள்ளன. அதற்கென தனித்தனி பெயர்களும், வித்தியாசமான வடிவமைப்பும் கூறப் படுகின்றன. கையில் பிடித்து எடுத்து செல்ல ஏதுவான கிளெட்ச், கையில் மாட்டக்கூடிய டைட் பாக், தோள் பகுதியில் மாட்டக்கூடிய ஜோலா, கையில் சிறிய கைப்பிடியுடன் பிடிக்கக்கூடிய பொட்லி என்பதுடன் லெதர் மற்றும் மூங்கில் பாக் (bag) குகளும் விற்பனைக்கு வருகின்றன.

**ஜோலா பாக்:**

ஜோலா பாக் பெரும்பாலும் துணிகளில் உருவாக்கப்படுபவை. எம்பிராய்டரி மற்றும் கைவினை வேலைப்பாட்டுடன் உருவாகும் இந்த பாக் அனைத்து பெண்களும் விரும்பும் வகையிலானது.

வி.வடிவில் வெட்டப்பட்ட பாக்இன் திறப்பு பகுதியுடன் மேல் பகுதி தொங்கும் அமைப்பு தைக்கப் பட்டது இணைத்து கட்டப்பட்டு இருக்கும். பாக்இன் அகலமான பகுதியில் இராஜஸ்தான் எம்பி ராய்டரி மற்றும் கண்ணாடி வேலைப் பாட்டுடன் செய்யப்பட்டிருக்கும். தினசரி மற்றும் கல்லூரி பயன் பாட்டிற்கு ஏற்றது ஜோலா பாக்.

**டோட் பாக்:**

ஸ்டைலாக கையை மடக்கி பிடித்தபடி நடந்து செல்லும் போது முன்கை பகுதியில் தொங்கிய படி எடுத்து செல்லக்கூடியதே டோட் பாக். இது துணி பிரிண்ட் செய்யப்பட்டது. சணல் இழையில் செய்யப்பட்டது என்றவாறு பல பிரிவுகளில் கிடைக்கின்றன. நளினமாக கையில் பிடிக்கக்கூடிய கைப்பிடியுடன் சதுரம் மற்றும் செவ்வக அமைப்பில் உருவாக்கப்படுகிறது போட் பாக். பல வண்ணங்களில் பிரிண்ட் மற்றும் உப்பளான அமைப்பில் இவ் bag குகள் அழகுற வடிவமைக்கப்படுகிறது.

**பொட்லி பாக்ஸ்:**

பழங்கால சுருக்குபைகள் இன்றைய நாளில் அழகிய ரிட்டர்ன் கிப்ட் பாக் (தீணீரீ)குகளாக உருமாறின. அதில் மேலும் அழகிய மேம்படுத்தப்பட்ட பெண்கள் எடுத்துச் செல்லக்கூடிய பொட்லி bag களை உருமாற்றம் பெற்றுவிட்டன. பட்டு துணியில் சரிகை மற்றும் மணி வேலைப்பாட்டுடன், மணிகள் கோர்க்கப்பட்ட கைப்பிடி, சரிகை நூல்கயிறு, கல்பதக்கும் என்றவாறு பல கைவினை வேலைப்பாட்டுடன் பொட்லி பாக்ஸ் உலா வருகின்றன.

இதில் இறுக்க கட்டக்கூடிய கயிறு அமைப்பு மற்றும் ஜிப் மூலம் திறக்கக்கூடிய அமைப்பு என்றவாறும் கிடைக்கின்றன. பண்டிகை மற்றும் குடும்ப விழாக்களுக்கு எடுத்து செல்லக்கூடியது.

**ஸ்லிங் பாக்:**

தோள்பட்டை பகுதியிலிருந்து இடுப்பின் கீழ் பகுதிவரை நீளமாக தொங்கக்கூடிய வகையிலான ஸ்லிங் பாக் மெத்தென்ற வெல்வெட் மற்றும் வண்ண துணிகள் மேற்பகுதி ஒட்டியவாறு சதுர அமைப்பில் வருகின்றன. இருபக்க பகுதிகளிலும் வேலைப்பாடும், தொங்கும் கயிறு அமைப்புகள் கம்பி மற்றும் மணிகள் உள்ளவாறு உள்ளன. சாதாரணமாக எங்கும் கொண்டு செல்லக்கூடியவை.

# முதல் முறையாக ஆண்களை பார்க்கும் பெண்கள் கவனிக்கும் விஷயங்கள்

பெண்கள் கண்களை பார்த்தே அனைத்தையும் கண்டு பிடித்துவிடுவார்கள். நீங்கள் எங்கே பார்த்து பேசுகிறீர்கள், உண்மையாக தான் பேசுகிறீர்களா, உங்களது நோக்கம் என்ன என்பதை எல்லாம் கண்களை பார்த்தே பெண்களால் கண்டுபிடித்து விட முடியும்.

நீங்கள் சாதாரண சேர்ட் அணிந்து செல்கிறீர்களோ அல்லது டி சேர்ட் அணிந்து செல்கிறீர்களா என்பது அவசியம் அல்ல. அது அவர்களின் மனதை கவர்ந்த நிறமா என்பதுதான் முக்கியம். கருப்பு, மெரூன், பச்சை நிற ஆடைகள் பெண்களிற்கு பிடிக்கும்.

நீங்கள் அவரது முன் எப்படி அமருகிறீர்கள். எப்படி பேசுகிறீர்கள் என்பதைதான் அதிகமாக கவனிப்பார்கள். எனவே நீங்கள் நாகரீகமான முறையில் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.


நீங்கள் எந்த அளவுக்கு நம்பிக்கை குரியவராக நடந்துகொள்கிறீர்கள், அவர்கள் உங்களுடன் இருக்கும் போது எந்த அளவுக்கு பாதுகாப்பாக உணர்கிறார்கள் என்பதை எல்லாம் கவனிப்பார்கள்.


நீங்கள் அந்த பெண்ணுக்கோ அல்லது உங்களை சுற்றி உள்ளவர்களின் கேள்விகளுக்கோ எப்படி விடையளிக்கிறீர்கள் என்பதை வைத்தே பெண்கள் உங்களது குணத்தை எடை போட்டுவிடுவார்கள். அவர்களது பார்வையில் இருந்து எதுவும் தப்பிக்க முடியாது.

பெண்கள் ஆண்களிடம் அதிகம் விரும்புவது அவர்களிடம் இருக்கும் நகைச்சுவை உணர்வைதான். உங்களுக்கு நகைச்சுவை உணர்வு இருக்கிறதா என்பதை அவர்கள் கண்காணிப்பார்கள்.

பெண்கள் உங்களது கைகளை கவனிப்பார்கள் என்று கூறினால் உங்களால் நம்ப முடியாது தான். ஆனால் நீங்கள் அவர்களுக்காக நாற்காலிகளை தருவது, கைகளின் அசைவுகள் போன்றவற்றை கண்காணித்துக் கொண்டு தான் இருப்பார்கள்.

இவை அனைத்தையும் பார்த்து உங்களை ஓரளவுக்கு எடை போட்டிருப்பார்கள். இறுதியாக உங்களது சிரிப்பை தான் அவர்கள் பார்ப்பார்கள். ஒரு நேர்த்தியான வரவேற்கும் சிரிப்பு மட்டும் போதும் அவர்களை கவர.. நீங்கள் விழுந்து விழுந்து சிரிப்பது, ஏளனமாக சிரிப்பது இவை எல்லாம் முதல் சந்திப்பில் வேண்டாமே!





# தொடை, அடிவயிறு கொழுப்பை குறைக்கும் பயிற்சிகள்

**ஜம்பிங் ஜக்ஸ் (Jumping Jacks) :**

விரிப்பில் நேராக நிற்க வேண்டும். கால்களைச் சற்று அகட்டிக் குதிக்க வேண்டும். அதே நேரத்தில் கைகளைத் தலைக்கு மேல் உயர்த்திக் குதித்துக்கொண்டே தட்ட வேண்டும். பழைய நிலைக்கு வந்தவுடன் கைகளை இயல்பாக வைக்க வேண்டும். சிறிது இடைவெளி விட்டு, இந்தப் பயிற்சியை ஐந்து நிமிடங்கள் வரை செய்யலாம்.

***பலன்கள்:*** குதிப்பதால் இதயத்துடிப்பு அதிகரிக்கும். உடலில் உள்ள கலோரிகள் அதிகளவில் செலவிடப்படும். உடல் எடை கட்டுக்குள் வரும். குதிக்கும்போது ஆழமாக மூச்சுவிடுவதன் மூலம் உடல் முழுவதும் ஆக்சிஜன் சென்றடைவதால், ரத்தம் சீராகப் பாயும். கொழுப்பைக் கரைக்கும். தொடைப்பகுதியில் உள்ள தசைகள் வலுவடையும்.

**அப்லிஃப்ட் ஹோல்ட் (Uplift Hold)**

விரிப்பில் மல்லாந்து படுக்க வேண்டும். கைகள் பக்கவாட்டில் இருக்கட்டும்; கால்களை உயர்த்தி இருக்க வேண்டும். இப்போது கால்களையும் கைகளையும் ஒரே சீராக மேலே உயர்த்த வேண்டும். தூக்கும்போது முழங்கை மற்றும் முழங்காலை மடக்காமல் தூக்க வேண்டும். முடிந்தால் 90 டிகிரி கோணத்தில் கை மற்றும் கால்களை உயர்த்திச் சில நிமிடங்கள் வரை நிறுத்தலாம். பின்பு, கீழே இறக்க வேண்டும். இதேபோல் தொடர்ந்து ஐந்து முறை செய்யலாம்.

***பலன்கள்:*** அடிவயிற்றுப் பகுதியில் உள்ள தசைகள் குறையும். கர்ப்பப்பை வலுப்பெறும். சிறுநீர்ப்பைத் தூண்டப் பட்டு, சிறுநீர் சீராக வெளியேற உதவும். தொப்பை குறைய உதவும். உடலின் சமநிலைத்தன்மை மேம்படும்.

# வீட்டில் ஹெயார் அயர்னிங் செய்யும் போது செய்யக்கூடாதவை

கூந்தலின் தோற்றம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்கும். நமக்கு பிடித்தபடி, சுருளாகவோ, நேராகவோ, அலை போலவோ மாற்ற இப்போது எத்தனையோ நவீன கருவிகள் வந்துள்ளது. அப்படி ஒன்றுதான் ஹெயார் அயர்னிங். எளிதில் வீட்டிலேயே செய்துவிடலாம். அப்படிச் செய்யும் போது கவனிக்க வேண்டிய சில விஷயங்களைப் பற்றி காண்போம்.

ஒருதடவை ஹெயார் அயர்னிங் செய்தால் அடுத்து வரும் நாட்களில் முடி அதிமாய் உதிரும். தலை அரிப்பு பொடுகுத் தொல்லை, அதிக வறட்சி ஆகியவைகள் உங்கள் கூந்தலில் ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் நீங்கள் சரியான முறையில் ஹெயார் அயர்னின் செய்யவில்லை என்று அர்த்தம்.

கடைசி நேரத்தில் அவசரமாக தலைக்கு குளித்தபின் ஈரத்துடனே ஹெயார் அயர்னிங் செய்யாதீர்கள். அப்படி செய்வது மிகவும் தவறு. கூந்தலில் ஈரம் பட்டவுடன் கூந்தல் மிகவும் மென்மையாக மாறிவிடும். அந்த சமயத்தில் அதிக வெப்பம் கொண்ட கருவியினை உபயோகப்படுத்தினால், தலைமுடி வலுவிழந்து மோசமான விளைவை தரும். அதிகமாய் முடி உதிர்தல் ஏற்படும்.

ஹெயார் அயர்னிங் கருவியில் 300 டிகிரிக்கு மேல் வெப்ப நிலையை அமைக்கக் கூடாது. கூந்தலுக்கு இது மிகவும் கேடு தரும். மிக அதிக வெப்பம், முடியினால் தாங்க இயலாது. ஹெயார் அயர்னிங் செய்யும்போது கருவியில் அழுக்கு, தூசு, கூந்தலிலிருந்து வரும் எண்ணெய், ஆகியவை உள்ளே தங்கியிருக்கும். இதனை அப்படியே மறுமுறை உபயோகப்படுத்தும்போது கூந்தலில் பொடுகுத் தொல்லை, வறட்சி தொற்று ஆகியவற்றை ஏற்படுத்தும். இந்த கருவிக்கென்ற பிரத்யோகமாக கிடைக்கும் ஓயிலைக் கொண்டு கருவியை கண்டிப்பாக சுத்தப்படுத்த வேண்டும்.





# மாதவிடாய் காலத்தில் பெண்கள் செய்யும் தவறுகள்

மாதவிடாய் சுழற்சி என்பது ஒவ்வொரு பெண்ணும் மாதந்தோறும் அனுபவிக்கும் ஒன்று. இக்காலத்தில் பெண்கள் பல கஷ்டங்களை அனுபவிப்பார்கள். மேலும் மாதவிடாய் காலத்தின் போது, ஹோர்மோன்களில் மாற்றங்கள் ஏற்படுவதால், அவர்களின் மனநிலையிலும் மாற்றம் ஏற்பட்டு, எரிச்சலுடனும் கோபத்துடனும் நடந்து கொள்வார்கள்.

அதோடு மாதவிடாய் காலத்தில் பெண்கள் ஒருசில மோசமான தவறுகளையும் தங்களை அறியாமலேயே செய்வார்கள். இங்கு மாதவிடாய் காலத்தில் பெண்கள் செய்யும் தவறுகள் பட்டியலிடப்பட்டுள்ளன

மாதவிடாய் காலத்தில் நிறைய பெண்கள் செய்யும் தவறுகளுள் ஒன்று தான் உணவுகளைத் தவிர்ப்பது. நாள் முழுவதும் சிறப்பாக செயல்பட உடலுக்கு தேவையான ஆற்றலை உணவுகள் தான் வழங்குகின்றன. அந்த உணவுகளைத் தவிர்த்தால், அதனாலேயே கடுமையான வயிற்று வலியை சந்திக்கக்கூடும்.

ஜங்க் உணவுகள் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை. எனவே மாதவிடாய் காலத்தில் ஜங்க் உணவுகளை சாப்பிடுவதைத் தவிர்த்து, ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடுங்கள்.

மாதவிடாய் காலத்தில் பாதுகாப்பற்ற முறையில் உடலுறவில் ஈடுபட்டால், அதனால் பக்டீரியாக்கள் மற்றும் நோய்த்தொற்றுக்களால் கடுமையாக அவஸ்தைப்படக்கூடும். எனவே முடிந்தவரை மாதவிடாய் காலத்தின் முதல் மூன்று நாட்கள் உடலுறவில் ஈடுபடுவதைத் தவிர்த்திடுங்கள்.

பொதுவாக பல பெண்கள் மாதவிடாய் காலத்தில் இரவில் தூங்கமாட்டார்கள். இப்படி தூங்காமல் இருந்தால், அதனால் பல உடல்நல பிரச்சனைகளைத் தான் சந்திக்க வேண்டியிருக்கும். எனவே மாதவிடாய் காலத்தில் தூக்கத்தைத் தவிர்க்காதீர்கள். மாதவிடாய் காலத்தில் ஓய்வு மிகவும் அவசியம். இக்காலத்தில் பெண்கள் மிகவும் உணர்ச்சிவசப்படுவார்கள். எனவே முடிந்தவரை மாதவிடாய் காலத்தில் வேலைக்கு செல்லாமல் ஓய்வெடுக்க முயற்சி செய்யுங்கள்.

யோகா, உடற்பயிற்சி போன்றவை உடலுக்கு நன்மை விளைவிக்கக்கூடியவை தான். ஆனால் அதை மாதவிடாய் காலத்தில் பெண்கள் தவிர்ப்பதே நல்லது. பல பெண்கள் மாதவிடாய் காலத்தில் சானிடரி பேடுகளுக்கு பதிலாக துணியைப் பயன்படுத்துவார்கள். ஆனால் துணி நோய்த் தொற்றுக்களையும், துர்நாற்றத்தையும் உண்டாக்கும். ஆகவே இக்காலத்தில் துணிகளுக்கு பதிலாக சுத்தமான சானிடரி பாடுகளைப் பயன்படுத்துவதே சிறந்தது.



# குழந்தைகளிடம் கத்துவதால் ஏற்படும் பிரச்சனைகள்

குழந்தைகள் செய்யும் சேட்டைகளுக்கு பெற்றோர்கள் டென்சன் ஆகி கத்துவது வாடிக்கை. இது குழந்தைகளுக்கு மிகப்பெரிய பாதிப்புகளை உண்டாக்குகிறது. நாங்கள் தான் குழந்தைகளை அடிக்கவில்லையே காயம் ஏற்பட்டு விடக்கூடாது என்று அவர்களை எச்சரிக்கும் விதமாக, குழந்தைகளை மிரட்டுவதற்காக, அவர்களின் பாதுகாப்பிற்காக என்று எப்படி சமாதானம் சொன்னாலும் பாதிப்பு என்பது உண்மை தான். குழந்தைகளை அவர்கள் வயதிற்கு தகுந்தாற் போல எப்படி அணுக வேண்டும் என்பதற்கான சில டிப்ஸ் இதோ...

இந்த வயதில் குழந்தைகளுக்கு அரவணைப்பு மிகவும் அவசியம். விளையாட்டாகவோ அல்லது உங்களை அறியாமலோ குழந்தையிடம் மிரட்டும் தொனியில் கத்துவது என்பது மிகவும் ஆபத்தானது. அந்த அதிர்வை குழந்தைகளால் ஏற்றுக் கொள்வது சிரமம் என்பதால் தூக்கத்தில் அதிர்ந்து எழுந்து அழும், இதனால் குழந்தையின் தூக்கம் பாதிக்கப்படும். இதனைத் தவிர்க்க மெலிதாக அவர்களை அணுகுவதே சிறந்தது. அதற்கு விரைவாக ரெஸ்பான்ஸ் கிடைப்பதை நீங்கள் கண்கூடாக உணரலாம்.

குழந்தைகளிடத்தில் கத்துவது என்பது அவர்களை நல்வழிப்படுத்தாது மாறாக, அவர்களின் தன்னம்பிக்கையை குலைத்து அவநம்பிக்கையை ஏற்படுத்தும். இந்த வயதில் குழந்தைகள் ஒப்பிட்டு பார்க்க ஆரம்பித்துவிடும். தன்னிடம் யார் நன்றாக பேசுகிறார்கள், எப்படி தன்னிடம் அணுகுகிறார்கள் என்று புரிந்து கொள்ள ஆரம்பிக்கும். இந்த வயதில் குழந்தைகளிடம் கத்துவது பெற்றோர் குழந்தை உறவு முறையை பாதிக்கும். தன் எண்ணத்தை வெளிப்படுத்தாது தனிமைபடுத்திக் கொள்ள அதிகம் விரும்ப ஆரம்பித்துவிடும்.

கோபத்தை அன்பால் அணுகுங்கள், ஓடி வந்து எதையாவது சிந்திவிட்டால், ஏன் ஓடி வந்தாய்? என்று கத்தி இனிமே வந்த கால ஒடச்சுருவேன் என்று மிரட்டாமல், கொட்டிருச்சு வாங்க க்ளீன் பண்ணலாம் என்று அழைத்து நீங்கள் சுத்தம் செய்யும் போது உடன் வைத்துக் கொள்ளுங்கள் உங்களுக்கு இரட்டிப்பு வேலை என்று நினைப்பதை குழந்தையிடம் பக்குவமாக உணர்த்துங்கள். மெதுவா வந்தா கொட்டியிருக்காதுல்ல இனிமே வீட்டுக்குள்ள ஓடிவரக்கூடாது என்று புரியவைத்திடுங்கள்.

குழந்தைகளிடத்தில் கத்துவது எந்த அளவிற்கு ஆபத்தோ அதேயளவு குழந்தைகளிடம் பேசாமல் இருப்பதோ அல்லது அவர்களை கண்டிக்காமல் இருப்பதோ தவறு. சிறு வயதில் அதிக செல்லத்துடன் அவர்களை அணுகினால் வளர்ந்த பின்பும், தவறுகள் செய்யும் போதும் அதே செல்லத்துடன் தன்னை அணுக வேண்டும் என்று விரும்புவர் அது பொய்க்கும் போது மனரீதியாக பெரிதும் பாதிக்கப்படுவர். அதனால் அன்பாக திருத்துங்கள். கடிந்து, கத்தாமல் அரவணைத்து தவறை உணர்த்துங்கள்.

அளவெட்டி க.ஜெயக்குமாரன்

தீபத்தின் விவாதப் பகுதியில் போன வாரம் பிரசுரமான கட்டுரைகள் பற்றிய பல மாறுபட்ட கருத்துக்கள் என்னிடம் உள்ளன. அந்தக்கட்டுரையை எழுதிய நிலாந்தனிற்கு சமூக அசை வியக்கம், இயங்கியல் முறைமைகள் புரிய வில்லை. அதனால்தான் 1970களில் ஆரம்பித்த இளைஞர் எழுச்சியை அவரால் புரிந்து கொள்ள முடிய வில்லை. இன்றைய தமிழ்தேசி மக்கள் முன்னணியாகட்டும், அன்றைய தமிழ் இளைஞர் பேரவையாகட்டும் அனைத் திற்குமே ஒரு பாத்திரம் உள்ளது. வரலாற் றில் சில சம்பவங்கள், அமைப்புக்களிற்கு வெளிப்படையான அடையாளம் இருக் காது. சிலவற்றின் அடையாளத்தை வாழும் காலத்தில் யாரும் புரிந்து கொள் வதில்லை.

சோக்கிரட்டீஸ், கலிலியோ கலிலி போன்றவர்களை அவர்கள் வாழ்ந்தகாலத் தில் உலகம் சரியாக புரிந்து கொண்ட தில்லை. அதற்காக அவர்கள் வரலாற்றில் இடம்பிடிக்கவில்லையா? 1947, 1960 இல் தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வி யடைந்தவர் ஹண்டி எஸ்.பேரின் பநாயகம். அதற்காக ஹண்டியோ, ஹண்டி முன்வைத்த கொள்கைகளோ பிழையானவை அல்ல. 1924இல் ஹண்டி எதை சொன்னாரோ, அதையொட்டிய ஒரு சமூகத்தைதானே இன்று எதிர் பார்க்கிறோம். தமிழர்களின் சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்ற ஹண்டியிடம் பொருத்தமான யோசனைகள் இருந்தன. தமிழ், சிங்கள மொழிகளை தேசிய மொழி களாக்கி, பிரிக்கப்படாத நாட்டிற்குள் தீர்வைத்தான் ஹண்டி 1924இலேயே வைத்தார். இனப்பிரச்சனை தொடர்பாக ஹண்டி கொண்டிருந்த தீர்மானங்களில் விமர்சனங்கள் இருந்தன. ஆனால் அவர் முற்றிலும் நிராகரிக்கப்படத்தக்கவர் அல்ல அவர்.

தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக்கூட்டணி என எந்த அமைப்பின் அரசியலாலும் தீர்வை பெற முடியாதென இளைஞர்கள் நினைத் தார்கள். இளைஞர்களின் அந்த மாற்றம் தமிழர் வரலாற்றில் முக்கிய திருப்பம். அதையாரும்கொச்சைப்படுத்த முடியாது. முத்துக்குமாரசுவாமி, சந்ததியார், இறைகுமாரன், உமைகுமாரன் மட்டு மல்ல அப்பொழுது சிவகுமாரன், தங்கத் துரை, பிரபாகரன், பத்மநாபா உள்ளிட்ட பலர் ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இயங்கினர். 1972 இல் இருந்து பிரபாகரன் ஆயுதப்பரிச் சயத்துடன் இருக்கிறார். அவர் ஒரு நிழல் அரசாங்கத்தை 1990களின் தொடக் கத்தில்தான் உருவாக்கினார். கிட்டத் தட்ட இருபது வருடம் அதற்காக தேவைப்பட்டது. ஒரு படிமுறை வளர்ச்சி, பட்டறிவின் ஊடாகத்தான் எதையும் அடைய முடியும். அந்த புரிதல் தேவை.

2000களில் புலிகளின் கனரக ஆயுதங் களுடன் மரபுச்சண்டை வல்லமையுள்ள படையணி இருந்தது என்பதற்காக, அவர்கள் லெப்.சங்கரை பார்த்து சிரிக்க வில்லை. ஒரு சின்ன துவக்கை வைத்துக் கொண்டும் இராணுவத்திடம் சூடு வாங்கினாயா என யாரும் எழுதவுமில்லை.

அகிம்சை வழியில் வந்த தமிழ் அரசியலை, ஆயுத வழிக்கு மடை மாற்றியது ஒரே நாளில் நடந்ததல்ல. கிட்டத் தட்ட பத்து வருடங்கள் நடந்தது. இந்தபத்து வருட செயற்பாட்டாளர்கள்தான் மேலே சொன்னவர்கள். இதில் முத்துகுமார சுவாமி பாதியில் போனார். இறைகுமாரன், உமைகுமாரன் புலிகளை ஆதரித்தார்கள் என்பதெல்லாம் குற்றச்சாட்டுகளே அல்ல. இறைகுமாரன், உமைகுமாரன் செயற்பாட்டு தளத்தில் இருந்து ஒதுங்க வில்லை.

ஜனநாயகவழி பலன் தராது என்றுதான் செய்து, தனது அமைப்பு முன்னெடுத்த அரசியல்வழிமுறையைத்தான் இல்லாமல் செய்தார். ஆனால் தமிழ் அரசியலை அவர் ரிவர்ஸில் எண்பதுகளில் கொண்டு போய் நிறுத்தவில்லை. ஒரு அஞ்சலோட் டத்தை போல, தமிழ்தேசிய அரசியல் நகர செய்திருக்கிறார். 2009 இல் அரசியல் தலைமையை ஏற்ற தமிழ்தேசிய கூட்ட மைப்பு எதையும் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்கவில்லை. அதனால்தான், அவர்கள் தடுமாறுகிறார்கள். தமது பயணம் எப்படியானது, அதை எப்படி அடைவது, அதற்காக எதையெல்லாம் இழக்க தயாராக இருக்கிறோம் என்பதை பற்றி அவர்களிடம் தெளிவான சிந்தனைகள் இல்லை.

நாடகத்தில் ஒரு பாத்திரமேற்றவர் வராமல் விட்டதால் திடீரென சம்பந்த மில்லாத ஒருவரை மேடையேற்றினால், எங்கிருந்து தொடங்குவது, எப்படி தொடங்குவதென்பது தெரியாமல் தள்ளாடுவதை போல, கூட்டமைப்பினர் தடுமாறுகிறார்கள். இந்த அரசியல் இயக் கத்தை ஆரம்பத்தில் இருந்து அவர்கள் கட்டியெழுப்பியிருந்தால், போக வேண்டிய பாதையெது என்பதில் அவர்களிற்கு தெளிவிருந்திருக்கும்.

பிரபாகரன் மட்டுமல்ல, புலிகளால் தடைசெய்யப்பட்ட எல்லா இயக்கங் களும் தமக்கான பாத்திரத்தை வகித்தன என்பதை நேர்மையாக ஒப்புக்கொள்ள வேண்டும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தை புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் முதலாவது வடக்கு கிழக்கு மாகாணசபை தேர்தலில் அவர்கள் போட்டியிடவில்லை. புலிகளை போல ஏனைய எல்லா இயக் கங்களும் பகிஸ்கரித்திருந்தால், மாகாண சபையை இயங்கவிடாமல் அரசு தடுத்தது அம்பலமாகியிருக்காது. அருமை யான சந்தர்ப்பத்தை தமிழர்கள் தவற விட்டார்கள் என்ற அவப்பெயர்தான் வரலாறெல்லாம் நீடித்திருக்கும். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் தமிழீழ பிரகடனம் செய்தது. அதாவது தமிழர் பிரச்சனையை தீர்ப்பதாக இலங்கை கொடுத்த வாக்குறுதியும், அந்த பொறுப்பை ஏற்ற இந்தியாவின் உத்தரவாதமுமாகிய இந்திய இலங்கை உடன்படிக்கையை நம்பி, தமிழீழ கோரிக்கையை கைவிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு மீண்டும் தமிழீழ கோரிக்கைக்கு திரும்பியது. இது உடன்படிக்கையின் பலவீனத்தை காட்டியது.

சகோதர மோதல்கள் உள்ளிட்ட எத்தனை குற்றச்சாட்டுகளை இயக்கங்கள் மீது சுமத்தினாலும், ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். அவர்கள் தமது இலட்சியத்திற்காக உயிரையும் கொடுக்க தயாராக இருந்தவர்கள். உயிரையும் கொடுத்தவர்கள். இதற்காக அவர்கள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்பதல்ல. அவர்களிடம் அடிப் படை நேர்மையிருந்தது. இலட்சியத்திற் காக எதையும் செய்ய தயாராக இருந்தார்கள். சமூக பொறுப்புணர்வு இயல்பாகவே உருவாகியிருந்தது. ஆனால் நமது ஜனநாயக தலைவர்களிடம் அது மருந்திற்கும் கிடையாது. இன்றைய அரசியல்வாதிகளில் எத்தனை பேரின் குடும்பம் இலங்கையில் உள்ளது? எத்தனை பேருக்கு இந்தியாவில் வீடுள்ளது? எத்தனை பேரின் பிள்ளைகள் இந்தியா வில் இருக்கிறார்கள்? அவர்களின் சொத்து மதிப்பு என்ன? இதையெல்லாம் நேர்மையாக அறிந்தால் தலைசுற்றும்.

அதை விடுவோம். தாங்கள் சொல்லும் அரசியலிற்காக இவர்களில் எத்தனை பேர் தியாகம் செய்ய தயாராக இருக்கி றார்கள்? மக்கள் போராட்டங்களில் முன்வரிசைக்கு வந்து படமெடுக் கிறார்கள். இவர்களின் பிள்ளைகள் யாராவது இதில் கலந்துகொண்டார்களா?

இன்று வேட்பாளர்களை எப்படி தேர்வு செய்கிறார்கள்? பணமுள்ள, ஊரில் அறிமுகமானவர்களைத்தான் தேர்வு செய்கிறார்கள். சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்கள், போராட்ட மனநிலையுடையவர்களை தேர்வுசெய்வ தில்லை. வடக்கில் சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், மாவை தவிர்ந்த வேறு யார் நீண்ட செயற்பாட்டு வரலாறுடையவர்கள்?

ஆனால் இன்று இயக்க அரசியலை யாரும் விமர்சிக்கலாமென்று நினைக் கிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மீது சரவணபவன் அண்மையில் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொருட்படுத்தவே தேவையில்லாதவை.

விவாதம்

# எத்தனை அரசியல்வாதிகளின் பிள்ளைகள் நாட்டிலுள்ளனர்?

இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தில் இறங்கினர். இயக்கங்களின் முயற்சியும் வெற்றியடையவில்லை. ஆனால் இரண்டு வழிகளையும் "வெற்றியடையவில்லை" என்ற ஒரே முடிவுடன் அணுக முடி யாது. இரண்டின் அறுவடையும் வித்தியா சமானவை.

ஜனநாயக வழி பயணத்திற்கு 1980களில் இளைஞர்கள் துப்பாக்கியுடன் களத்திற்கு வந்தபோது, பூச்சியத்திலிருந்தே கணக்கை ஆரம்பித்தனர். முப்பது வருடம் அகிம்சை வழியிலும் போராடினோம் என எங்காவது உரையாற்றவும், வட்டுக் கோட்டை தீர்மானத்தை மேற்கோள் காட்டவுமே ஜனநாயகவழி பயன்பட்டது. அதன்பின்னான ஆயுதப்போராட்ட காலம் தமிழர்களிற்கு புதிய அரசியல் முகவரிகளை ஏற்படுத்தியது.

பிரபாகரன் நந்திக்கடலில் சனங் களையும் விழுத்தி, தானும் விழுந்தார் என்ற சாரப்பட பேராசிரியர் நுஃமான் அண்மையில் ஒரு நேர்காணலில் கூறியிருந்தார். மிகவும் பிழையான கருத்து அது. பிரபாகரன் தனது அமைப்பை இல்லாமல் செய்து, தான் உருவாக்கிய நிர்வாக கட்டமைப்பை இல்லாமல்



▶ வத்தேகம பாரதி வித்தியாலயத்தின் 7 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் விஷ்னுதர்சன் என்ற மாணவர் இவர் சூரிய சக்தி மூலம் இயங்கும் முட்ச்சக்கர வண்டி ஒன்றை தயாரித்து அதற்கான அங்கீகாரத்தையும் பெற்றுள்ளார்.





▶ வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் வவுனியாவில் கரைதேடும் ஓடங்கள் நாடக நிகழ்வும் கலைஞர் கௌரவிப்பும் வவுனியா கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. வடமாகாண கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டார்.



▶ முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சின்னச்சாளம்பன் அன்பழகன் முன்பள்ளிக்கு பாண்ட் வாத்தியக் கருவி வடமாகாணசபை உறுப்பினர் க.சிவநேசனால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.



▶ லண்டனில் வசிக்கும் செல்வி கிஷ்னவி அவர்களின் பிறந்த தினத்தையொட்டி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. வன்னி மேம்பாட்டுப் பேரவையின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடந்தது.

# புலிகளிற்கு ஆயுதம் கொடுத்த நாயகன் பட ஹீரோ வேலு நாயக்கர்!

பீஷ்மர்

நாயகன் படத்தை பெரும்பாலானவர்கள் பார்த்திருப்பார்கள். வேலு நாயக்கர் என்ற தாதாவாக கமல் நடித்திருப்பார். மும்பையை ஆட்டிப்படைத்த தாதா வேலு நாயக்கர். மும்பையில் சேரிகள் நிறைந்த தாராவி பகுதியில் ஒரு ராஜ்ஜியத்தையே அமைத்து, சிற்றரசர் போல வாழ்ந்த வரதா பாய் (வரதராஜ முதலியார்) பற்றிய கதையை கற்பனை கலந்து நாயகன் படம் உருவானது. வரதா பாய்தான் படத்தில் வேலு நாயக்கர் ஆனார். சிலபல கற்பனை சம்பவங்களுடன் படத்தின் கதையும், முடிவும் அமைக்கப்பட்டிருந்தன. வரதா பாய் தமிழர். நிஜப்பெயர் வரதராஜ முதலியார். மும்பையில் வரதா பாயாக அறியப்பட்டார். அவர்தான் புலிகளிற்கு முதலில் ஆயுதங்கள் விற்றவர்!

இது சற்று ஆச்சரியமான தகவல்தான். அவரது தொடர்பின் மூலம்தான் புலிகளின் ஆயுதக்கடத்தல் வலையமைப்பு முளைவிட ஆரம்பித்தது. பின்னாளில் உலகத்திற்கே தலைசுற்றவைத்த வலையமைப்பின்


வரதா பாய்




தொடக்க புள்ளியாக வரதா பாயும் இருந்தார்.

புலிகளின் ஆயுத இறக்குமதியை பற்றிய தகவல்களுடன் ஆரம்பித்த இந்த பகுதியில் கடந்த இரண்டு வாரங்கள் இடைச்செருகலாக ஆர்.பி.ஜி பற்றிய சில தகவல்களை குறிப்பிட்டிருந்தேன். இப்பொழுது மீண்டும் புலிகளின் ஆயுத விநியோகம் பற்றிய தகவல்களை குறிப்பிடுகிறேன். விடுதலைப்புலிகளின் ஆயுதவிநியோக வலையமைப்பு எப்படி உருவாக்கப்பட்டது? யார் யார் சம்பந்தப்பட்டார்கள்? எப்படி இயங்கியது? எப்படி வீழ்ந்தது? என்பதை பற்றிய முழுமையான தகவல்களை தரவுள்ளேன். விடுதலைப்புலிகளை அழிப்பதென்றால், முதலில் எதை செய்ய வேண்டும் என்பதை சரியாக புரிந்து கொண்டு, அமெரிக்கா, கனடா புலனாய்வு அமைப்புக்கள் ஐரோப்பிய புலனாய்வு அமைப்புக்களுடன் இணைந்து கச்சிதமாக செய்ததே புலிகளின் வெளிவிநியோகத்தை நிறுத்தியது. இது புலிகளின் ஆணிவேரையே அறுத்தது.

தமது ஆணிவேர் அறுக்கப்பட்டமைக்கு புலிகளின் சில தவறான முடிவுகளும் காரணமாக அமைந்தன என்பதே இங்கு குறிப்பிட வேண்டிய விடயம். அவசரகதியில் புலிகள் எடுத்த சில முடிவுகள், சமநேரத்தில் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புக்களின் பிடி புலிகள் மீது இறுகியதெல்லாமே நடந்தது. சம்பவ ஒழுங்கில் இவை பற்றி பார்ப்போம்.

புலிகளின் ஆயுதக்கொள்வனவு 1980களின் தொடக்கத்தில் நடந்ததென்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். அப்பொழுது இந்தியாவில் புலிகள் உள்ளிட்ட இயக்கங்கள் இந்தியாவில் தங்கியிருந்தன. யாழ்ப்பாணத்தை சேர்ந்த செல்வராசாவை பத்மநாதன் (குமரன் பத்மநாதன் கே.பி) ஆங்கில அறிவுடன் இருந்தார். இந்தியாவில் இருந்த சில கள்ளச்சந்தை வியாபாரிகளுடன் இவருக்கு ஏற்பட்ட தொடர்பின் மூலம், வரதா பாயின் அறிமுகம் ஏற்பட்டது. இந்த அறிமுகத்தை வளர்த்து, அவர் மூலம் ஆயுதங்களை கொள்வனவு செய்ய பிரபாகரன் விரும்பினார். வரதா பாயுடன் ஒரு டீலை முடித்து கொஞ்ச ஆயுதங்களை வாங்கும் பொறுப்பு கேபியிடம் வழங்கப்பட்டது.


பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம், கேபி (நடுவில் உட்கார்ந்திருப்பவர்), சங்கர்


நடிகர் திலீப்குமார், அவரது மனைவி சாயிரா பானுவுடன் மஸ்தான்


எம்.16 துப்பாக்கியுடன் பிரபாகரன் 1984 இல் எடுக்கப்பட்டது.

இதுதான் கேபி புலிகளின் ஆயுதக் கொள்வனவாளராக மாறிய சம்பவம். இந்த பணியில் அவர் தேர்ச்சியானவராக மாறி, உலகத்தின் கண்ணில் விரலை விட்டு ஆட்டியது பின்னர் நடந்தது.

1983களில் இது நடந்தது. தமிழ் இளைஞர்களின் போராட்டத்தை வரதா பாய் (வரதராஜா முதலியார்) ஆதரித்தார். இந்தியாவில் தங்கியிருந்து இயக்கங்கள் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்த சமயத்தில், பெரிய நிதித்தேவை இருந்தது. ஈழப்போராளிகளை ஆதரித்த தனவந்தர்கள், அரசியல் பிரமுகர்களை சந்தித்து ஒவ்வொரு அமைப்பும் நிதி சேகரித்துக் கொண்டிருந்தார்கள். ஈழப்போராளிகளை அப்பொழுது இந்தியாவில் மீட்பர்களாக பார்த்த காலம். புகையிரதத்தில் டிக்கெற் இல்லாமல் போராளிகள் பயணிப்பார்கள். டிக்கெற் பரிசோதகர்கள் வந்தால், போராளிகளிற்கு தேனீர் வாங்கிக் கொடுத்துவிட்டு செல்லும் சம்பவங்களும் நடந்துள்ளன.

வரதா பாய் நேரடியாகவே இயக்கங்களிற்கு உதவியர். புலிகள், புளொட் ஆகிய இரண்டு இயக்கங்களிற்கும் நிதியுதவி செய்தார். மும்பை தாராவி பகுதியில் போதைப்பொருள் கடத்தல், ரியல் எஸ்டேட், கட்டப்பஞ்சாயத்து என ஒரு முகத்தையும், மக்களின் காவலன், ஏழை எளியவர்களின் கல்வி, திருமணத்திற்கு நிதியுதவி அளிப்பது, வீடற்றவர்களிற்கு வரும் பிரச்சனைகளை சமாளிப்பதென இரட்டை முகம் காட்டிக்கொண்டிருந்தவர் வரதா பாய். இயக்கங்களிற்கு நிதியளித்து, போராட்டத்தை ஊக்கப்படுத்தியது அவரது இன்னொரு பக்கம்.


ஆப்கானிஸ்தானில் இருந்து போதைப் பொருட்களையும் வரதா பாயின் நண்பரான மும்பையின் இன்னொரு புகழ்பெற்ற தாதா ஹாஜி மஸ்தான் (இவரும் தமிழர்தான்) கடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆப்கானிஸ்தானில் சோவியத் ஒன்றியப் படைகள் நிலைகொண்டிருந்தன. சோவியத் படைகளிற்கு எதிராக போரிட்ட ஆப்கான் முஜாகிதீன்களிற்கு பாகிஸ்தான் ஊடாக அமெரிக்க நிதியும், ஆயுதமும் அளித்துக் கொண்டிருந்தது. ஆப்கான், பாகிஸ்தானை மையமாக கொண்ட நிழல் உலக தாதாக்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்களிற்கு அந்த சமயத்தில் இன்னொரு வர்த்தகம் பிடிபட்டது. சோவியத்திற்கு எதிராக அமெரிக்கா தாராளமாக விநியோகித்த ஆயுதங்களை கள்ளசந்தையில் விற்பதே அது.

வரதா பாய் அப்பொழுது அனைத்திலிருந்தும் ஒதுங்கி, சென்னைக்கு வந்து விட்டார்தான். ஆனால் ஹாஜி மஸ்தான் ஊடாக சில தொடர்புகளை ஏற்படுத்தி இதை செய்து கொடுத்தார். புலிகளும், புளொட்டும் ஆயுதங்கள் வாங்க விரும்பிய போது, அவர் தயக்கமின்றி உதவினார். ஆப்கான், பாகிஸ்தான் கள்ளச்சந்தைகளில் இருந்து சிறிய தொகையான துப்பாக்கிகளையும், கையெறி குண்டுகளையும் இரண்டு இயக்கங்களும் வாங்கின. இப்படித்தான் புலிகளிடம் முதன்முதலில் அமெரிக்க தயாரிப்பான எம்.16 துப்பாக்கிகள் வந்தன. சோவியத்திற்கு எதிராக பாவிக்க அமெரிக்க கொடுத்த துப்பாக்கிகள், இந்தியா வழியாக இலங்கைக்கு வந்தது!

இதற்கு அடுத்ததாகவே, ஆர்.பி.ஜிக்களை ஆப்கானிஸ்தானிலிருந்து புலிகள் வாங்கினார்கள். ஆப்கான், பாகிஸ்தான் சந்தையிலிருந்து ஆயுதங்களை இரண்டு இயக்கங்களும் சிறியளவில்தான் வாங்கின. சில தடவைகள் இங்கு ஆயுதம் வாங்கியதும், தாய்லாந்து, இந்தோனேசியா, பர்மா, கம்போடியாவை உள்ளடக்கிய தென்கிழக்காசிய நாடுகளை மையமாக கொண்ட கறுப்புச்சந்தை வியாபாரிகளின் தொடர்பு கேபிக்கு கிடைக்க, 1984இன் தொடக்கத்திலேயே தாய்லாந்திற்கு சென்றுவிட்டார். இந்த தொடர்புகளின் மூல காரணம், வரதா பாய்தான்.

இங்கிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்து அனுப்ப கேபி முயன்றுகொண்டிருந்தார். ஆனால், அதற்குள் புளொட் முந்தி விட்டது. ஈழப்போராட்ட இயங்களிற்குள் முதன்முதலாக வெளிநாட்டிலிருந்து கப்பல் மூலம் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு வந்த இயக்கம் புளொட்தான். ஆனால் அவர்களின் சரியான திட்டமிடல் இன்மையால் அதை இறக்க முடியவில்லை. சென்னை துறைமுகத்தில் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டு விட்டது. ஆனால் அடுத்த வருடம்1985 தொடக்கத்திலேயே புலிகள் ஆயுதங்களை கப்பலில் ஏற்றி வந்து கச்சிதமாக இறக்கினார்கள். இந்த இடத்தில்தான் கேபியின் துல்லியமான திட்டமிடலும், புத்திசாலித்தனமும் வெளிப்பட்டது.

(தொடரும்)



## அலுவலகத்திற்கு நீந்திச் செல்பவர்!

போக்குவரத்து நெரிசலால் குறிப்பிட்ட நேரத்தில் அலுவலகத்திற்கு செல்ல முடியாமல் சிரமப்படுபவர்கள்தான் பலர். அவர்களின் மத்தியில் வித்தியாசமானவராக இருக்கிறார் இவர். ஜெர்மனியை சேர்ந்த பெஞ்சமின் டேவிட் என்ற இந்த 40 வயதுக்காரரை பற்றி ஜெர்மனியே பேசிக்கொண்டிருக்கிறது. போக்குவரத்து நெரிசலிற்கு இவர் கண்டுபிடித்துள்ளது அப்படியொரு தீர்வு.

முனிச் நகரத்தில் கடுமையான போக்குவரத்து நெரிசல் உள்ளது. காலையில் இன்னும் அதிகம். இவரது வீட்டிலிருந்து அலுவலகம் 2 கிலோமீற்றரில் உள்ளது. புகையிரதம், பேருந்து, சைக்கிளில் தினமும் சென்று பார்த்தார். அலுவலகத்திற்கு நேரத்திற்கு செல்ல முடியவில்லை. இதனால் அங்குள்ள நதியொன்றை நீந்திக்கடந்து அலுவலகத்திற்கு செல்கிறார். 2 கிலோமீற்றர் நீந்தினால் அலுவலகத்தை அடைகிறார்.

தண்ணீர் புகாத பையில் அலுவலக உடை, சாப்பாடு என்பவற்றை எடுத்து கொள்கிறார். நீந்தி கரையேறியதும் உடைமாற்றி குறிப்பிட்ட நேரத்தில் அலுவலகத்திற்கு சென்றுவிடுகிறார். நீந்திச்செல்வதால் உடம் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதாக சொல்கிறார்.

நீந்தி அலுவலகத்திற்கு செல்ல ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளாகியும், ஒருநாள் கூட பிந்தி செல்லவில்லையாம்.

ஆரம்பத்தில் எல்லோரும் இவரைப் பார்த்து சிரித்துள்ளனர். இப்பொழுது இவரது நடவடிக்கை சரியென்கிறார்களாம். முனிச் நகரத்திற்கு ஒவ்வொரு வருடமும் புதிதாக 30 ஆயிரம் பேர் வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ட்ரம்பிற்கு வந்த சோதனை!

வடக்கு இத்தாலியில் ஏ.டி.எம் மையம் ஒன்றில் அமெரிக்க அதிபர் டிரம்ப் போல் முகமூடி அணிந்து கொள்ளையில் ஈடுபட்ட சகோதரர்களை காவல் துறையினர் கைது செய்திருக்கின்றனர்.


சுமார் 1 லட்சம் யூரோ கொள்ளை போன இச்சம்பவத்தில்,காவல்துறையினர் நடத்திய விசாரணையில், அவர்கள் இருவரும் 1997ம் ஆண்டு வெளிவந்த 'தி ஜாக்கில்' என்ற திரைப்படத்தைப் பார்த்து அது போன்ற கொள்ளையில் ஈடுபட்டது தெரியவந்திருக்கிறது.

தற்போது அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம், டிரம்ப் முகமூடி மற்றும் ஏ.டி.எம் இயந்திரத்தை உடைக்கப் பயன்படுத்திய பொருட்கள் ஆகியவற்றையும் காவல்துறையினர் கைப்பற்றியிருக்கின்றனர்.



## சீனாவுக்கு கடமைப்பட்டுள்ளோம்: பாகிஸ்தான் ராணுவ தளபதி

"காஷ்மீர் விஷயத்தில் துயக்கம் எதுவுமில்லாமல் பாகிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் சீனாவுக்கு கடமைப் பட்டுள்ளோம்" என்று பாகிஸ்தான் ராணுவ தலைமை தளபதி கமார் ஜாவேத் பாஜ்வா கூறியுள்ளார்.



சீனராணுவத்தின் 90ம் ஆண்டுவிழாவை அந்நாட்டு அரசு கொண்டாடியது. பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரில் உள்ள சீன தூதரகத்திலும் கடந்த வாரம் இதற்கான கொண்டாட்டம் நடந்தது. அந்த நிகழ்ச்சியில் பாகிஸ்தான் ராணுவ தலைமை தளபதி கமார் ஜாவேத் பாஜ்வா பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது:

காஷ்மீர் பிரச்சினை, அணு விநியோக கூட்டமைப்பு, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் பாகிஸ்தானை உறுப்பினராக்கும் முயற்சி போன்ற முக்கிய விஷயங்களில் தயக்கம் இல்லாமல் பாகிஸ்தானுக்கு சீனா ஆதரவு அளித்து வருகிறது. அதற்காக சீனாவுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இந்தப் பிராந்தியத்தில் சீனாவும் பாகிஸ்தானும் போர் திறன் சார்ந்த முக்கிய நாடுகளாக உள்ளன. இரு நாடுகளும் பரஸ்பரம் நம்பிக்கை, மதிப்பு, புரிதல், ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நட்புறவாக உள்ளன. உண்மையில் இந்த உறவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்தப் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட சீன ராணுவம் மற்றும் பாகிஸ்தான் ராணுவத்துக்கு இடையில் உள்ள தொழில்ரீதியான கூட்டணி தொடரும். உலகிலேயே மிகப் பெரிய ராணுவ பலம் கொண்ட நாடாக சீனா திகழ்கிறது. அந்த ராணுவத்துடன் நட்புறவுடன் இணைந்து போர் பயிற்சி உட்பட எல்லா விஷயங்களிலும் பணியாற்றுவது பெருமையாக இருக்கிறது. ஆப்கானிஸ்தான் விஷயத்திலும் நிபந்தனையற்ற ஆதரவை பாகிஸ்தானுக்கு சீனா வழங்கி வருகிறது. எனவே, சீனாவோடு தோளோடு தோள் நிற்போம்.

இவ்வாறு பாகிஸ்தான் ராணுவ தலைமை தளபதி கமார் ஜாவேத் பாஜ்வா கூறினார்.

## அத்துமீறியவர்கள் திரும்பும் வரை சமரசமில்லை; சீனா திட்டவட்டம்!

சிக்கிம் மாநில எல்லையை ஒட்டிய டோக்லாம் பகுதியில் அத்துமீறி நுழைந்துள்ள இந்திய ராணுவம் திரும்பப் பெற வேண்டும் என்று இந்தியாவிடம் தெளிவாகக் கூறியுள்ளது சீனா.


பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம் கடந்த வாரம் பெய்ஜிங்கில் நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக அங்கு சென்ற இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் சீன பாதுகாப்பு ஆலோசகர் யாங் ஜீச்சியை தனியாக சந்தித்துப் பேசினார். இதன்போதே சீனாவின் நிலைப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சீனாவின் இறையான்மை, சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச நாடுகளுக்கிடையிலான உறவின் அடிப்படை விதிகள் ஆகியவற்றுக்கு இந்தியா மதிப்பளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதுபோல,எல்லை பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு கிடைக்க வேண்டுமானால்,இரு நாட்டு ராணுவமும் டோக்லாம் பகுதியிலிருந்து திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜும் கடந்த மாதம் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நவாஸ் ஷெரீப் சிக்கிய கதை!

பாகிஸ்தான் பிரதமராக பதவி வகித்த நவாஸ் ஷெரீப் பதவியில் இருந்து விலகியுள்ளார். ஊழல்குற்றச்சாட்டில் சிக்கியதால் அவரை பதவியில் இருந்து நீக்கியும், அவர் மீது வழக்கு பதிவுசெய்து விசாரணை செய்யவும் அந்த நாட்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நவாஸ் ஷெரீப்பின் பதவிநீக்கத்திற்கு சில காலத்தின் முன் வெளியான பனாமா பேப்பர்ஸ்தான் காரணம்.

மத்திய அமெரிக்கா நாடான பனாமா நாட்டின் மொசாக் பொன்சேகா சட்ட நிறுவனத்தின் உதவியுடன் பல பிரபலங்களும், நிறுவனங்களும் வெளிநாடுகளில் முறைகேடாக முதலிட்டிருந்தனர். சர்வதேச புலனாய்வு பத்திரிகையாளர் கூட்டமைப்பு கடந்த ஆண்டு இந்த விபரங்களை இரகசியமாக பெற்று வெளியிட்டிருந்தனர். 360,00 தனிநபர், நிறுவனங்களின் பெயர் விபரங்கள் இதில் இடம்



பெற்றிருந்தன. மொசாக் பொன்சேகா நிறுவனத்தின் டேட்டாபேஸில் இருந்து சுமார் 1.15 கோடி பக்க ஆவணங்கள் கசிந்திருந்தன.

இந்தி நடிகர் அமிதாப்பச்சன், அவரது மகன் அபிஷேக்பச்சன், ஐஸ்வர்யா ராய் மற்றும் சில இலங்கையர்களின் பெயரும் அந்த பட்டியலில் இருந்தது.

1990 களில் பிரதமராக இருந்தபோது, சட்டவிரோதமாக இலண்டனில் சொத்துக்குவிப்பில் ஈடுபட்டதாக பனாமா பேப்பர்ஸ் ஆவணங்கள் குறிப்பிட்டிருந்தன. இந்த சொத்துக்களை அவரது மகன்கள், மகள் நிர்வகித்து வந்தனர். இதனையடுத்து, ஷெரீப்பை பதவிநீக்கம் செய்யுமாறு அந்தநாட்டின் எதிர்கட்சி தலைவர் இம்ரான்கான் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதன்பின் வாஜித் ஜியா தலைமையிலான விசாரணைக்குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது.

ஷெரீப் குடும்பத்தின் வருவாய் மற்றும் சொத்து ஆவணங்களில் நிறைய குளறுபடிகள் விசாரணையில் கண்டறியப்பட்டது. இந்தநிலையில் லண்டன் சொத்திற்கும் தங்கள் குடும்பத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சில ஆவணங்களை ஷெரீப்பின் மகள் மரியம் நவாஸ் சமர்ப்பித்திருந்தார். இந்த ஆவணங்கள்தான் நவாஷிற்கு சிக்கலை கொடுத்துள்ளது. நவாஷ் தரப்பின் ஆவணங்களையே, தமக்கான சாட்சியாக விசாரணைக்குழு மாற்றியது.

2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் திகதியிட்ட ஆவணங்கள் அனைத்தும் 'கலிப்ரி' (Calibri) என்ற ஆங்கில எழுத்துருவில் (font) தயாரிக்கப்பட்டிருந்தன. விண்டோஸ் 2007 ஒபரேட்டிங் சிஸ்டத்தின் டிபோல்ட் (Default) எழுத்துருவாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் 2007ஆம் ஆண்டுதான் வர்த்தகரீதியாக வெளியிடப்பட்டது.

லூகாஸ் டி. குரூட் (Lucas De Groot) என்பவர்தான் இந்த எழுத்துருவை வடிவமைத்தவர். 2002 இல் இதை வடிவமைக்க ஆரம்பித்து, 2004 இல் மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு அனுப்பினார். அதன்பின் 2006 மே மாதம் தான் முதன்முதலில் டெவலப்பர்களுக்கான பீட்டா வடிவமாக வெளியிடப்பட்டது. ஆனால் மரியம் நவாஸ் சமர்ப்பித்த ஆவணங்கள் 2006ம் ஆண்டு பெப்ரவரி என திகதியிடப்பட்டிருந்தன. எனவேதான் அவர்கள் சமர்ப்பித்தவை போலி ஆவணங்கள் என விசாரணைக் குழு முடிவு செய்தது.

யாழ் புகையிரத
நிலையத்துக்கு அருகாமையில்
சகல வசதிகளுடனும்
அதி உயர்தர
வலம்புரி ஹோட்டல்.



Green Grass

The Valampı

148/10 Railway Station Rd, Jaffna 40000

Phone: 021 2 220111

10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

Bright Inn

BRIGHT INN

பிறையிட் இன் ஹோட்டல்




அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | | |

BRIGHT INN

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசஞ்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு

0112 329664, 0117 242233, 0117 242244

E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com

HOT LINE 0777 983933

அபி வீடியோ - போட்டோ

மணப்பந்தல் சேவை | வீடியோ எடிட்டிங் | சவுண்ட் சேர்விஸ்



697 கச்சேரி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
உரிமையாளர் : சித்தன்
0771082166, 0776922197, 0768846178.

TILKO

JAFFNA CITY HOTEL

TILKO hotels




Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com

Mob : 077 780 393, 0777 696 443



# சூரியா ஐஸ் கிறீம்

சுவையான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழ்ந்திட சூரியா ஐஸ் கிறீம்

நல்லூர், யாழ்ப்பாணம். 0777747864







தலைநகர் கொழும்பு வெள்ளவத்தையில்
குறிக்கப்பட்ட நேரத்துக்குள் சிறந்த முறையில்
பக்க வடிவமைப்புடன், அனைத்து வகையான நூல்
மற்றும் பாடசாலை மாணவர்களின் ஆக்க
ஆவணங்களுக்கனா வயின்டிங் வேலைகள் மற்றும்
அனைத்து வேலைகளையும் செய்துகொள்ள

# OSAI DIGTAI

வெள்ளவத்தை, கொழும்பு. 0094777310709

# KMAS Engineering Contractors

ஆடம்பரமான சொகுசு மளிகைகள், மண்டபங்கள், விடுதிகள், வசிப்பதற்குரிய வீடுகள் போன்ற கட்டிட வேலைகளை உடனுக்குடன் உத்தரவாதத்துடன் மிக குறைந்த பெறுமதியில் சேவை செய்யும் ஒரே நிறுவனம் Kmas Engineering Contractors.





வாஸ்து சாஸ்திரம் படி கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படும், புதிய கட்டிட வடிவமைப்புகள், மனித வள முகாமைத்துவ திறமைகள், சிறந்த தரத்துடனான சேவைகள், புதிய முறையிலான இயந்திர பாவனை, குறுகியளவான கால எல்லையில் வேலைகள் யாவும் செய்து தரப்படும்.





06, Vanniyasingam Road, Inuvil, Jaffna Contact: 009421 2 242227,0094773867599
Email: kmasengineering@gmail.com Web Site :www.kmasengineering.lk

நல்லூர் கந்தன் வருடாந்த உற்சவம் சிறப்புற வாழ்த்துகிறார்கள்.



# Thillai Wedding Service

உங்கள் வாழ்வில் இடம்பெறும் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் விழா போன்ற மங்களகரமான வைபவங்களுக்கு தேவையான மணவறை, தங்க மணவறை, பலூன் அலங்காரம் மற்றும் அலங்காரம், போன்ற சகல விதமான சேவைகளையும் எம்மிடம் சிறப்பான முறையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
**Thillai Wedding Service**





Contact : 077 889 0428
No-14 Bandaranayaka mawatha, kalubowila, dehiwala Sir lanka.

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 06.08.2017 அன்று வெளியிடப்பட்டது.